விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

33°c - 25°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 93 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 15, சனிக்கிழமை 27.02.2016

## நாமலின் ஆதங்கம்

கொழும்பு, பெப். 27
நல்லாட்சியில் ஈடுபடுபவர்களுக்கும் பிள்ளைகள் உண்டு. அவர்களின் பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள் என்று, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாமல் ராஜபக்சவின் சகோதரர் யோசித ராஜபக்ச உள்ளிட்டவர் களுக்கு 2 ஆவது முறையாகவும் பிணை வழங்க மறுத்த கடுவலை நீதிவான் தம்மிக ஹேமபால, பக். 23



# சர்வதேசப் பங்களிப்பை ஏற்றுக்கொள்ளத் தயார்

## போர்க்குற்ற விசாரணை குறித்து வொசிங்டனில் மங்கள உறுதி

வொசிங்டன், பெப்ரவரி 27
போரினால் பாதிக்கப்பட்டோர் ஏற்றுக் கொள்ளத்தக்க நீதிமன்றப் பொறிமுறை ஒன்றையே அமைக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இதன்போது வெளிநாட்டவர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.
இவ்வாறு தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.
அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியுடனான சந்திப்பின் பின்னர், அமைதிக்கான அமெரிக்க நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
போர்க் குற்றங்கள் குறித்து உள்நாட்டு விசாரணையே நடத்தப்படும் என்றும் வெளிநாட்டவர்கள் பங்கேற்கமாட்டார்கள் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்து, அது அவரது கருத்து மட்டுமே.
ராஜபக்ச ஆட்சியில் பக். 23



## மீள்குடியமர்வைப் பாதிக்காமல் பலாலி விமானத்தள விஸ்தரிப்பு

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் மீள்குடியேற்ற அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், பெப். 27
மக்களின் மீள்குடியமர்வை எந்த விதத்திலும் பாதிக்காத வகையில், பலாலி விமான நிலைய விஸ்தரிப்பை மேற்கொள்வதற்கு, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் இணக்கம் தெரிவித்துள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் பக். 23

## வலி.வடக்கு மீள்குடியமர்வை வலியுறுத்தி உணவு தவிர்ப்பு

### வெள்ளியன்று மேற்கொள்வதற்கு நலன்புரி நிலைய மக்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 27
வலி.வடக்கில் மீளக்குடியமர்த்துமாறு கோரி, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை, அவரவர் நலன்புரி நிலையங்களில் அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக, நலன்புரி நிலைய பக். 23

## வவுனியா மாணவிக்கு நீதி கோரி மன்னாரில் நேற்றுக் கவனவீர்ப்பு

மன்னார்,பெப்.27
பாலியல் வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட வவுனியா மாணவியின் படுகொலையைக் கண்டித்து மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
மன்னார் மத்திய பஸ் தரிப்பிடத்தில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (மேலதிக செய்தி 8ஆம் பக்கத்தில்)

## கைதிகளின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, பெப்.27
கொழும்பு, மகசின் சிறைச்சாலையிலும், அநுராதபுரம் சிறைச்சாலையிலும் தமிழ் அரசியல் கைதிகள் ஆரம்பித்த உணவுத் பக். 24

## வடக்கில் இராணுவ முகாம்கள் படிப்படியாகக் குறைக்கப்படும்

### கூறுகிறார் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே

கொழும்பு, பெப். 27
வடக்கு மாகாணத்திலுள்ள இராணுவ முகாம்கள் படிப்படியாகக் குறைக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண ஆளுநராகப் பதவியேற்ற ரெஜினோல்ட் கூரேயை வரவேற்கும் வைபவம் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. கொழும்பிலுள்ள வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பக். 24

## வடமராட்சி கிழக்கில் நேற்று முழு அடைப்பு



யாழ்ப்பாணம், பெப்.27
வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தைக் கைவிடக் கோரியும் வடமராட்சி கிழக்கில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ள வீதிகளைப் புனரமைக்குமாறு கோரியும், நேற்று முழு அடைப்புப் போராட்டமும், கண்டனப் பேரணியும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் மக்களின் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது. அத்துடன் இ.போ.ச. பஸ் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (மேலதிக செய்தி 2ஆம் பக்கத்தில்)

## வவுனியா மாணவியின் படுகொலை; கைதானவருக்கு மரபணுச் சோதனை

யாழ்ப்பாணம், பெப். 27
வவுனியா மாணவி வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு வவுனியா நீதிவான் பக். 25

## வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டம் மார்ச் 24 இல்

யாழ்ப்பாணம், பெப். 27
வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்படும் புதிய அரசமைப்புக்கான தீர்வுத் திட்டம் அடுத்த மாதம் 24 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பக். 25

முச்சந்தி முரளி



உள் நாட்டில ஒண்டு வெளி நாட்டில வேறொண்டு பாருங்கோ...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் நேற்று முழு அடைப்பு



## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு; பஸ் மீதும் கல்வீச்சு

## கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தைக் கைவிட வலியுறுத்தி



வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தைக் கைவிட வலியுறுத்தியும், வடமராட்சி கிழக்கில் நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ள வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு கோரியும், நேற்றைய தினம் முழு அடைப்புப் போராட்டமும், கண்டனப் பேரணியும் மேற் கொள்ளப்பட்டது.

இதனால் மக்களின் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது. அத்துடன் இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கில் முழு அடைப்பு மற்றும் கண்டனப் பேரணிக்கான அழைப்பை, வடமராட்சி கிழக்குக் கடற்றொழில் சமாசங்கள், வடமராட்சி கிழக்குப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தினர் ஆகியோர் விடுத்திருந்தனர்.

வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பகுதியில் இருந்து கடல் நீரை நன்னீராக்கி யாழ்ப்பாணத்துக்கு விநியோகம் செய்யும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. மக்களிடம் எந்த ஆலோசனையும் கேட்காமல் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தை உடனடியாகக் கைவிடுமாறு வலியுறுத்தப்பட்டது. வடமராட்சி கிழக்கில் பல ஆண்டுகளாக எந்தவித புனரமைப்பும் செய்யப்படாமல் இருக்கும் வீதிகளைப் புனரமைத்துத் தருமாறும் இதன் போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பேரணியில் பல நூற்றுக்கணக்கானோர் பங்கு கொண்டு தமது பூரண எதிர்ப்பை வெளியிட்டனர். முன்னதாக நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆழி யவளை கடற்கரைக்கு அருகில் ஒன்று கூடிய நூற்றுக்கணக்கான மக்கள் பேரணியாக மருதங்கேணியில் உள்ள பிரதேச செயலக முன்றிலை அடைந்தனர்.

பேரணியில் பங்கேற்ற மக்கள் பல்வேறு கோசங்களை எழுப்பியதோடு சுலோகங்களைத் தாங்கியிருந்தனர். இந்தப் பேரணி நகர்ந்து மருதங்கேணிப் பிரதேசசெயலக முன்றிலை அடைந்தவுடன் தயாராக நின்ற பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டது. பேரணியில் கலந்து கொண்ட மக்களில் சில பிரதிநிதிகள் மட்டும் பிரதேச செயலகத்துக்குள் சென்று பிரதேச செயலருடன் பேச்சு நடத்த அனுமதியளிக்கப்பட்டது. இதனை அடுத்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரனுடன் பேச்சு நடத்தினர். இதனை அடுத்து பிரதேச செயலர் பிரதேச செயலக வாயிலுக்குப் பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டார். அவர் மக்களுடன் பேச்சு நடத்தினார். அத்துடன் பிரதேச செயலர் அங்கு திரண்டிருந்த மக் கள் மத்தியில் உரையாற்றினார்.

அவர் தனது உரையில்,

உங்களால் இரு வேண்டுகோள்கள் எனக்கு முன் வைக்கப்பட்டுள்ளன. முதலாவது குடிதண்ணீரை நன்னீராக்குதல் சம்பந்தமான பிரச்சினை. மற்றையது வீதி புனரமைப்பு. இரண்டு கோரிக்கைகள் தொடர்பிலும் நான் பூரண கவனம் செலுத்துவதோடு பிரதேச செயலர் என்ற ரீதியில் எனது பூரண ஆதரவைத் தெரிவிப்பதோடு உங்களுக்காகச் சகல வகையிலும் எனது ஒத்துழைப்பை வழங்குவேன். கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தின் ஆய்வுகள் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படுகின்றது. அதற்குத் தாளையடியில் சந்தித்த சில மக்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்த நிலையிலேயே பெரும் தொகைச் செலவில் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால் அதற்கு இன்று உங்கள் பூரண எதிர்ப்பைக் காட்டியதால் நான் இன்றே இது தொடர்பில் அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவர் ஊடாக இந்தத் துறைக்கு அமைச்சராக இருக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கவனத்துக்குக் கொண்டு செல்ல முயற்சி எடுப்பேன் எனத் தெரிவித்தார்.

அத்துடன் உங்கள் வீதிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். குறிப்பாக வடமராட்சி கிழக்கில் நீங்கள் குறிப்பிட்ட வீதிகள் அரசியல் வாதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படும். சில வற்றுக்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது –என்றார்.

இந்த முழுஅடைப்பு மற்றும் கண்டனப் போராட்டத்தால், வடமராட்சி கிழக்கில் உள்ள கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்தன.

வீதிகள் மக்களின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. வடமராட்சி கிழக்குக்கான சேவைகளை வழங்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களும் தனியார் பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை.



இதனால் பாடசாலை செல்லத் தயாராக இருந்த மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தனர். பஸ்கள் மூலம் பாடசாலை செல்லும் மாணவர்கள் பஸ் சேவைகள் எவையும் இடம்பெறாததால் சிரமத்தை எதிர்கொண்டனர். இதனால் வடமராட்சி கிழக்கின் பாடசாலைகள் இயங்க முடியாத சூழல் ஏற்பட்டதாக வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்தார். இதேவேளை, நேற்றைய தினம் ஆழிய வளையில் தரித்து நின்ற இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் மீது இனந்தெரியாதவர்கள் கல் வீசித் தாக் குதல் நடத்தினர்.

இதனால் பஸ் கண்ணாடிகள் சேதமடைந்ததாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். பஸ் நிறுத்தப்பட்ட இடத்துக்கு அருகில் பதுங்கியிருந்த நபர்கள் அதிகாலை வேளை கல்வீசித் தாக்குதல் நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சேதமடைந்த பஸ் பளை பொலிஸ் நிலையம் எடுத்து செல்லப்பட்டது. பின்னர் டிப்போவிடம் கையளிக்கப்பட்டதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஜ-5-109)



## தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் யோகராஜன் ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் கொழும்புக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளரால் இது பற்றிய கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகக் கல்லூரித் தரப்பினர் தெரிவித்தனர்.

இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதால் அவரது பொறுப்பிலுள்ள அரசுக்குச் சொந்தமான [illegible] துக்கள் அனைத்தையும் அலுவலகப் பொறுப்புக்களையும் மேலதிக பணிப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டு கொழும்புக்கு வருமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது கடமையைப் பொறுப்பேற்கும் வகையில் தற்போதைய மேலதிக பணிப்பாளர் [illegible] நியமிக்கப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-4)

## புதன்கிழமை ஆளுநரை மக்கள் சந்திக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.27

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை எதிர் வரும் 2 ஆம் திகதி புதன் கிழமையிலிருந்து, பிரதி புதன் கிழமைகள் தோறும் யாழ்ப் பாணத்திலுள்ள ஆளுநரின் அலுவலகத்தில் (மாவட்டச் செயலகம் முன்பாக) பொதுமக்கள் நேரில் வந்து சந்திக்க முடியும் என்று ஆளுநர் அலு வலகம் அறிவித்துள்ளது.

(த-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ashvitha Multi Fashion

### மாபெரும் மலிவு விற்பனை

பெண்கள், சிறுவர்களுக்குரிய அனைத்து விதமான ஆடைகளும், ஜுவலர்ஸ் வகைகளும் 25% விசேட கழிவுடனும், சிறந்த தரத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.

**ஞாயிறு : 28.02.2016**

568, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (ஆலயம் முன்பாக)

தொடர்புகளுக்கு: 077 6545120

(69634)(10.17.20)

## மேலதிக வருவாய்

**உங்கள் இல்லங்களில் சுற்றுலா பயணிகளுக்கு (Tourist) விருந்தினராக உபசரித்து மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.**

(69627)(15,17,20)

மேலதிக விபரங்களுக்கு:

**அசோக்கவாடிக்கா**
49-51, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P: 0777 360353, 0777 340026

## அழைப்பிதழ்

அப்பண்ணா நமசியண்ணா ஞாபகார்த்தமாக
ஆரம்பிக்கப்பட்ட
சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியத்தின்
10ஆவது ஆண்டுவிழாவும்
அவர்களால் நிறுவப்பட்ட
சதாபொன்ஸ் கல்வி நிலையத்தின்
**50ம் ஆண்டு பூர்த்தி**
**ஞாபகார்த்த மலர் வெளியீடும்.**

காலம் : 27.02.2016 சனிக்கிழமை
நேரம் : பி.ப. 2.00 மணி
இடம் : சதாபொன்ஸ் கல்வி நிலையம்

பிரதம விருந்தினர்
**திரு.சி.சத்தியசீலன் அவர்கள்**
(மீன்பிடி, போக்குவரத்து வர்த்தக வாணிப கிராமஅபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு, வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்
**திரு.S. சிவஸ்ரீ அவர்கள்**
(பிரதேச செயலர், கரவெட்டி)

**திரு. S.நந்தகுமார் அவர்கள்**
(வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)

**கலாநிதி செ. சேதுராஜா அவர்கள்**
(ஓய்வுநிலை அதிபர்,
யா/நெல்லியடி மத்திய கல்லூரி)

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சதாபொன்ஸ் கல்வி சமூக மேம்பாட்டு நிதியம்,
அல்வாய்

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.27

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும் என சங்கச் செயலாளர் ந.கனகலிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஐ–ரி)

### பணிப்பெண் தேவை

யாழ்நகரில் உள்ள சிறிய குடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரியத்தக்க பணிப்பெண் ஒருவர் தேவை.

T.P No: 071 1035 422, 077 3276 502

### அறைகள் வாடகைக்கு

யாழ் நகரில் மாணவிகள், தொழில்புரியும் பெண்கள் தங்கக்கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 076 705 1234

### வீடு விற்பனைக்கு

**தொல்புரத்தில் உள்ள வீடும் காணியும் விற்பனைக்கு**
**மடத்துப் பிள்ளையார் கோவிலுக்கு மிக அருகில் உள்ளது.**

(69629)(15,17,20)

தொடர்புகளுக்கு: சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்
076 8363 062, 077 0767 197

### பெண் உதவியாளர் தேவை

**ஆரோக்கியமான வயோதிபப் பெண்ணை தங்கியிருந்து பார்ப்பதற்கு பெண் ஒருவர் தேவை.**

(69628)(15,17,20)

தொடர்புக்கு: 076 7360 353

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

**GUNA BEST PC Computer Repair**
077 9086737
50/12, Hospital Road Jaffna.
(Vairavar Kovil lane)
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்பனை பாவித்த கணினிகள் வாங்குதல்

### வேலையாள்கள் தேவை

01. மேசன்மார்
02. தச்சுத்தொழிலாளி
03. அலுமினிய பிற்றிங் வேலை தெரிந்தவர்
04. பெயின்ரர்

(69624)(15,17,20)

தொடர்புகளுக்கு: 077 9583944

### வேலைவாய்ப்புக்கள்

- ❖ Receptionist
- ❖ Pharmacist
- ❖ Waiter / Room boy
- ❖ Sales (boys/girl)
- ❖ Accountant / Manager
- ❖ Clerk / Cashier

இந்த வேலைவாய்ப்புக்களை பெற விரும்பின் சுயவிவரக் கோவையுடன் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்.

(பதிவுக்கட்டணம் உண்டு)

**WINSTAR JOB BANK**
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
021 320 2789

(69623)(10.17.20)

### லக்ஸ்ன வசனா

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 26.02.16 | 1947 | சிவப்பு |

மகரம்

வெற்றி இலக்கங்கள்

**12 31 38 42**

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
**ரூ. 4,514, 440/-**

2016-02-28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

Tel: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space LW
1919

### நியத்த ஜய

| | |
|---|---|
| வெற்றி வாரம் | 440 |
| திகதி | 26.02.2016 |
| வர்ணம் | நீலம் |

வாசி தஹச

விசேட வெற்றி இலக்கம்
**1799**

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை
ஜக்பொட் பரிசுத்தொகை
**ரூ 12,574,620/-**

வெற்றி இலக்கங்கள்: **04 30 32 61** ஆங்கில எழுத்து: **A**

Tel: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space NJ
1919
Tel: 011 4 824 824

01.03.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

### ஆசிரியர் தேவை

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் பாலர் கல்வி சோலைக்கு ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர் ஒருவர் தேவை. கீழ்வரும் கல்வித் தகைமை **உடையவர்கள் 06.03.2016 இற்கு முன் தங்களது சுயவிவரக் கோவையினை " செயலாளர் " அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு தொலைபேசி மூலம் அறியத் தரப்படும்.

**கல்வித் தகைமை**

- க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் ஆங்கிலம், தமிழ் அடங்கலாக திறமைச்சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்.
- க.பொ.த (உ/த) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (சங்கீதம், நடனம் விரும்பத்தக்கது.)

நிர்வாகம்.

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### PHYSICAL EDUCATION UNIT

### WALK -IN – INTERVIEW

Walk in interview for appointment to the Visiting Instructor for the following fields will be held at **08.03.2016 at 9.30 a.m** at the Board Room of this University.

**Volley ball-Women / Chess-Men / Chess-Women /Karate / Rugby / Tennis**

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with self prepared application for the above post.

**Qualification**

a) A graduate of a recognized university who has been a member of a National Team / National Champion or other equivalent attainments in the field of sports with the prior approval of the UGC

**OR**

b) A candidate who has passed the G.C.E (A/L) Examination in one and the same sitting and who has represented Sri Lanka in any sport at International Level with five (05) years experience in such sports

**OR**

c) G.C.E (A/L) Examination in at least 03 subjects in one and the same sitting and a Diploma in Sports of not less than 09 months duration with five (05) years experience in organizing and implementing sports programmes.

| Post | Salary |
|---|---|
| Visiting Instructor | Rs. 750/- per hour |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and **self prepared application**.

**REGISTRAR**
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 29.02.2016
Batch 2 : 02.03.2016
Batch 3 : 05.03.2016
Batch 4 : 07.03.2016

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550

Hotlines
077 036 5728
0777585913, 0777222422, 071429935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பாதுகாப்பு அதிகாரிக்கு சொந்தமான தோட்டத்தில் தேடுதல்

## பணம், நகைகள், ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில்

கொழும்பு, பெப்.27

மகிந்த ராஜபக்சவின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி மேஜர் நெவில் வன்னியாராச்சிக்குச் சொந்தமான தென்னந்தோட்டத்தில், நேற்று பொலிஸார் நிலத்தைத் தோண்டித் தேடுதல் நடத்தியுள்ளார்.

மெதமுலானவில் உள்ள மேஜர் நெவில் வன்னியாராச்சியின் மூன்றரை ஏக்கர் தென்னந் தோட்டத்திலேயே நீதிமன்றின் உத்தரவையடுத்து இந்த தேடுதல் நடத்தப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மண் அகழும் இயந்திரங்களைக் கொண்டு நிலத்தைத் தோண்டி தேடுதல் இடம்பெற்றது.

பணம், நகைகள், ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மண் அகழப்படும் பகுதிக்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை.

சுமார் 20 வரையிலான சிறப்பு அதிரடிப்படையினர், அப்பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

மேஜர் நெவில் வன்னியாராச்சியினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துமாறு, கொழும்பு பிரதம நீதிவான் கிகான் பிலப்பிட்டிய அண்மையில் குற்றப் புலனாய்வுப்பிரிவு மற்றும் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

# யாழ். மாவட்டத்தில் 6,491 அங்கவீனர்கள்

## அரசின் உதவியோ 2,010 பேருக்கு மட்டுமே

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரத்து 491 அங்கவீனர்கள் உள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 10 பேருக்கு மத்திய அரசின் நிதி உதவியில் மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

ஏனையோருக்கும் இதே கொடுப்பனவை வழங்குமாறு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ள போதும், அதற்கான அனுமதி இதுவரையில் கிடைக்கவில்லை.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தமாக, 6 ஆயிரத்து 491 அங்கவீனர்கள் உள்ளதாக பதிவிடப்பட்டுள்ளது. இவர்களில் 2 ஆயிரத்து 10 பேருக்கு மட்டுமே தற்போது மத்திய அரசின் நிதி உதவியில் மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 92 பேரும் , நெடுந்தீவில் 164 பேரும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 275 பேரும் , ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் 150 பேரும் , காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 128 பேரும் உள்ளனர்.

அதேபோல் யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் 391 பேரும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 512 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 620 பேரும், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 362 பேரும், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 398 பேரும் வாழ்கின்றனர்.

இதேவேளை, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 426 பேரும் , கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 843 பேரும் , கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் 460 பேரும் , பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 196 பேரும் , மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 484 பேருமாகவே குறித்த 6 ஆயிரத்து 491 பேர் யாழ். குடாநாட்டில் அங்கவீனர்களாக உள்ளனர்.

இவ்வாறு உள்ள 6 ஆயிரத்து 491 பேரில் தற்போது மூவாயிரம் ரூபா உதவி வழங்கப்படும் 2 ஆயிரத்து 10 பேர் தவிர்ந்த ஏனைய 4 ஆயிரத்து 481 பேரில் பெரும் இடரின் மத்தியில் வாழ்வாதார நெருக்கடியுடன் வாழும் மேலும் மூவாயிரத்து 280 பேருக்கு இந்தக் கொடுப்பனவு வழங்க நிதி அனுமதிக்குமாறு சமூக சேவைகள் அமைச்சைக் கோரியுள்ளோம்.

இருப்பினும் அதற்கான அனுமதி இன்று வரை கிடைக்கவில்லை. குறித்த அனுமதிகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் ஏனையோருக்கும் வழங்க முடியும்.

தற்போது மூவாயிரம் ரூபா வழங்கப்படுவோர் என்ற வகையில் 2 ஆயிரத்து 10 பேருக்குமாக மாதம் ஒன்றுக்கு 60 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படுகின்றது என்றார்.

(த-ஐ-101)

# தனியார் நிறுவனமொன்றில் 600 பேருக்கு வேலைவாய்ப்பு

## நேர்முகத்தேர்வு எதிர்வரும் மார்ச் மாதம்

யாழ்ப்பாணம்,பெப். 27

பொதுமக்கள் தொழில் சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் முன்னணி தனியார் நிறுவனம் ஒன்றில் 600 வரையான வெற்றிடங்களுக்கு ஆள்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3 மணி வரை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இந்த நேர்முகத்தேர்வுக்கு ஜி.சி.ஈ.உயர்தரம் மற்றும் ஜி.சி.ஈ சாதாரணதரம் வரை கல்வி கற்ற 27 வயதுக்கு மேற்படாத ஆண்களும், 24 வயதுக்கு மேற்படாத பெண்களும் தோற்றலாம். நேர்முகத்தேர்வுக்கு தோற்றுபவர்கள் தங்களது கல்விச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கிராம அலுவலரின் சான்றிதழ் என்பவற்றோடு அவசியமான ஏனைய சான்றிதழ்களுடன் தோற்ற வேண்டும்.

மேலதிக விளங்கங்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை நிலையத்தில் நேரடியாகவோ அல்லது 0212219359 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது பிரதேச செயலகங்களில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-ஐ-ரி)

# இன்றும் நாளையும் மின்சாரம் தடைப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.27

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5. 30 மணிவரை மின்சாரம் தடைப்படும்.

கிளிநொச்சி பிரதேசத்தில் தென்னியங்குளம், துணுக்காய், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், உயிலங்குளம், ஒட்டறுத்த குளம், அம்பாள்புரம், செல்வபுரம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், அனிஞ்சியன் குளம், மல்லாவி, திருநகர், 651 ஆவது படைப்பிரிவுமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, மல்லாவி நீர்ப்பாசனம், டொன் பொஸ்கோ ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

(த-ஐ-ரி)

# சிலப்பதிகார விழா நாளை

சாவகச்சேரி,பெப்.27

தென்மராட்சி இலக்கிய அணியின் தமிழ் அமுதம் 2 சிலப்பதிகார விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சாவகச்சேரி சங்கத் தானை கம்பன் கல்லூரி வளாகத்தில் உள்ள தமிழ்க் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்புரையை அதி. வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் நிகழ்த் துவார்.

'சிலப்பதிகாரத்தில் சிந்தைக்கு விருந்தளிப்பதில் விஞ்சி நிற்பது' என்னும் தலைப்பில் கவிஞர் த.நாகேஸ் வரன் தலைமையில் விவாத அரங்கும் இடம்பெறும். (த-ஐ-9)

**மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி**

தொட்டியடி சித்திவிநாயகர் ஆலயத்தின் கட்டட வளர்ச்சிக்காக மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி எதிர்வரும் 06.03.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தொட்டியடி சவாரித்திடலில் (விசுவமடு) நடைபெறும்.

ஆலய நிர்வாகத்தினர்
தொட்டியடி சித்திவிநாயகர் ஆலயம், விசுவமடு மேற்கு.

(64264)
(13.18.20)

**யாழ் மாவட்ட சவாரிசங்க பொதுக் கூட்ட அறிவித்தல்**

நாளை (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட சவாரி சங்க பொதுக்கூட்டம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு நாச்சிமார் கோயில் மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெறும் என்பதை யாழ்.மாவட்ட சவாரி சங்க அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(69612)
(14,18,20)

நிர்வாகம்.

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது சாவு

யாழ்ப்பாணம், பெப். 27

வீதியில் மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதால் காயமடைந்து சிகிச்சைபெற்றுவந்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

அச்சுவேலியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்லையா கணபதிப்பிள்ளை (வயது-95) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவர் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்.

வைத்தியசாலைக்குச் சைக்கிளில் சென்று திரும்பும்போது விபத்து இடம்பெற்றது. அவர் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் காயத்துக்கான சிகிச்சை பயனளிக்கவில்லை. அதனால் அவர் கடந்த செவ்வாய்க்கிழமை வீடு சென்றிருந்த நிலையில் உயிரிழந்தார். விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(த-4-107)

# யன்னல் ஊடாக புகுந்து நள்ளிரவில் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 27

குளியலறை யன்னல் கம்பியை வளைத்து உட்புகுந்து மூன்றரைப் பவுண் நகை மற்றும் 13 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆறுகால் மடம் பழம் வீதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் அனைவரும் உறக்கத்தில் இருந்தவேளை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இதன் போது ஒன்றரைப் பவுண் சங்கிலி, 2 பவுண் காப்பு உட்பட 3 ½ பவுண் நகைகளும், கைப்பையில் இருந்த 13 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-ஐ-4-107)

# சக மாணவனால் தாக்கப்பட்ட பெரும்பான்மையின மாணவி

யாழ்ப்பாணம். பெப். 27

யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் பெரும்பான்மையின மாணவியை அதே பெரும்பான்மையின மாணவன் ஒருவர் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் நடு வீதியில் வைத்துத் தாக்கியுள்ளதாகவும், இதனால் அந்த மாணவி மயக்கமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவியுடன் கூடப் பயணித்த மாணவனே அவரைத் தாக்கியதாகக் கூறப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

தாக்குதலால் மயக்கமடைந்த மாணவிக்குப் பாதசாரிகள் சிலர் முதலுதவி புரிந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அப் பகுதியில் வீதிப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணை செய்தனர். பின்னர் குறித்த இரு மாணவர்களையும் கோப்பாய் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறினர்.

(த-4-101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச வேலைவாய்ப்புக் கோரி மார்ச் முழுவதும் போராட்டம்

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,பெப்.27
வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தி எதிர்வரும் மார்ச் மாதம் முழுவதும் எதிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்வதற்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் பிரதான நகரங்கள் பலவற்றில் அடிக்கடி இந்த எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளரான தம்மிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார்துறை வேலை வாய்ப்புக்களில் பட்டதாரிகளை இணைத்து அவர்களுக்கு அரசிடமிருந்து சம்பளத்தைச் செலுத்தும் செயற்றிட்டம் தொடர்பில் பிரதமர் தெரிவித்துள்ள யோசனையைத் தாம் கடுமையாக நிராகரிப்பதாகவும் தம்மிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.

அரச பிரிவுகளில் வேலை வாய்ப்புக்களுக்கான வெற்றிடங்கள் ஏராளமாக இருப்பதோடு, அவற்றுக்குப் பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக இதுவரையிலும் அரசிடம் எந்தவொரு செயற்றிட்டமும் இல்லை.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியுள்ளதோடு பணியொன்றைப் புரியும் உரிமையை அங்கீகரிக்கும் சட்டமொன்று ஆக்கப்பட வேண்டியுள்ளது.

எவ்வாறான போதிலும் பட்டதாரிகளுக்கு மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும் வரையிலும் எதிர்ப்புப் போராட்டங்களைக் கைவிடப் போவதில்லையெனவும் தம்மிக்க முனசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

(த-ஐ-22)

## மாதுறு ஓயா தேசிய வனவீதியை மூடத் தீர்மானம்

கொழும்பு,பெப்.27
மாதுறு ஓயா தேசிய வனத்தை ஊடறுத்துச் செல்லும் வீதியில் விபத்துக்கள் அதிகரிப்பதன் காரணமாக வீதியை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக மகாஓயா வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய மாலை ஆறு மணியில் இருந்து அதிகாலை ஆறு மணிவரை குறித்த வீதி மூடப்படவுள்ளது.

இதுதொடர்பாகஅவசியப்படும் இரு காவல் நிலையங்கள், மற்றும் வீதித் தடைகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

சூழலியலாளர்கள் மற்றும் பெருமளவிலான வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் எதிர்ப்பின் மத்தியில் மாதுறு ஓயா தேசிய வனத்தை ஊடறுத்து இந்த வீதி நிறுவப்பட்டுள்ளதோடு, இதன் காரணமாக மனிதர்களால் காட்டு யானைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களும் அதிகரித்துள்ளன.

(த-ஐ-22)

## மன்னார் மாணவர்களுக்கு தலைமைத்துவச் சான்றிதழ்

யாழ்ப்பாணம்,பெப்.27
இளையோர் தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3 மாதகாலப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மன்னார் மாவட்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்றது.



மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கான ஐரோப்பிய ஒன்றிய நிதி உதவி அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழகத்தினால் இது நடத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி வேல்நம்பி தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வு களில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும்,சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவி நகரப் பணிப்பாளர் ஆர்.கணேசராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுகளில் மன்னார் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், யாழ். பல்கலைக்கழக துறைசார் விரிவுரையாளர்கள் , மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் இணைந்து அண்மையில் வவுனியா,மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 170 மாணவர்கள் இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-4-ரி2)

## 640,000 மாணவர்களுக்கு இலவசமாகப் பாதணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.27
வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள் 6 லட்சத்து 40 ஆயிரம் பேருக்குப் பாதணிகள் இலவசமாக வழங்கப்படும் எனக் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டுதொடர்பான இந்த வேலைத்திட்டத்துக்கு 640 மில்லியன் ரூபா செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை முழுவதிலுமுள்ள அரசபாடசாலைகளில் நிலவிவரும் கடும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பதற்கும் முறையான செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

2016 ஆம் ஆண்டில் அரச பாடசாலைகளில் சேவையாற்றுவதற்குப் புதிதாக 5 ஆயிரம் ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு ஆண்டிலும் 10 ஆயிரம் பேர் வரையிலான ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுச் செல்வது மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்வதன் காரணமாக பாடசாலைகளில் ஏற்படும் அந்த வெற்றிடங்களை விரைவாக நிரப்பி விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் நிலவும் வெற்றிடங்களைக் கணிப்பிட்டு சம்பந்தப்பட்ட பிரிவிலிருந்தே அந்த வெற்றிடங்களை நிரப்பி விடுவதற்கான செயற்றிட்டமொன்றை நடைமுறையில் கொண்டு வரவிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-22)

## கடந்த ஐந்து வருடங்களில் 2,000 தொழுநோயாளர்கள்

கொழும்பு,பெப்.27
கடந்த 5 வருடங்களில் இலங்கையில் புதிதாக இரண்டாயிரம் தொழுநோயாளர்களை இனங்காண முடிந்திருப்பதாக தொழுநோய்த்தடுப்பு இயக்கத்தின் பணிப்பாளரான வைத்தியர் திருமதி.எம்.எல்.எஸ்.என். பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டில் உலகிலுள்ள 121 நாடுகளில் 2 லட்சத்து 13 ஆயிரத்து 899 தொழுநோயாளர்கள் இருந்துள்ளனர்.

அத்துடன் அங்கங்களை இழந்துள்ள நோயாளர்கள் காணப்படுவதில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளது.

அந்த வகையில் 2015 ஆம் ஆண்டில் இந்த நாட்டில் பதிவாகியுள்ள தொழு நோயாளர்களில் அங்கவீனர்களானோர் 153 பேரும், 15 வயதுக்குக் குறைந்த அங்கவீனர்களானோர் 182 பேரும் இருப்பது தெரிய வந்துள்ளது.

அங்கவீனர்களாகக் காணப்படுவதற்குத் தாமதித்த சிகிச்சையே காரணமாகவுள்ளதாக வைத்தியர் திருமதி எம்.எல்.எஸ்.என்.பெர்னாண்டோ தெரிவித்துள் ளார்.

முறைப்படியான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முழுமையாகவே குணப்படுத்திவிடக் கூடிய நோயொன்றாகத் தொழுநோயைக் குறிப்பிட முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-ஐ-22)

## தாக்கங்களுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்காக அமைப்பு

### சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு,பெப்.27
சமூகத்தால் தாக்கங்களுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்காகக் குரல் எழுப்பச் சிறுவர் சமூகங்களை நிறுவுதற்கு நன் னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

6 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களைக் கொண்டுள்ள சிறுவர் சமூகங்கள் இவ்வாறு நிறுவப்படவுள்ளன.

நிறுவப்படும் இந்தச் சிறுவர் சமூகங்கள் பிரதேச சிறார்கள் சபை, மாவட்டச் சிறார்கள் சபை மற்றும் தேசிய சிறார்கள் சபையெனக் குறிப்பிடப்படும்.

இந்தச் சிறார்கள் சபைகளின் மூலமாகக் கிராமிய மட்டத்திலுள்ள சிறுவர்கள் மாவட்ட மட்டத்துக்கும், மாவட்ட மட்டத்திலிருந்து தேசிய மட்டத்துக்கும் கொண்டுவரப்படவுள்ளனர்.

பிரதேச சிறார்கள் சபைகளால் ஒத்திசைவான தீர்மானங்களை மேற்கொள்ளல், திட்டங்களை வகுத்தல், தலைமைத்துவம் மற்றும் ஆளுமை அபிவிருத்தி போன்ற சிறார்களிடம் மறைந்திருக்கும் திறனாற்றல்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

மாவட்டச் சிறார்கள் சபைகளால் சிறார்களது உரிமைகளை அபிவிருத்தி செய்தல், சிறார்களின் அறிவாற்றல், எண்ணக்கருக்கள், திறனாற்றல்களை அபிவிருத்தி செய்தலும், தேசிய சிறார்கள் சபையினுள் மானுட குணவியல்புகளில் மேம்பட்ட சிறப்பான சிறார்களை உருவாக் கிவிடுதல், உயர்வான நற்குண வியல்புகள் கொண்ட பெறுமதி மிக்க பிள்ளைகளைச் சமுதாயத்துக்கு வழங்கும் நற்பணிகள் ஆகியன மேற்கொள்ளப்படவுள்ளன. (த-ஐ-22)

**விற்பனைக்கு**
Samsung Galaxy Grand Prime 4G
மொபைல் போன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 370 1492

**பெயர்மாற்றம்**
477 - கரியாலை, நாகபடுவான்
என்னும் முகவரி கொண்ட சிவதர்சினி
ஆகிய நான் எனது பெயரை
விஜயதர்சினி
என மாற்றிக்கொள்ளுகின்றேன்.
(64265) (15.15) விஜயதர்சினி

**வீடு விற்பனைக்கு**
வரணி, கரம்பைக்குறிச்சிப் பகுதியில், பிரதான வீதியிலிருந்து 50மீற்றர் தூரத்தில் பாடசாலை, வைத்தியசாலை, சந்தை என்பவற்றுக்கு சமீபமாக 5பரப்புக்காணியில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடு விற்பனைக்கு உள்ளது. (69337) (14,18,20)
தொடர்பு: 077 967 2666

**வேலையாள்கள் தேவை**
கொழும்பு நகரில் தங்கி நின்று
வேலை செய்யக்கூடிய
அலுமினியம் பிற்றிங்
வேலையாள்கள் தேவை.
(69562)(15,17,20)
தொடர்புக்கு: 077 3022 443

**விற்பனைக்கு**
புறொயிலர் சுத்தம் செய்தது
1 Kg - 430/= அத்தோடு கல்பேட்,
பேரன்ஸ், ஊர்ச்சேவல்
விற்கப்படும். (69599) (14,18,20)
தாசன் பாம்
158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**
நல்ல இன தென்னங்கன்று, புதிய இன மாங்கன்று, புதிய இன கமுகங்கன்று, றெட்லேடி பப்பாக்கன்று, தேக்கு, சவுக்கு, மலைவேம்பு, சமண்டலை, கயூ, வெற்றிலைக்கன்று, முருங்கு, ஈரப்பலா மற்றும் பழ மரக்கன்றுகளும், பூக்கன்றுகளும் விற்பனைக்கு உள்ளன.
(69393) (14,18,20)
நியூ லங்கா பாம்
பலாலி வீதி,
ஊரெழு பிள்ளையார் கோயிலுக்கு அருகில்
K.K.S வீதி,
இணுவில்,
077 612 9343

**வீட்டுடன் வளவு விற்பனைக்கு**
கிராம சேவகர் பிரிவு J/139 இற்கு உட்பட்ட இல.49, பாடசாலை வீதி, தாவடியில் உள்ள வீடும், கிணறும் நிலப்பரப்பு 6. வடக்கு தெற்கு எல்லையில் உள்ள பாதையும் உடைய வளவு விற்பனைக்கு உண்டு. இதில் உள்ள வாழைத்தோட்டமும், தென்னம் பயிர்களும் உட்பட பிரித்தும் கொடுக்கப்படும்.
021 222 5641, 077 869 5033

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்வியியற் கல்லூரியில் இன்று கணிதத் தினம்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கணிதத்தின விழா இன்று காலை 9 மணிக்குக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி ச. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் அருளீஸ்வரி வேதநாயகமும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கணிதத்துறை ஆசிரியர் சபாநாயகம் அகிலனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கணிதத்துறை சார்ந்த 'ஓர்பிற்' என்ற சஞ்சிகை வெளியீடும் இடம்பெறவுள்ளது. (த-ஐ)

# கழிவு கொட்டுவதைக் கண்டறிய செம்மணி வீதியில் சிசிரிவி கமரா

## மாநகர ஆணையாளர் அறிவிப்பு

செம்மணியில் வீதியோரங்களில் குப்பைகள், கழிவுகள் கொட்டுவது அதிகரித்ததால், அதனைத் தடுப்பதற்காக அங்கு கண்காணிப்புக் கமரா பொருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடந்த இது பற்றிய கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்கக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் செம்மணியில் குப்பை கொட்டுதல் பட ரீதியாகக் காண்பிக் கப்பட்டது. செம்மணி வீதியின் குறிப்பிட்ட ஒரு பகுதி வலி.கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக் குட்பட்டதாகவும், மற்றையது நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட் பட்டதாகவும் காணப்படுகின்றது.

எனினும் செம்மணி வீதியை நல்லூர் பிரதேச செயலகத்தின் எல்லைக்கு உட்பட்டதாகக் கொண்டு வரத் திட்டமிட்டபோதும் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது எனக் கூட்டத்துக்கு சமுகம் அளித்தவர்களால் தெரிவிக்கப்பட்டது. எனவே மாவட்ட செயலருக்கு எல்லை நிர்ணயம் செய்வதற்கான வேண்டுகோள் கடிதம் அனுப்பப்பட வுள்ளது.

அத்துடன் நகரை அழகுபடுத் துவதற்கு வீதியோரங்களில் மரங்களை நடுவதற்கும், கோப்பாய், நல்லூர் பிரதேச சபைகளின் எல்லைகளுக்குட்பட்ட பிரதேசங்களில், வீதியோரக் கவனவீர்ப்புப் பதாகைகள், பெயர்ப் பலகைகள் அமைக்கவும், இரு கவனவீர்ப்புப் பதாகைகளை அந்தந்த உள்ளூராட்சி அமைப்புகள் தமது நிதியிடலில் மேற்கொள்வதெனவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வலி.கிழக்கு பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை என்ப வற்றின் ஒப்புதல் பெறப்பட்டு, செம்மணி வீதியோரங்களில் தெருவிளக்குகள் அமைக்கவும், 2 மைக்கிறோனுக்குக்குறைந்த தடிப்புடைய பொலித்தீன் பாவனையைத் தடைசெய்ய மத்திய சூழல் அதிகார சபையிடமிருந்து, குறித்த தடிப்புடைய மாதிரிகள் பெறறுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் செம்மணி வீதியில் குப்பை கொட்டுதலை கண் காணிப்பதற்குக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

அங்கு முன்னர் குப்பை கொட்டிய போது மறைந்திருந்த மாநகர சபைப் பணியாளர்களால் ஒருவர் பிடிக் கப்பட்டுப் பொலிஸில் ஒப்படைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-4-ரி4)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி தயாபரி சத்தியலிங்கம்
அவர்களின் தாயார்
**திருமதி சின்னம்மா இராமலிங்கம்**
அவர்கள் 24.02.2016 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.



(69612)
பாடசாலைச்சமூகம் (14.16.20)
புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.

**நீங்காத நினைவில்**
**4ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**இராசையா ஜெயகோபால்**
(பௌதீகவியல்துறை தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் -1, யாழ்.பல்கலைக்கழகம்)
தோற்றம் 28.06.1961
மறைவு 27.02.2012
திதி: 14.03.2016

எளிமையாக வாழ வழிகாட்டிய எம் தெய்வமே
ஆண்டுகள் நான்கு கடந்தாலும் ஆறாது உங்கள் நினைவுகள்
என்றும் மாறாத நினைவுகளுடன் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தொல்புரம் -மத்தி, சுழிபுரம். (69555)(11.18)
நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

**வருஷாப்திகம்**
**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



ஏழாலை
**ஸ்ரீமதி ஜெயவர்த்தனி அம்மா**
**வைத்தியநாதக் குருக்கள் (பிரான்ஸ்)**

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (27.02.2016) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து அவர்களின் முதலாவது ஆண்டு நினைவாக "விக்னேஸ்வர யாக மண்டப பூஜை" என்னும் நூல் வெளியீடும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.15, துரைராஜாவீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (69596)(11.18.20)
குடும்பத்தினர்.
021 222 5851

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் **செல்லத்துரை செல்வநாதன்**
மடியில் துளிராய் 26.03.1956
மனதில் நினைவாய் 02.03.2013
திதி: அபரபட்ஷ பஞ்சமி
(27.02.2016)

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
இன்பமொழி பேசி எல்லாம் எமக்களித்து
பண்புடன் வாழ வழிப்படுத்திய - நீங்கள்
ஆண்டவன் அடிசேர்ந்து மூன்றாண்டுகள் ஆனதுவோ!
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்
உம் நினைவில் வாழ்கின்றோம்.

(அ/29535)(11.18.20)
விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

# இந்திய மீனவரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப்.27

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 12 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள் ளது.

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி 2 விசைப்படகுகளுடன் நுழைந்து நெடுந்தீவு கடற்பரப்பினுள் மீன்பிடித்த குற்றச்சாட்டில் 9 இந்திய மீனவர்களும், ஜனவரி 17 ஆம் திகதி ஒரு விசைப்படகுடன் கைதான 3 இந்திய மீனவர்களுமாக 12 இந்திய மீனவர்களின் விளக்கமறியலே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-4-107)

# நாடுகடத்தப்பட்டவர் தடுப்பிலிருந்து விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

நாடு கடத்தப்பட்டு பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் கொழும்பு நீதிவான் மன்றினால் கடந்த புதன்கிழமை விடுவிக்கப்பட்டார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு மலேசியா விலிருந்து நாடு கடத்தப்பட்ட குறித்த நபர், இலங்கைக்கு வந்த போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டது. எனினும் அதனை ஏற்க மறுத்த அவர், தான் சுற்றவாளி என்று கூறியிருந் தார். அதனால் அவர் தடுத்து வைக் கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு எதி ராக எந்தக் குற்றச் சாட்டும் இல்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தெரி வித்ததனையடுத்து நீதிமன்றினால் விடு விக்கப் பட்டார். (த-வ-4)

**நினைவஞ்சலி**

முதலாம் ஆண்டு (27.02.2016)
தோற்றம் 1943 . 04 . 26
மறைவு 2015 . 03 . 11



சரவணபவானந்தன் குலசூரியன்
(ஓய்வுபெற்ற பெருநிதியவளர்)
(திதி:அபரபக்க பஞ்சமி)

7ஆம் ஆண்டு (05.02.2016)
தோற்றம் 1945 . 05 . 17
மறைவு 2009 . 02 . 06



திருமதி சிவனேஸ்வரி குலசூரியன்
(திதி:அபரபக்க துவாதசி)

அன்பு மொழியில் பாசத்துடன் அரவணைத்து
எம்மை வாழ வைத்த தெய்வங்களே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்களை மறப்போமா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(அ/29553)(11.18.20)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மகிமை வேலைத்திட்டம் காணிகள் சுவீகரிக்கும் செயற்பாடல்ல

## மக்கள் மத்தியில் தவறான எண்ணக்கரு என்கிறார் யாழ். காணி உரித்து நிர்ணய உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம்,பெப். 27

அரசினால் காணி சுவீகரிக்கப்படுவதற்கு மறைமுகமான திட்டமாக நிலசக்தி அல்லது மண்ணின் மகிமை வேலைத்திட்டம் உள்ளதாக மக்கள் மத்தியில் தவறான எண்ணக்கரு தோன்றியுள்ளதாக யாழ். காணி உரித்து நிர்ணயத் திணைக்கள உதவி ஆணையாளர் க. பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 40 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேலைத்திட்டத்தில், அரசு தமது காணிகளை மறைமுகமாக சுவீகரிக்கத் திட்டமிடுகின்றது என்ற பிழையான எண்ணத்தை மக்கள் கொண்டுள்ளனர்.

இது சட்டப்படி அரசின் காணி சுவீகரிப்பு நடவடிக்கையுடன் தொடர்புபட்டதல்ல.பழைய சிக்கலான உறுதிகளுக்கு மாற்றீடாக புதிய எளிமையான கணினி மயப் படுத்தப்பட்ட உறுதிகளை வழங்குவதற்கும், முழுக் காணிகளினதும் உரித்தாண் மையை உறுதி செய்துகொள்வதற்குமாகவே இந்தத் திட் டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தத் திட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டத்தில் அரச காணிகளும் உள்ளடங்கப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்தின் மூலம் ஜே/114 கிராமசேவையாளர் பிரிவில் 80 வீதமான வேலைத் திட்டம் முடிவடைந்துள்ளது. மற்றும் ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகளில் வேலைத் திட்டம்நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த வேலைத்திட்டத்தின் மூலம்,பழைய சிக்கலான உறுதிகளுக்கு மாற்றீடாக புதிய எளிமையான முறையில் கணினி மயப் படுத்தப்பட்ட உறுதி வழங்கப்படும். இதில் முதலாம் வகுப்பு உரித்து, 2 ஆம் வகுப்பு உரித்து என வழங்கப்படும்.

இதில் முதலாம் வகுப்பு உரித்து என்பது நிர்ணயம் செய்யப்பட்ட உரித்தாகவும் எந்தவித பிரச்சினையும் இல்லாத உரித்தாகவும் கருதப்படும்.

இரண்டாம் வகுப்பு உரித்து எனப்படுவது

> உறுதிகள் ஒழுங்கற்ற, ஒரு காணிக்கு இரண்டு உறுதி என்று பிரச்சினைக் குட்பட்ட காணிகள் தொடர்பாக, விடயம் முதலில் இணக்கசபைக்கு அனுப்பப்பட்டு பின்பு மாவட்ட நீதிமன்றத்துக்கு சென்று தீர்ப்பு வந்த தன் பின்னரே இதற்குரிய உரித்தாண்மைச் சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து கிராம சேவையாளர் ஊடாகவே விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு எமது களப்பணி உத்தியோகத் தர்களின் கீழ் இந் தத் திட் டம் நடை பெற் றுக் கொண்டிருந்தது.

குறிப்பிட்ட காணிக்குப் போதியளவு ஆவணங்கள் இல்லாதபோதும், இவர்களுக்கு நம்பகத்தன்மையான உரித்து உள்ளது என்று கருதினால், கிராம சேவையாளரின் வதிவிட உறுதிச் சான்றிதழுடன், காணி உரித்து உதவி ஆணையாளரால் இரண்டாம் வகுப்பு உரித்தாக வழங்கப்படும்.

இந்த இரண்டாம் வகுப்பு உரித்து வழங்கப்பட்ட நாளில் இருந்து அடுத்த பத்து வருடத்துக்குப் பிறகு எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை என்று கருதப்படும்போது முதல்வகுப்பு உரித்தாக இது வழங்கப்படும்.

காணியின் மிகத் திருத்திய பரப்புடன் வரை படமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். காணி ஒன்றைக் கொள்வனவு செய்யும்போது அந்தக் காணி பற்றிய திருத்தமான சரியான தகவல்களைப் பெறுவதுடன் பிரச்சினைக்குரிய காணிகளைக் கொள்வனவு செய்து பின்னர் சட்டச் சிக்கல்களில் மாட்டிக் கொள்ளாமல் சரியான காணியை கொள்வனவு செய்ய முடியும்.

காணி ஒன்றைப் பிணையாக வைத்துக் கடன் பெறும் போது அல்லது சொத்துப் பிரகடனத்தின்போது அதற்கான நடைமுறைகளை மிக இலகுவான முறையில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

போலி உறுதிகள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட உறுதிகள், பல்வகைக் காணிப் பிணக்குகள் போன்ற அனைத்துக்கும் இதனால் தீர்வுகாண முடியும். காணிகளை விற்கும்போதோ அல்லது கைமாற்றப்படும்போதோ தேவையற்ற செலவினங்களையும் நேரவிரயங்களையும் குறைத்துக் கொள்ளமுடியும்.

பரம்பரையாக மக்கள் வாழ்ந்து வரும் காணிகளின் உறுதி அவர்களிடம் இல்லாவிடத்து தங்கள் உரிமையை நிரூபித்து உரித்துக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் நேரடியாகவோ அல்லது அற்றோனித்தத்துவக்காரர் மூலமாகவோ தமது காணியின் உரித்தை தகுந்த ஆவணங்கள் மூலம் உறுதி செய்து பெற்றுக்கொள்ளமுடியும்.

அவர்களின் காணிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பாதிப்புக்கு உள்ளாகும் என்றோ அரசுக்குச் சொந்தமாக்கப்படும் என்றோ பய உணர்வு கொள்ளத் தேவையில்லை. மற்றும் வடக்கு மாகாணத்தில் நிலவும் தேசவழமைக்கு ஏற்பவே முதுசம், சீதனம், தேடியதேட்டம், உரிய உரித்துக்களில் வழிவாய்க்கால், கிணற்றுப்பங்கு, தூர்வைப்பங்கும் பாதை உரிமை, சீவிய உரித்து மற்றும் பின்னுரித்து போன்ற நிபந்தனைகள் குறித்துக் காட்டப்படும்.

உறுதிகள் ஒழுங்கற்ற, ஒரு காணிக்கு இரண்டுஉறுதிஎன்றுபிரச்சினைக்குட்பட்ட காணிகள் தொடர்பான விடயம், முதலில் இணக்கசபைக்கு அனுப்பப்பட்டு பின்பு மாவட்ட நீதிமன்றத்துக்குச் சென்று தீர்ப்பு வந்ததன் பின்னரே இதற்குரிய உரித்தாண்மைச் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து கிராமசேவையாளர் ஊடாகவே விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு எமது களப்பணி உத்தியோகத்தர்களின் கீழ் இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இனிவரும் காலங்களில் நேரடியாகவே எமது களப்பணியாளர்கள் வீடுகளுக்குச் சென்று ஒவ்வொரு காணித்துண்டங்களையும் பார்வையிட்டு உறுதி செய்து கொள்வார்கள்.

இதற்கு பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்கு வரும் காணி உரித்து நிர்ணய உத்தியோகத்தர்கள் மற்றும் நில அளவையாளர்கள் அனைவருக்கும் தேவையான ஆவணங்களையும் வழங்கிப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)

# காக்கைதீவு இறங்குதுறை சுகாதாரச் சீர்கேட்டுடன்

யாழ்ப்பாணம்,பெப்.27

காக்கைதீவு இறங்குதுறை கடந்த 3 வருடங்களாக சுகாதார விதிமுறைகள் அற்ற முறையில் இயங்கிவருவதாகவும், சுகாதார விதிமுறைகளுக்கு முரணான முறையில் கடலுணவுகள் விற்கப்படுவதாகவும் கடற்றொழில் கிராமிய அமைப்பின் தலைவர் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

காக்கைதீவு இறங்குதுறை முகத்தில் மீனவர்களுக்கான ஓய்வுமண்டபம், உடுப்பு மாற்றும் அறை என்பவை இதுவரைகாலமும் அமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

அத்துடன் அந்தத் துறைமுகத்தில் பொருத்தமில்லாத ஒரு இடத்தில் மலசலகூடம் அமைக்கப்பட்டு உள்ள போதும் அது பாவனையற்ற நிலையில் இன்று வரை பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது.

இதனால் அந்தப் பகுதி மீனவர்கள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்தத் துறைமுகத்தில் 3 கட்டடங்கள் காணப்பட்ட போதும் ஒரு கட்டடம் மாத்திரமே பூரணமாக அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு கட்டடங்கள் இன்னும் பூரணப்படுத்தப்படாத நிலையிலே காணப்படுகின்றன.

மீன் வெட்டுவதற்கும், கழிவு கொட்டுவதற்கும் ஏற்ற இடம் இல்லாமையினாலும் மீன்கள் விற்கும் இடம் தினம் தினம் சுத்தம் செய்யப்படாததாலும் மீன்களின் துர்நாற்றத்துடன் அழுகிய மீன்களில் இருந்து புழுக்கள் வெளிவந்தும், சுகாதாரத்துக்குக் கேடு ஏற்படுத்துவதுடன் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு தொற்றுநோய் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடமும், ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும், மாதக் கூட்டங்களிலும் பேசியும் இது வரை எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

கடந்த மாதம் நடைபெற்ற [illegible] தகை ஆலோசனைக் கூட்டத்தில் இது பற்றி பேசிய போது எந்தவிதமான ஒழுங்கான தீர்மானத்தையும் பெறமுடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது பற்றி வலி. தென்மேற்கு பிரதேசசபைச் செயலர் குறிப்பிடுகையில்:

எமக்கு எந்தவிதமான எழுத்து மூலமான அறிக்கை எதுவும் கிடைக்கவில்லை. காக்கைதீவு இறங்கு துறையில்மீன்விற்பதற்கு சரியான இடம் அமைத்துக் கொடுக்கப்பட்டபோதும், அந்த மீனவர்கள் தமக்கு அந்த இடம் பொருத்தமானதாக இல்லை எனத் தமக்கு விரும்பிய இடத்தில் இருந்து வியாபாரம் செய்வதனால்தான் இந்தப் பிரச்சினை வருகிறது.

இதற்குரிய சரியான நடவடிக்கை எடுப்பதாகவும், மற்றும் மீன்விற்கும்இடங்கள்துப்பரவுப்பணியாளர்களால் சென்று சுத்தமாக்கப்படுவதாகவும், சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைக்கு தாம் உடனடியாக தமது சுகாதாரப் பரிசோதகரை அனுப்பி இதற்கான தீர்வு காணபதாகவும் அவர் தெரிவித்தார். (த-ஜ-ரி-115)

# மானிப்பாய் மருதடி விநாயகர் தர்மகர்த்தா சபைக்கு இருவர்

யாழ்ப்பாணம்,பெப்.27

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையில் பல மாதங்களாக வெற்றிடமாக இருந்த இரு உறுப்பினர்களுக்கான பதவி நிரப்பப்பட்டுள்ளது. வழிபடுவோர் சங்க உறுப்பினர்களில் இருவர் தர்மகர்த்தா சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய பல வருடங்களாக அடியார்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாசபைஉறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நடைபெற்றது.

ஏழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் இரு குழுக்களாக 14 பேர் போட்டியிட்டனர். இறுதியில் இரு குழுக்களிலுமிருந்து 4, 3 என்ற எண்ணிக்கையில் ஏழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஒக்ரோபர் மாதம் முதலாவது தர்மகர்த்தா சபைக்கூட்டம் நடைபெற்றபோது மூன்று பேர் தெரிவு செய்யப்பட்ட குழுவிலிருந்து ஒரு உறுப்பினர் மட்டும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தொடர்ந்து மூன்று கூட்டங்கள் நடைபெற்றபோதும் மேற்படி இரு உறுப்பினர்களும் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காமையால் இவர்களின் நிலைப்பாடு குறித்து அரச அதிபருக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும், வழிபடுவோர் சங்கத்துக்கும் அறிவித்திருந்த தர்மகர்த்தா சபையினர், வெற்றிடமாக இருக்கும் இரு உறுப்பினர் பதவிகளையும் நிரப்புமாறு கோரியிருந்தனர்.

இதையடுத்து, கடந்த வாரம் நடைபெற்ற வழிபடுவோர் சங்கக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வழிபடுவோர் சங்க இரு உறுப்பினர்கள் தர்மகர்த்தா சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (த-ஐ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப்புலிகள் நிர்வாகத்தில் இப்படி வன்முறைகள் நிகழ்ந்ததா?

### பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மனு

மன்னார்,பெப்.27

உங்களாலும் சர்வதேச நாடுகளாலும் பயங்கரவாதிகள் என்று சொல்லப்பட்ட தமிழ் மக்களின் நம்பிக்கைக் குரிய விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு இயங்கிய காலத்தில் இவ்வாறான கேவலமான சம்பவங்கள் தமிழர் தாயகத்தில் எங்கேயாவது நிகழ்ந்த துண்டா? அவர்களால் மட்டும் இந்தக் கட்டமைப்புக் களைச் சரியாகச் செயற்படுத்த எப்படி முடிந்தது என்பதை நீங்கள் ஆராய வேண்டும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக் களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பாலியல் வன்புணர்வின் பின்னர் மிக மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்ட வவுனியா விபுலானந்தக் கல்லூரி மாணவியின் படுகொலையைக் கண்டித்து மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த கவனவீர்ப்புப் போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் அண்மைக்காலமாக ஜனநாயக அத்துமீறல்களும் தான் தோன்றித்தனமான தன்னதிகாரச் செயற்பாடுகளும் வரன் முறைக்குட்பட்ட நிர்ணய நிலையியலுக்கு அப்பால், எல்லை மீறித் தொல்லை கொடுக்கும் துயரச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இவை சட்ட நிர்வாகக் கட்டமைக் கப்பட்ட ஜனநாயக ஆட்சிக் கட்டமைப்பை ஆட்டம் காண வைக்கின்றது. மனித உரிமைகள் விவகாரம் சர்வதேச ரீதியாக தங்களை அச்சுறுத்துகின்ற நிலை காணப்படும் சூழலில் இந்த விதமான சம்பவங்கள் மேலும் தங்களை கேள்விக்குட்படுத்துகின்றது.

ஜனநாயகத்தின் முதல்படியே சட்ட ஆட்சி. அது இலங்கையில் சரியாக நடைமுறைப்படுத்தப் படுகிறதா எனும் விவகாரத்துக் குட்பட்ட கேள்வி பலதசாப்தத்தைத் தாண்டி எம்மத்தியில் உண்டு என்பதை நீங்கள் மறுக்க முடியாது. கடந்த வருடத்தில் நடைபெற்ற புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்கொடுமை நிகழ்ந்து ஒரு வருடம் அண்மித்த நிலையில் உங்கள் சட்ட ஆட்சி அல்லது நல்ல ஆட்சி சாதித்தது என்ன? உங்கள் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும் எனும் வாக்குறுதி கானல் நீராகிக் கரையேறி விட்டதா? எனவே உங்கள் வாக்குறுதிகளை எதிர்காலத்தில் நாம் எப்படி நம்புவது? சிறுவர் துஷ்பிரயோகமும், பாலியல் வன்கொடுமைகளும் என நாளொன்றுக்குப் பல சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

வெளிவருபவை ஒரு சிலதே. இதைத் தடுக்கவேண்டிய சட்டம் இருட்டறையில் நித்திரை கொள்கிறதா?

வித்தியாவின் வழக்குக்கே இதுவரை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாத உங்களின் சட்டக் கட்டமைப்பு, சேயாவின் படுகொலையிலும் அதே விதத்தில் தொடர்கிறது. வவுனியா மாணவியின் கொலையாளியை இதுவரை கண்டு பிடிக்க முடியாத அளவில் மிகப் பலவீனமான முறையிலா தங்களின் புலனாய்வுக் கட்டமைப்பு இயங்குகின்றது.

இவையெல்லாம் தமிழ்மக்களுக்குப் புதிதும் அல்ல, வேடிக்கையும் அல்ல. எத்தனை வழக்குகளையும் விசாரணைகளையும், ஆணைக்குழுக்களையும் சந்தித்து அலுத்துப்போனவர்கள் நாம்.

எனவே அவசரமாக நடை முறையில் உள்ள குற்றவியல் தடுப்புச் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து இவ்விதமான சிறுவர் வன்கொடுமைக் கொலைகளுக்கு விரைவாகத் தண்டனை கிடைப்பதற்கு வழிவகுப்பதுடன் அத்தண்டனை விநோதமான முறையில் விழிப்புணர்வு ஏற் படுத்துவதற்கு வலுவேற்றவேண்டும்.

ஆகவே அந்த விதமான அதிபயங்கரமான தண்டனை வழங்காவிட்டால் தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகவே போய்விடும். உங்களாலும் சில சர்வதேச நாடுகளாலும் பயங்கரவாதிகள் என்று சொல்லப்பட்ட தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு இயங்கிய காலத்தில் இவ்வாறான கேவலமான சம்பவங்கள் தமிழர் தாயகத்தில் எங்கேயாவது நிகழ்ந்ததுண்டா? அவர்களால் மட்டும் இக்கட்டமைப்புக்களை சரியாக செயற்படுத்த எப்படி முடிந்தது என்பதை நீங்கள் ஆராய வேண்டும்.

ஆகவே வழமைபோல் பாராமுகமாகவும், கேளாச் செவியாகவும் எமது நியாயபூர்வமான வேண்டுகோளை உதாசீனம் செய்பவர்களாக இருக்காதீர்கள். ராஜபக்ச ஆட்சிக்கும் உங்கள் ஆட்சிக்கும் பெரிய இடைவெளி இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. எனவே எமது வேண்டுகோளை ஏற்றுணர்ந்து சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவீர்கள் என நம்புகின்றோம்.

அவ்வாறு இல்லையெனில் எதிர்காலத்திலும் இன்னும் பல பெண்களுக்கு இவ்வாறான நிலை ஏற்படுவதற்கு மேலும் வழிவகுக்கப் போகின்றீர்கள் எனும் வாதத்தையும் முன்வைக்க விரும்புகின்றோம்- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ஐ-56)

## மாணவிக்கு நீதி கோரி மன்னாரில் கவனவீர்ப்பு



மன்னார்,பெப்.27

பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வவுனியா மாணவியின் படுகொலையைக் கண்டித்து மன்னாரில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது பாலியல் வன் புணர்வின் பின்னர் மிக மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்ட வவுனியா மாணவியின் சாவுடன் தொடர்புடையவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் எனவும், இனி வரும் காலங்களில் இலங்கையின் காவல்துறையும் அதனுடன் இணைந்த ஏனைய சிவில் மற்றும் சமூக அமைப்புக்களும் எமது மக்களையும், மாணவர்களையும், இளம் சிறார்களையும் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளில் முழு மூச்சாக ஈடுபட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனிமார்க், மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவர் எஸ்.ஞானப் பிரகாசம், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மார்ட்டீன் டயஸ், பெண்கள் அமைப்பின் பிரதி நிதிகள், சமூக ஆர்வலர்கள், மதத் தலைவர், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது.

(த-ஐ-56)

## துணுக்காய் கல்வி வலயம் முன்பாக திங்களன்று ஆசிரியர்கள் போராட்டம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.27

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அசமந்தமான நடவடிக்கைகளால் ஆசிரியர்கள், தமது உரிமைகளைப் போராடிப் பெறுகின்ற நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனைக் கண்டித்தும், துணுக்காய் வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் தொடர் போராட்டத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

உரிமைகளைப் போராடிப்பெறும் சம்பவமானது வடக்கு மாகாண கல்வி அமைச்சைத் தவிர வேறெந்த இடத்திலும் இதுவரை நடந்திராத செயற்பாடாகும்.

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரின் முறைகேடுகள் மற்றும் பழிவாங்கல்கள் தொடர்பாகக் கடந்த ஒரு வருட காலமாக விசாரணைகள் மேற்கொள்ளப்படாமல் தூங்கிக் கிடந்தன.

அதன் காரணமாக, துணுக்காய் வலய ஆசிரியர்களுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் விளைவாக, இரண்டு வாரங்களுக்குள் அவசர அவசரமாக விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் விசாரணைகள் இடம் பெற்றன.

இதன்போதும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளருடைய முறைகேடுகள் தொடர்பாக ஆதாரங்களுடன் எழுத்து மூலம் முறையிட்டிருந்தோம்.

இவ்வாறான முறைகேடுகள் உணரப்பட்ட நிலையிலும் ஆசிரியர்களின் நலனில் அக்கறை கொள்ளாது, முறைகேடான அதிகாரியைக் காப்பாற்றத் துடிக்கும் கல்வி அமைச்சின் நடவடிக்கையின் மர்மம் என்ன என்பது புரியவில்லை.

இந்த நிலையில் திங்கட்கிழமை அதே வலயக்கல்விப் பணிப்பாளரைக் கொண்டு துணுக்காய் வலயத்தை மாதிரி வலயமாக மாற்றும் செயற்திட்டத்தை ஆரம்பிக்க இருக்கின்றனர்.

மாதிரி வலயத்தின் பணிப்பாளராகக் கடமையேற்றுத் தனக்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களைப் பழிவாங்கியே தீருவேன் என்று சொல்லும் வலயக் கல்விப் பணிப்பாளரின் கீழ் ஒருபோதும் ஆசிரியர்கள் தொடர்ந்தும் நிம்மதியாகச் சேவையாற்ற முடியாது என்றும் சங்கம் கூறுகிறது.

ஆசிரியர்கள் துணுக்காய் வலயத்தில் பணியாற்றுவது எதிர்காலத்தில் அவர்களது வாழ்வாதாரத்துக்கே ஆபத்தாகிவிடும் என்று தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகத் தொடர் போராட்டத்தை நடத்தவுள்ளது.

இலங்கையில் நடந்த சர்வாதிகார ஆட்சிகளில்கூட ஆசிரியர்களின் உரிமைகள் இவ்வாறு எப்போதுமே பாதிக்கப்பட்டதில்லை. ஆனால் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கையாலாகாத செயற்பாடு, ஊழல்கள் நிறைந்த நிர்வாகங்களையே ஊக்குவிக்கத் துடிக்கின்றது என்பதைக் காட்டி நிற்கின்றது.

40 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களது சம்பளங்களை நிறுத்தியதும், சில ஆசிரியர் களுக்கு ஒரு வருடத்துக்கு மேல் சம்பளங்களை நிறுத்தியதும் விசாரணையில் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

இவை அடிப்படை மனிதாபிமானமற்ற, சமூக நீதிக்கே ஒவ்வாத செயற்பாடுகள். எனவே துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரை இடமாற்றவேண்டும் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருடனும், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருடனும் பேசப்பட்டிருந்த நிலையிலும் பொருத்தமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எனவே எதிர்வரும் திங்கட்கிழமை துணுக்காய் கல்வி வலயத்துக்கு முன்பாக முற்பகல் 9 தொடக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்று ஸ்ராலின் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(த-ஐ-4)

## பாடசாலை மாணவருக்கு உபகரணங்கள் வழங்கல்

வலி,வடக்கு,பெப்.27

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பெற்றோர்களை இழந்த மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

திரிசூலம் தமிழ் இளம் தளிர்கள் கல்வி அபிவிருத்தி நிலையத்தின் சார்பில் இந்த பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பிரச்சினைகள் குடாநாட்டில் அதிகம்

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.மாவட்டச் செயலகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக பொதுமக்களினது பல்வேறு விதமான காணிப் பிரச்சினைகள் உள்ளன.

எல்லைப் பிரச்சினை, அத்துமீறல் பிரச்சினை அடாத்தாகக் குடியேறிய பிரச்சினை, எனப் பல பிரச்சினைகள் ஏற்படுவதுடன், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மத்தியஸ்த சபைகள் இணைப்பதிகாரி பி.சனாதனசர்மா தலைமையில் யாழ். மாவட்டத்துக்கான விசேட காணிப் பிணக்குகள், மத்தியஸ்த சபைகள் அமைப்பதற்கான பயிற்சி வகுப்பு மாவட்ட பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் மேலும் தெரிவிக்கும்போது,

வடக் கிலும் கிழக்கிலும் காணிப் பிரச்சினை பல ஆயிரக்கணக்கில் உள்ளன. காணிப் பிரச்சினைக்கு உட்பட்டுள்ள மக்களது

> பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இடம்பெறும் சனசமூக மத்தியஸ்ததை விட காணி விடயமான விசேட பிணக்குகளைத் தீர்க்கும் மத்தியஸ்த சபை விசேடமானது.

பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியவை. அந்தப் பெரிய பொறுப்புக்களை யாழ்.மாவட்டத்தில் விரைவில் எதிர்கொள்ள நேரிடும். இதனைவிட அரச காணி, தனியார் காணி, சிதம்பரக் கோயில் காணி மற்றும் பல்வேறுபட்ட எண்ணில் அடங்காக் காணிப் பிரச்சினைக்கு நாம் எதிர்பார்ப்பது பக்கச்சார்பற்ற நடுநிலை யான புனிதமான பணியையே.- என்றார்

இதில் கலந்து கொண்ட நீதி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் எம்.திருநாவுக்கரசு கூறுகையில்,

கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையில் தீர்க்கப்படாத காணிப் பிரச்சினையின் விவரம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக் கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சியிலும், கிழக்கில் மட்டக் களப்பு, திருகோணமலையிலும், தென்பகுதியில் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் உள்ளிட்ட 5 மாவட்டங்களிலும் விசேடகாணிப் பிணக்கு தொடர்பான மத்தியஸ்தம் முன்னிலைப் படுத்தப்படவுள்ளது.

இதில் முதல்முதலாக நாம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மத்தியஸ்த சபையை நடத் தத் திட்டமிட்டுள்ளோம். அடுத்த மாதமளவில் கிளிநொச்சியில் நடத்தவுள்ளோம்.

இதிலும் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இடம்பெறும் சனசமூக மத்தியஸ்ததை விடக் காணி விடயமான விசேட பிணக்குகளைத் தீர்க்கும் மத்தியஸ்த சபை விசேடமானது.

அங்கு அவர்களது கடமை, அர்ப்பணிப்பு, தியாகம் என்பவை முன்னிலைப்படுத்தப்படும்- என்றார்.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட மத்தியஸ்தர் இரா.ஜோன் பிலிப், பி.பார்த்தசாரதி, எம்.ரி.முபாரிஸ், இணைப்பதி காரி (நீதி அமைச்சு) யசபால டி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-ஐ-50)

# உற்பத்தி வரி அதிகரிப்பால் நிலத்தில் ஊற்றப்படும் கள்

## ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.27

போத்தலில் கள் அடைப்பதற்கான உற்பத்தி வரியையும், அதற்கான அனுமதி வரியையும் அரசு பல மடங்காக அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, குடாநாட்டில் தினசரி ஆயிரம் போத்தல்களுக்கும் அதிகமான கள் நிலத்தில் ஊற்றப்படுகின்றன. இதனால் 5 ஆயிரத்துக்கும் அதிகமான சீவல் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் வருடாவருடம் ஜனவரி மாதத்தில் இருந்து பனம் கள் சீசன் ஆரம்பமாவ தைத் தொடர்ந்து பாவனையாளர்களுக்கு மிஞ்சிய பனம் கள்ளை, கள்ளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் பயன்படுத்துவதற்காக போத்தல்களில் அடைக்கப்படுவதுடன் சாராயத்துக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

குடாநாட்டிலுள்ள 19 பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களில், 17 தொழிற்சங்கங்கள் கள் அடைக்கும் தொழிற்சாலையை நடத்தி வருகின்றன. வலிகாமம், வரணி ஆகிய கொத்தணிகளும் வடிசாராயத்தைத் தயாரித்து வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகள் இயங்குவதால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுகின்றது.

இந்த நிலையில் தற்போதைய நல்லாட்சி அரசு வரவு-செலவுத் திட்டம் மூலம் போத்தலில் கள் அடைப்பதற்கான வரியையும், அனுமதி பெறுவதற்கான வரியையும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் 2 லட்சம் ரூபாவாக இருந்த அனுமதி பெறுவதற்கான வரி 10 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதே போல் ஒரு போத்தல் கள் அடைப்பதற்கு 6 ரூபா 25 சதமாக இருந்த வரி 18 ரூபா 75 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கள்ளைப் போத்தலில் அடைக்கும் ஒவ்வொரு சங்கமும் பெருந்தொகையான பணத்தை வரியாகக் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால், போத்தலில் கள் அடைக்கும் தொழிலை நிறுத்தியுள்ளன. இதனால் குடாநாட்டில் தினசரி ஆயிரம் போத்தல்களுக்கும் அதிகமான கள் நிலத்தில் ஊற்றப்படுகின்றது.

அரசின் இந்தச் செயற்பாட்டினால் குடா நாட்டிலுள்ள 5 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வாழ்வாதாரத்துக்கு பெரும் கஷ்டப்படுகின்றனர். இந்த நிலை குறித்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று பாதிக்கப்பட்ட தொழிலாளர் அரசைக் கோரியுள்ளனர்.

பெருந்தொகையான கள் தினசரி நிலத்தில் ஊற்றப்படும் போதும் கள்ளின் விலை குறைக்கப்படுவதில்லை. ஒரு போத்தல் கள் 70 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. கடந்த வருடம் இந்தக் காலப்பகுதியில் ஒரு போத்தல்கள் 60 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பனை தென்னை வள அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எம்.பி. லோகநாதன் தெரிவிக்கையில்,

கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் அதிகரிக்கப்பட்ட வரி தொடர்பாக சீவல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதைக் கருத்தில்கொண்டு வரிக்குறைப்பு தொடர்பாக முயற்சி செய்து வருவதாகவும், ஆயினும் இதற்கு கூட்டுறவு அமைச்சும் நிதியமைச்சும் பொறுப்பாக உள்ள காரணத்தால் அவை இரண்டும் இணைந்து தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு வரிக்குறைப்புச் சம்பந்தமான செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (த-ஐ-ரி-115)

## வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட பொதிகள் சென்றடையவில்லை

### நுகர்வோர் பாதுகாப்பு சபையில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.27

வெளிநாட்டுக்கு அனுப்பிய பொதிகள் 23 நாள்கள் கடந்த நிலையிலும் சென்றடையாதமையால், செலவுப் பணத்தை மீளப் பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட ஒருவர் யாழ்.மாவட்டச் செயலக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையில் முறையிட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிநாடுகளுக்குப் பொதிகள் அனுப்பும் முகவர் நிலையமொன்றின் ஊடாகக் கடந்த முதலாம் திகதி அனுப்பிய பொருள்கள் உரிய இடத்துக்குச் சென்றடையவில்லை.

குறித்த பொதியில் உலர் உணவுகளே அனுப்பப்பட்டன. குறித்த பொருள்கள் 7 நாள்களில் உரிய இடத்தில் சமர்ப்பிக்கப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரிலேயே அந்த நிறுவனம் பெற்றுக்கொண்டது.

இருப்பினும் இதுவரை உரிய இடத்தில் சமர்ப்பிக்காத காரணத்தாலும், உலர் உணவுகள் கெட்டுப்போவதற்கான சந்தர்ப்பம் உள்ளதன் காரணத்தாலும் எமக்கு ஏற்பட்ட செலவுப் பணம் முழுவதையும் மீளப் பெற்றுத் தரவேண்டும் என்ற அடிப்படையில் குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுப்பிய பொதியில் இருந்த பொருளின் பெறுமதி 12 ஆயிரம் ரூபாவெனவும், அதற்கான செலவுக் கட்டணமாக 23 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டதாகவும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (த-ஐ-101)

## சந்திரமௌலீச வித்தியாலயத்தில் வானிலை அவதானிப்பு நிலையம்



சாவகச்சேரி,பெப்.27

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் வானிலை அவதானிப்பு நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வேள்ட் விஷன் நிறுவனத்தின் கிராமிய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள் திட்டம் 111 இன் கீழ் இந்த வானிலை அவதானிப்பு நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக இந்தப் பாடசாலையில் வானிலை அவதானிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வித்தியாலய அதிபர் க.எழிலழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் நிலையத்தைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் இலங்கை மழைநீர் சேகரிப்பு ஒன்றியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி தனுஜா ஆரியநந்த, வேள்ட் விஷன் செயற்றிட்ட முகாமையாளர் ஆர்.ஜெயால்ட் அன்ரனி ஆகியோரும் கலந்து கொண்டனர். அத்துடன் வித்தியாலயத்தின் மழைநீர் சேகரிப்புத் தாங்கியும் திறந்து வைக்கப்பட்டது.

(த-ஐ-9)

# தலைமறைவான முதியவர் வெளிநாடு செல்லத் தடை

## குடும்பப் பெண்ணின் சாவு வழக்கில்

சாவகச்சேரி,பெப்.27

நுணாவில் மேற்குப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட 34 வயது குடும்பப் பெண்ணுடன் வசித்ததாகக் கூறப்படும் 61 வயது முதியவர் தலைமறைவாகி யுள்ளதால் அவர் வெளிநாடு செல்ல விடாமல் தடுக்கச் சாவகச்சேரி நீதிமன்றினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நுணாவில் மேற்கு வீரபத்திரர் வீதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கி அழுகிய நிலையில் காணப்பட்ட பெண்ணொருவரது சடலம் சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு நீதிவானின் உத் தரவின்பேரில் யாழ். போதனா வைத்தியசாலையின் சவச் சாலையில் ஒப்படைக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அவரது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பெண்ணின் சாவு தொடர்பாக இவருடன் வசித்து வந்த முதியவரை பொலிஸார் தேடி வருகின்றனர். இந்த நிலையில் அவர் வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தையடுத்து, பொலிஸார் இந்த விடயம் தொடர்பாகச் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து குறித்த நபர் வெளிநாடு செல்லவிடாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர்.

அறிக்கையை ஆராய்ந்த நீதிவான் குறித்த செபமாலை செல்வராசா என்னும் முதியவரை வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லாமல் தடுக்குமாறு குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கும் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கும் அறிவிக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

(த-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நல்லிணக்க முயற்சிக்கு அமெரிக்கா பாராட்டு

## அமைச்சர் மங்களவிடம் நேரில் தெரிவித்தார் ஜோன் கெரி

வொஷிங்டன், பெப்.27

இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி பாராட்டியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நேற்று முன்தினம் வியாழக்கிழமை, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியை வொஷிங்டனில் உள்ள இராஜாங்கத் திணைக்களத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புக்கு முன்னதாக, அமெரிக்க இராஜாங்கச் செயலரும், வெளிவிவகார அமைச்சரும் இணைந்து ஊடகங்கள் மத்தியில் உரையாற்றினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, எனது நண்பரான வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை இங்கு வரவேற்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் அவருடன் இணைந்து நான் ஒரு அற்புதமான பயணத்தை மேற்கொண்டிருந்தேன்.

மனதைக் கவரும் வகையில் நல்லிணக்கத்தை நோக்கி தொடர்ந்தும் நகர்வுகளை முன்னெடுக்கும் இலங்கை அரசுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

பிராந்திய விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதற்கும் மற்றும் மிக முக்கியமாக, தமது நாட்டில் அமைதியைக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளும் அவர்களின் முயற்சிகள் முக்கியமானவை. நாங்கள் உங்களை உண்மையாகவரவேற்கின்றோம்.

இலங்கையுடனான மூலோபாய பேச்சுக்கள் எமது அடிநிலைச் செயலர் ரொம் சானொன் தலைமையில் இடம்பெறும். இந்தப் பேச்சுக்கள் ஒரு வரைவைத் தீர்மானிக்கும் வகையில் தொடர்ந்து முன்னேற்றம் காண்பதனை நாம் எதிர்பார்க்கின்றோம் - என்று குறிப்பிட்டார். (த-ஐ-5)



## இராணுவமய நீக்கமென்பது நல்லிணக்கத்தின் ஒரு பகுதி

### அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

வொஷிங்டன்,பெப்.27

இராணுவமய நீக்கம் என்பது நல்லிணக்கத்தின் முக்கியமான ஒரு பகுதி என வெளி விவகார அமைச்சர் மங்கள சமர வீர ஏற்றுக் கொண்டுள்ளார்.



வொஷிங்டனில் உள்ள அமைதிக்கான அமெரிக்க நிறுவகத்தில் நடந்த கருத்தரங்கில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த மங்கள சமரவீர, அதுபற்றிய விசாரணைகள் நடப்பதாகக் குறிப்பிட்டார்.

ஊடக சுதந்திரம் தொடர்பான மற்றொரு கேள்விக்கு, தற்போது முழுமையான, கருத்துச் சுதந்திரம் இலங்கையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, தம்மை மதத் தலைவர்கள் என்று கூறிக் கொள்ளும் இலங்கையில் உள்ள சிலர், அவநம்பிக்கைகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் மங்கள சமரவீர குறிப்பிட்டார். (த-ஐ-5)

## சம்பூர் அனல் மின் நிலையம் கட்டுமானப் பணி விரைவில்

சம்பூர்,பெப்.27

சம்பூர் அனல் மின் நிலையக் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என மின் சக்தி, மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் அமைச்சர் ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கான அனைத்துச் சட்ட ரீதியான அனுமதிகளும் பெறப்பட்டுள்ளன. சுற்றுச் சூழல் அமைப்புகள் மற்றும் கிராமவாசிகளினதும் அனுமதிகளும் பெறப்பட்டுள்ளன.

மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையிடம் இருந்து சுற்றாடல் பாதிப்புகள் குறித்த அறிக்கையும் கிடைக்கப்பெற்றுள்ளது.

2020ஆம் ஆண்டு மின்சார உற்பத்தியை ஆரம்பிக்கும் வகையில் இந்த அனல் மின் நிலையத்தைக் கட்டி முடிப்பதற்கான கேள்விப்பத்திரங்களை அமைச்சு கோரவுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்கள் அடுத்த சில மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சம்பூரில் 500 ஏக்கர் பரப்பளவு நிலத்தில், இந்த அனல் மின் நிலையம்600மில்லியன்டொலர் செலவில் அமைக்கப்படும்.

தலா 250 மெகாவாட்ஸ் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக இரண்டு கட்டங்களாக இந்த 500 மெகாவாட்ஸ் மின் உற்பத்தி நிலையம்அமைக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தியாவுடன் இணைந்து இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ)

## அச்சமான அரசியல் சூழலை இலங்கை மக்கள் நிராகரிப்பு

### நிஷா பிஸ்வால் தெரிவிப்பு

வொஷிங்டன், பெப். 27

அச்சமான அரசியல் சூழலை இலங்கை மக்கள் ஒன்றுபட்டு நிராகரித்துள்ளனர் எனத் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் தெரிவித்துள்ளார்.



வொஷிங்டனில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைதிக்கான அமெரிக்க நிறுவகத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீரவுடன் இணைந்து, நிஷா பிஸ்வால் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றிருந்தார்.

இதில், இலங்கையில் முன்னேற்றகரமான நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி என்ற தலைப்பில், நிஷா பிஸ்வால் உரையாற்றியிருந்தார்.

இதன் போதே அவர், அச்சமான அரசியல் சூழலை இலங்கை மக்கள் ஒன்றுபட்டு நிராகரித்துள்ளனர் எனக் குறிப்பிட்டார். (த-ஐ-5)

## சு.க. உறுப்புரிமை பெற்றோர் வேறு கட்சி அமைக்க முடியாது

கொழும்பு,பெப்.27

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டுத் தெரிவாகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை பெற்றுள்ள, எந்தவொரு உறுப்பினருக்கும், வேறு கட்சியை அல்லது குழுவை உருவாக்க இடமளிக்கக்கூடாதென கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இந்த அரசமைப்பைச் சீர்திருத்த, அமைச்சர்நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் தெரிவுக் குழுவொன்று அமைக்கப்பட் டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க காலத்திலும், 3 சட்ட வரைவுகள் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்குள்ளாக்கப்பட்டன என்றார். (த-ஐ)

### 80 வீதமானோர் பார்வையிழப்பால் அவதியுறுகின்றனர்

நாட்டின் சனத்தொகையில் 80 வீதமானோர் தவிர்த்துக் கொள்ளக் கூடிய பார்வையிழப்பால் அவதிப்படுவதாகச் சுகாதார ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்த்துக் கொள்ளக் கூடிய இந்தப் பார்வையிழப்புக்கு ஊவா மாகாணத்தில் பெருமளவிலானோர் உள்ளாகியுள்ளதாக அந்த ஆய்வில் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதோடு, தென் மாகாணத்தில் குறைந்தளவிலான நோயாளர்கள் இருப்பதும் தெரியவந்துள்ளது.

அதேவேளை, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் உள்ள பெருமளவிலான மக்களும் தவிர்த்துக் கொள்ளக் கூடிய பார்வையிழப்பு நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

இலங்கையில் வசிப்போரில் கண்களில் வெள்ளை படர்வது அதிகரிப்பதன் காரணமாக பார்வையிழப்புக்கு உள்ளாகியுள்ளோரின் தொகை 66.7 வீதமாக இருப்பதோடு, கண்கள் சம்பந்தப்படும் தாக்கங்கள் காரணமாக 14.60 வீதமானோர் பார்வையிழப்புக்குஉள்ளாகியுள்ளனர்எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ஐ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊழல்கள் புரிந்த அரசியல்வாதிகள் விரைவில் கைது

## ஊழல் தடுப்புக்குழுவின் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.27
ஊழல் மோசடி குற்றச் சாட்டுக்களின் அடிப்படையில் பிரபல அரசியல்வாதிகள் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக லஞ்ச ஊழல் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரிய லஞ்ச ஊழல் மோசடியான சுங்கத் திணைக்களத்தின் 125 மில்லியன் மோசடி தொடர்பில் இரண்டு சுங்க அதிகாரிகள் புதுக்கடை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் தில்ருக்ஸியும் நீதிமன்றில் சமுகமளித்திருந்தார். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



இந்தக் கைதுகள் அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் அல்ல. சட்டத்தை அனைவருக்கும் ஒரே விதமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் அரசியல்வாதிகள் கைது செய்யப்படவுள்ளனர்.

இதுவரையில் 12 ஆயிரம் முறைப்பாடுகள் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் முக்கிய அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய விதிமுறைகளுக்கு அமைய முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணை அதிகாரிகளுக்கு போதியளவு கட்டட வசதிகள் இல்லை - என்றார். (த-ஐ-5)

## லஞ்சம் வாங்கிய அதிபர் சிக்கினார்

கொழும்பு,பெப்.27
நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தின் அதிபர் லஞ்சமாக 50 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ளும்போது இலஞ்ச, ஊழல் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த பெண்மணியொருவரிட மிருந்து, அவரது பிள்ளையை 6 ஆம் தரத்தில் சேர்த்துக் கொள்வதற்காக இந்த இலஞ்சத் தொகையைப் பெற்றிருப்பதாக லஞ்ச, ஊழல் விசா ரணைப் பிரிவின் விசாரணைப் பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி தெரிவித்துள்ளார். குறித்த சந்தேக நபரான பாடசாலை அதிபர் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (த-ஐ-22)

## ஆசிரிய ஆலோசகர்கள் மேற்கொள்ளும் சட்டப்படி வேலை குறித்துவிளக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.27
நாடு முழுவதிலுமுள்ள 9 மாகாணங்களின் கல்வி வலயங்களிலும் ஆசிரிய ஆலோசகர்கள் சட்டப்படி வேலை செய்து வருவது தொடர்பில் விளக்கக் கடிதம் மாகாண உயரதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கத் தலைவர் ஆர்.அத்தபத்து அறிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தில், ஆசிரிய ஆலோசகர்கள் தங்களது கோரிக்கையை வென்றெடுக்கும் வகையில் மேற்கொண்டு வரும் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கைக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்க வேண்டாம் எனவும், இந்தப் போராட்டத்தின் அடிப்படையில் ஆசிரிய ஆலோசகர்கள் வலயமட்ட வெளிவாரி மதிப்பீடுகளில் ஈடுபடமாட்டார்கள் எனவும், ஆசிரியர்கள், மாணவர்களின் கற்பித்தல், கற்றல் செயற்பாடுகளுக்கே ஆலோசனை வழிகாட்டல்களை செய்து வருவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சங்கத்தின் போராட்டம் தொடர்பில் கல்வியமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளதாகவும், இதன் முன்னேற்றத்தைப் பொறுத்து இந்தப் போராட்டம் தொடருமா? அல்லது நிறுத்துவதா? எனத் தீர்மானிக்கப்படும் எனவும் அது வரை போராட்டம் தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சங்கத்தின் நியாயபூர்வமான போராட்டத்துக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்களும், மாகாணக் கல்வியமைச்சினதும், வலயக் கல்விப் பணிப்பாளர்களதும் முழு ஆதரவு கிடைக்கும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-4)

## 'எட்கா' ஒப்பந்தப் பேச்சிலிருந்து விலகுகின்றது வைத்தியர் சங்கம்

கொழும்பு,பெப்.27
இந்தியாவுடன் கையெழுத்திடவிருக்கும் 'எட்கா' ஒப்பந்தம் தொடர்பில் இடம்பெறவிருந்த கலந்துரையாடலில் இருந்து இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் விலகிக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாகச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் நளின்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுடன் மேற்கொள்ளப் படவுள்ள எட்கா ஒப்பந்தம் தொடர்பில் அதனுடன் தொடர்புடைய சகல தரப்புக்களுடனும் பேச்சு நடத்தப்படும் என்று பிரத மர் ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இந்த ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாட இந்தியாவிலிருந்து ஒரு குழுவினர் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டே, எட்கா ஒப்பந்தம் தொடர்பிலான கலந்துரையாடலில் இருந்து இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் விலகத் தீர்மானித்துள்தாக வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் அரசுடன் ஏற்கனவே இடம்பெற்ற கலந்துரையாடல்களில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இணையத் தளத்தில், எட்கா ஒப்பந்தத்தின் பிரதி என்று தெரிவிக்கப்பட்டு வெளியிடப்பட்டது போலியானது என்று ஆளும் கட்சி அரசியல்வாதிகள் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

## ஆசிரிய ஆலோசகர்களை தனிச் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்காக அமைச்சரவைப் பத்திரம்

### உறுதியளித்துள்ளார் கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம்,பெப். 27
ஆசிரிய ஆலோசகர்களை நிரந்தர தனிச் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், அதன் பின்னர் சேவை உள்ளீர்ப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்ததாக அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கத்தலைவர் அறிவித்துள்ளார்.

இது பற்றிச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளதாவது:-

சட்டப்படி வேலை செய்து வரும் அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கம், ஆசிரிய ஆலோசகர்களை நிரந்தரச் சேவையில் உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பில் கல்வியமைச்சின் செயலாளருடனும், கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசத்துடனும் சந்திப்பொன்றை நடத்தியுள்ளது.

கல்வியமைச்சருடனான சந்திப்பு திருப்திகரமாக அமைந்திருந்தது. எனினும் இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை நடைமுறைக்கு வரும்வரை எமது சட்டப்படி வேலைப் போராட்டம் நாடு முழுவதும் தொடரும்.

எமது போராட்டம் கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வருவதால் நாட்டின் பெரும்பாலான வலயங்களின் வெளிவாரி மதிப்பீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த ஒரு மாதகாலமாக இந்தப் பணி நடைபெறவில்லை எனவும் கல்வியமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலளித்த கல்வியமைச்சர் ஆசிரிய ஆலோசகர்களை நிரந்தர தனிச் சேவைக்குள் உள்ளீர்ப்பு செய்வது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், அதன் பின்னர் சேவை உள்ளீர்ப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்- என்றார். (த-ஐ-4)

## ஞானசார தேரர் நேற்று உயர்நீதிமன்றத்தில் மனு

### விளக்கமறியல் உத்தரவு சட்டவிரோதம் என்று கூறி

கொழும்பு,பெப். 27
ஹோமாகம நீதிமன்ற நீதிவான் என்னை விளக்கமறியலில் வைக்குமாறு வழங்கிய உத்தரவு சட்டவிரோதமானது எனத் தெரிவித்து, பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் காணாமற் போகச் செய்யப்பட்ட வழக்கில், அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட மற்றும் அரச தரப்புச் சட்டத்தரணி ஆகியோரை அச்சுறுத்தியமை மற்றும் நீதிமன்றத்தை அவதித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஞானசார தேரர் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த செவ்வாய்க்கிழமையே அவர் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், தன்னை விளக்கமறியலில் வைக்குமாறு வழங்கப்பட்ட உத்தரவு சட்டவிரோதமானது என்றும், அது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறும் செயல் எனவும் தெரிவித்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக, ஹோமாகம பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரி விஜேரத்ன, நிலையப் பொறுப் பதிகாரி உபாலி லியனகே, பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்க கோன் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வேரடி மண்ணோடு பெயர்க்கும் காட்சியே விரிந்து தெரிகிறது!

நாட்டில் இன நல்லிணக்கத்தை உண்டாக்குவதில் தோன்றும் சவால்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறம்படக் கையாளுகின்றார்.

மேற்போந்த நற்சான்றிதழை வழங்கிச் சென்றுள்ளார் நியூசிலாந்தின் பிரதமர் ஜோன் கீ.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தாம் இங்கு வந்தவேளை இருந்த நிலைமையை விடவும், இப்போது பல புதிய மாற்றங்களைக் காண்பதாகவும், உணர்வதாகவும், நல்லாட்சி அரசுக்கு அவர் 'மகுடம்' சூட்டித் திரும்பி உள்ளார்.

ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதில் ஜனாதிபதியின் செயல்முறைகள் வெற்றி கண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது என்றும் நியூசிலாந்தின் பிரதமர் சிலாகித்துப் போயுள்ளார்.

தொடர்ந்து பலப்பல ஆண்டுகளாக, எல்லா வகைகளிலும் வழிகளிலும், தமக்குரிய உரிமைகளைப் பெறமுடியாத நிலைக்கு, தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருப்பதை--

அவர் கண்ணிருந்தும் காணாமற் போனமை அல்லது கேட்டு அறியாது சென்றமைக்குப் பின்னூட்டல் வழங்கியவர்கள் யார் என்பதைக் கண்டறிவது இயலாத காரியமே!

இலங்கையின் இப்போதைய அரசியல் நிலைமை, நல்லாட்சி, நல்லிணக்கம் என்று பொன் முலாம் பூசப்பட்டிருப்பினும், அவற்றுக்கான கரும்புள்ளிகளே பருத்துப் புடைத்து உயர்ந்து நிற்கின்றன; தெரிகின்றன.

அரசியல் கைதிகள் விவகாரம், இடம்பெயரச் செய்யப்பட்டவர்கள், காணாமற் போகச் செய்யப்பட்டோர் விவகாரங்கள் அனுமார் வால் போன்று நீண்டு, சுருண்டு கிடக்கின்றன.

இதுவரை இழைக்கப்பட்ட தமிழ் மக்கள் மீதான அராஜகங்கள், உரிமை அத்துமீறல்கள் குறித்து எந்த அரசும் உணர்வு பூர்வமாகவேனும் இதுவரை கருத்தில் கொள்ளவில்லை. அதே வகையில் காணாமற் போனவர்கள் குறித்து உண்மை நிலையை வெளிப்படுத்தாமல், நல்லாட்சி அரசும் ஒளித்துப் பிடித்துச் சடுகுடு விளையாடுகிறது!

ஆகப்பிந்தி, அபிவிருத்தி என்ற போர்வையில், தமிழ்மக்கள்வேரடி மண்ணோடு பெயர்க்கப்படும் அக்கிரமங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

திருகோணமலையில் நல்லாட்சி அரசின் சம்பூர் மின்சக்தி திட்டத்துக்காக, 1,000 தமிழ்க் குடும்பங்கள், இடம்பெயர்த்தப்படவுள்ளதாக பிந்திய தகவல்கள் வெளிவந்துள்ளன. பொறுப்பான அமைச்சர் அஜித் பெரேரா இந்தத் தகவலை ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் விளாசித் தள்ளியுள்ளார்!

மொத்தத்தில்-

நல்லாட்சி, நல்லிணக்கம் என்ற கொழும்பு அரசின் போக்கு, உள்ளார்ந்த பாகுபாடான கொடுமையைத் தழுவியே படரும் போக்கு மிக வெளிச்சமாகத் தெரிகிறது!

நாட்டில் இன ஒற்றுமையும் சௌயன்யமும் சின்னங்களாக (Emblem) முத்திரை குத்தப்படும் என்று, ஒரு துளியேனும் எதிர்பார்க்க இயலாத இருள் கவ்வி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபை என்ன, அமெரிக்கா, பிரிட்டன் போன்றவற்றின் கூட்டு என்ன, நீதியையும் நியாயத்தையும் கைக்கொள்ளுமாறு புத்திமதி கூறினாலும், இலங்கை அரசு மசியமாட்டாது என்ற காட்சியே, விரிந்து தெரிகிறது.

என் செய்வோம்....? யார்க்கு எடுத்து உரைப்போம்?

# எதிரணியைப் பலவீனப்படுத்திய அரசின் இராஜதந்திரம்

எம்.ஐ.முபாறக்

புதிய ஆட்சி மலர்ந்தது முதல் இந்த நாட்டில் எல்லா விடயங்களும் சுமுகமாகப் போய்க் கொண்டிருக்கின்றன. ஆனால், நாடாளுமன்றம் மாத்திரம்தான் கூச்சல் குழப்பம் நிறைந்ததாக – அமைதி இழந்ததாகக் காணப்படுகின்றது. ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எனத் தங்களை சொல்லிக்கொண்டு திரியும் மகிந்த அணியே இந்த நிலைமைக்குக் காரணம்.

நாடாளுமன்றில் எந்தவொரு விடயம் முன்வைக்கப்பட்டாலும், அது நல்லதா, கெட்டதா என ஆராய்ந்து பார்க்காமல் எடுத்த எடுப்பிலேயே அவற்றை எதிர்த்து – கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றது இந்தத் தரப்பு. இந்த அரசைக் கடுமையாக எதிர்க்க வேண்டும்; அதைக் கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கில் இவர்கள் செயற்படுவதால் நல்லது எது, கெட்டது எது என்று இவர்களால் பகுத்து அறிய முடியாமல் உள்ளது.

ஆட்சி இழந்ததை; சுகபோகம் இல்லாமல் போனதை இவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. அதன் வெளிப்பாடே இந்தக் கூச்சல், குழப்பங்கள். இந்தத் தரப்பு அரசுக்கு எதிராக முன் வைக்கும் குற்றச்சாட்டுக்களை எடுத்துப் பார்த்தால் அனைத் துக்கும் ஆதாரமின்றி இருப்பது மாத்திரமன்றி அவை சிறுபிள்ளைத் தனமாகவும் காணப்படுகின்றன. இந்தியாவுடன் இந்த அரசு செய்யவுள்ள 'எட்கா' ஒப்பந்தத்தை எதிர்க்கின்றார்கள்; அது இலங்கைக்கு ஆபத்தானது எனச் சொல்லுகின்றனர். ஆனால், அந்த ஒப்பந்தத்தில் என்ன இருக்கின்றது என்றே அவர்களுக்குத் தெரியாது.

### ஒப்பந்தத்தை தயாரிக்கும் பணிகள்

ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தைத் தயாரிக்கும் பணி கூட இதுவரை நிறைவடையவில்லை. ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென இரண்டு நாடுகளும் கொள்கை அளவில் இணங்கியது மட்டும்தான் இப்போது இடம் பெற்றுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை மாத்திரமன்றி அரசின் எல்லா நல்ல திட்டங்களையும் இவர்கள் நேரடியாகவும் வேறு ஆள்களைத் தூண்டியும் எதிர்க்கின்றனர்.

ஆனால், இவர்களின் இந்தச் சிறுபிள்ளைத்தனமான அனைத்துச் செயற்பாடுகளையும் அரசு இராஜதந்திரத்தின் மூலம் தோற்கடிக்கும் என்பதை அவர்கள் விளங்கிக்கொள்வதற்கான ஒரு சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மகிந்த தரப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்களை நாடாளுமன்றில் கட்சித் தலைவர்களாக ஏற்றுக்கொண்டுள்ளமைதான் அந்த நிகழ்வு. இதன் மூலம் மகிந்த தரப்பு எவ்வளவு தூரம் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்பதை சற்று சிந்தித்துப் பார்த்தால் புரியும். ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் நடாளுமன்றத்துக்குள் ஓர் அணி உருவானது. அந்த அணி எதிர்க்கட்சித் தலைவர்பதவியைக்கேட்டுப்போராடியது. ஆனால், அவர்களின் கோரிக்கையை நிராகரித்து நிமால் சிறிபால டி சில்வா எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

> சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசுடன் இணைந்திருப்பதால் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுக்க முடியாது என அவர்கள் கூறித் தொடர்ந்தும் போராடினர்.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசுடன் இணைந்திருப்பதால் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுக்க முடியாது என அவர்கள் கூறித் தொடர்ந்தும் போராடினர். தனிப் பிரிவாகச் செயற்படும் எமக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் எனக் கோரினர்.

### கைவிடப்படாத போராட்டம்

இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. தேர்தலின் பின்பும் அவர்கள் அந்தப் போராட்டத்தை விடவில்லை. ஆனால், அது நிராகரிக்கப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். அதை ஏற்க மறுத்த இந்த மகிந்த தரப்பினர் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எனத் தம்மை அழைக்கத் தொடங்கினர். எதிர்க்கட்சியின் அந்தஸ்தைக் கேட்டுக் குழப்பம் விளைவித்து வந்தனர்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என அவர்களே அவர்களை அழைத்த போதிலும் அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டுத் தெரிவானவர்கள் என்பதால் அவர்கள் கோரும் அந்த அந்தஸ்தை வழங்க முடியாது என சபாநாயகர் கூறி மறுத்துவிட்டார்.

இருந்தும், அவர்கள் விடவில்லை. தொடர்ந்தும் அவர்கள் போராடினர். நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்கு அவர்கள் இடையூறு விளைவித்தனர்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூடி ஒரு முடிவுக்கு வந்தனர். அந்தத் தீர்மானத்தின்படி, மகிந்த தரப்பில் இருக்கும் ஐந்து கட்சிகளின் தலைவர்கள் நாடாளுமன்றில் கட்சித் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

இந்தத் தீர்ப்பை மகிந்த தரப்பு ஏற்று அவர்களின் போராட்டத்தைக் கை விட்டுள்ளது. இங்குதான் கவனிக்க வேண்டியுள்ளது. அவர்கள் எதற்காகப் போராடினார்களோ அந்தப் போராட்டத்துக்கு வெற்றி கிடைக்கவில்லை. மாறாக, போராட்டம் நடத்தியவர்களுக்கு சிறு சலுகைகள் வழங்கியதும் அப்படியே அடங்கிவிட்டனர்.

ஒன்றிணைந்த எதிரணியில் உள்ளவர்களின் நிலைப்பாடு என்னவென்று இதன் மூலம் தெரிகின்றது. அவர்கள் ஒவ்வொருத்தரும் அவர்களின் தனிப்பட்ட நலனின் மீதே அக்கறை கொண்டுள்ளனர் என்பது புரிகின்றது. இவர்களுக்கு இப்போது கிடைத்திருக்கும் சலுகையானது பிரதான எதிர்க்கட்சிக்கோ அல்லது ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கோ ஈடானதா? நிச்சயமாக இல்லை.

### மகிந்த தரப்பின் பலவீனம்

மகிந்த தரப்பின் ஒற்றுமை எந்த அளவு பலவீனமானது என்பதற்கு இது நல்ல உதாரணம். இதன் மூலம் அரசும் அவர்களின் ஒற்றுமையை எடைபோட்டுப் பார்த்துள்ளது. இதைவிடவும் பெரிய பதவிகள் – சலுகைகள் வழங்கப்பட்டால் இவர்கள் மகிந்தவை நட்டாற்றில் விட்டு விடுவார்கள் என்பது நிச்சயம்.

புதுக்கட்சி உருவாக்கம் தொடர்பிலும் சரி, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி அந்தஸ்தைக் கோரிய விடயத்திலும் சரி மகிந்தவைத் துருப்புச்சீட்டாகவைத்து அவரைச் சுற்றியுள்ள பலரே நன்மையடைய முற்படுகின்றனர். அதற்காகவே அவர்கள் மகிந்தவை அரசியலுக்கு இழுத்து வந்தார்கள் என்பதை மகிந்த இனியாவது விளங்கிக்கொள்ள வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# மக்களைப் பாதுகாப்பது நீதித்துறையின் கடமை



> பொது மக்கள் சட்டத்தைக் கையிலெடுக்கக் கூடாது எனக் கூறும் சட்டவாதிகள் தமது கரங்களில்உள்ள சட்டத்தின் மூலம் எடுத்த நடவடிக் கையின் விளைவு களால் இன்று ஒரு பாதுகாப் பான நிலை உருவாகி யுள்ளதா?

இலங்கையில் தமிழர்களின் வாழ்வு என்பது நித்திய போராட்டமாக மாறிவிட்டது. நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து தமது உரிமைக்காக விடுதலைக்காக மட்டுமன்றி, தமது சொந்த நிலங்களில் குடியிருக்கவும் தொழில்களை முன்னெடுக்கவும் கூட அவர்கள் போராடிக்கொண்டே காலத்தை ஓட்ட வேண்டியவர்களாகி விட்டனர். ஆண்டு தோறும் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் இடம்பெறும் போதும், தமிழ் மக்களின் பங்களிப்புக்கள் அதில் இருப்பதில்லை. தமிழில் தேசிய கீதம் பாடமுடியாது என்பது சிங்கள இனவாதிகளின் ஒப்பாரி. தமிழில் தேசிய கீதத்தைப் பாடிவிட்டால் மட்டும் தமிழர்கள். இந்த நாட்டில் சகல உரிமைகளும் கொண்ட இனமாகி விட்டார்கள் என்பது அர்த்தமா? தமிழ் மக்கள் எதற்காகப் போராடவில்லை? அவர்கள் அனைத்து விடயங்களிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அந்த மக்கள் அரசின் அலட்சியப் போக்குக்கு எதிராக அறுபது வருடங்களுக்கு மேலாகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். தமிழர்களுக்கு எதிரான தமிழருக்கும் போர்க்கொடி தூக்க வேண்டிய சூழ்நிலைக்கு வலுக்கட்டாயமாகத் தள்ளப்பட்டுள்ளனர். தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு எதிராகப் போராடிவரும் அந்த மக்கள் வன்புணர்வுப் படுகொலைகள், துஷ்பிரயோகங்கள், களவுகள், வாள்வெட்டுக்கள் என்று தம் இனத்துள் காணப்படும் சம்பவங்களின் சூத்திரதாரிகளான புல்லுருவிகளுக்கும் எதிராகப் போராடவேண் டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தென்பகுதி அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் கல்வியைச் சிதைப்பதுடன் போதை வஸ்துக்களைஅனுப்பிஇளம்தலைமுறையையே அழித்துக் கொண்டிருக்கும்போது, தமிழினத்துள் காணப்படும் துரோகிகள் தமிழினத்தின் அழிவுக்குத் துணைபோவது போன்றசெயற்பாடுகளை முன்னெடுப்பது என்றுமே ஏற்கமுடியாத ஒன்று. பாடசாலை செல்லும் சிறுமிகள் அநியாயமாக வன்புணர்வின் பின் கொல்லப்படுகின் றார்கள். சிறுவர்கள் துஷ்பிரயோகத்தில் அவர்களது உற வினர்களே முன்னிலையில் உள்ளனர். அது எப்படி இருந்தபோதும் சமூகத் துரோகிகளால் மேற்கொள்ளப் படும் இவ்வாறான நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளியிட வேண்டியது சட்டத்துறையின் கடமை.

### புங்குடுதீவு மாணவி கொலை

புங்குடுதீவு மாணவி வித்தியா வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்டது தொடர்பாக நாடே கிளர்ந்தெழுந்து நீதி கேட்டது. அதற்காக குற்றவாளிகளுக்கு சாவுத்தண்டனை விதிக்கக்கோரிக் குரல்கள் ஒலித்தன. தண்டனையை வழங்க மக்களும் தாங்களே தயாராகினார்கள். சட்டத்தைப் பொதுமக்கள் தமது கைகளில் எடுக்கக்கூடாது என்றனர் நீதித்துறையினர். இனவேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு மக்கள் ஒன்றுபட்டு நியாயம் கேட்டனர். இலங்கையின் வரலாற்றிலேயே ஒரு தமி ழருக்காக தென்பகுதி நீதி கேட்டெழுந்ததும் இதுவே முதல் தடவை. என்ன நடந்தது? எத்தனை மாதங்களாக இந்த வழக்கு தவணை போடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வன்செயலோடு இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாது. சிறுவர்கள், சிறுமிகள், பெண்களுக்கு ஒரு பாதுகாப்புக் கிடைக்கும் என்ற மக்களின் நம்பிக்கைக்கு நடந்தது என்ன? மீண்டும் மீண்டும் வன்புணர்வுப் படுகொலைகள் தொடர்ந்து கொண்டேயுள்ளன. கடந்த வாரம் வவுனியாவில் மாணவி ஒருவர் இவ்வாறு படுகொலைக்கு உள்ளாகியிருக்கிறார். இது தொடர்பாகவும் வவுனியாவிலும், வட பகுதிகளிலும் மிகப்பெரிய கண்டனப் போராட்டங்கள் இடம்பெற்றிருந்தன. நாளை எமது பிள்ளைகளுக்கு இவ்வாறு நடக்காதிருக்க அனைத்து மக்களையும் நீதி வேண்டி வீதிக்கு இறங்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. பொது மக்கள் சட்டத்தைக் கையிலெடுக்கக் கூடாது எனக் கூறும் சட்டவாதிகள் தமது கரங்களில் உள்ள சட்டத்தின் மூலம் எடுத்த நடவடிக்கையின் விளைவுகளால் இன்று ஒரு பாதுகாப்பான நிலை உருவாகியுள்ளதா? நீதி விசாரணை என்ற பெயரில் நீண்ட காலம் இழுத்தடிப்பது தான் மக்களுக்கான சட்டப் பாதுகாப்பா? மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய நடவடிக்கை எடுக்க உறுதியளித்திருந்த போதும், விசாரணைகள் தாமதப்படுத்தப் படுகின்றன. நீதிகிடைப்பதில் உள்ள காலதாமதமே சட்டத்தை மக்கள் தமது கரங் களில் எடுக்கத் தூண்டுகிறது என்பதுதான் உண்மை. நாட்டில் கடந்த ஆண்டில் உருவான நல்லாட்சி அரசில்கூட மக்கள் நம்பிக்கையை இழப்பவர்களாக மாறிவிட்டனர். நாட்டில் 407 படுகொலை களும் ஆயிரத்து 78 பாலியல் வன்புணர் வுகளும் மூவாயிரத்து 259 கொள்ளைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளதாக சட்ட ஒழுங்கு அமைச்சு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. என்னதான் சட்டங்கள் என்று வலியுறுத்தப்பட்டாலும் சட்டத்தில் உள்ள ஓட்டைகள் குற்றவாளிகளுக்குச் சாதகமாகி விடுவதால், இதுபோன்ற குற்றங்கள் இடம்பெறுவது அதிகரித்துக் கொண்டே வருகிறது. அரசன் அன்றறுக்க மாட்டான். தெய்வமும் நின்றறுக்கப் போவ தில்லை என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டே கயவர்கள் இதுபோன்ற கொடூரங்களுக்குத் துணிகிறார்கள்.

### நீண்டகாலமாக இழுபடும் வழக்குகள்

ஒரு சாதாரண வழக்குக்கூட தீர்வுக்காக நீண்ட காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது என்றால் வன்புணர்வுப் படுகொலைகள் போன்ற கொடூரமான வழக்குகளுக்கு தீர்வு துரிதமாகக் கிட்டும் என்று எதிர்பார்க்க முடியாது. குற்றச் செயல்கள் அதிகரிக்காதிருக்க நீதித் துறை உரிய மார்க்கங்களைக் கையாளவும் தண்டனை, களை வலுவுள்ளதாகவும், ஆக்க ஆலோசிக்க வேண்டும். தமிழ் மக் களின் பிரச்சினைகள் அறுபதுக்கு மேற்பட்ட வருடங்களைக் கடந்தும் தீர்வு எட்டப்படாதிருப்பதற்கு அரசின் இழுத்தடிப்பு எவ்வாறு காரணமாகிறதோ, அது போன்று அப்பாவி மக்கள் எதிர்பார்க்கும் நீதிக்கு நீதித்துறையின் இழுத்தடிப்பு தாமதமாகிவிடக்கூடாது.

## பயணிகளுக்குச் சிரமம் வேண்டாம்

பயணிகளை ஏற்றுவதற்குத் தகுதியில்லாத நிலையில் காணப்பட்ட 15 தனியார் பஸ்களுக்குத் தடைவிதித்து யாழ்.நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

பயணிகள் சிரமமின்றிப் பயணம் செய்யக்கூடியதொரு சூழ்நிலை தற்போது குடாநாட்டில் இல்லையென்றே கூறமுடியும். அரச பஸ்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் இடம்பெறுவதால் தனியார் பஸ்களையே நாடிச்செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் அதிக சிரமங்களுக்கு மத்தியிலேயே அவர்கள் தமது பயணங்களைத் தொடர முடிகின்றது. அளவுக்கும் அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், பயணம் மேற்கொள்வதற்குத் தகுதியில்லாத பஸ்கள் சேவையில் ஈடுபடுதல், சில நடத்துநர்கள், சாரதிகளின் மரியாதைக் குறைவான செயற்பாடுகள் போன்றவை பயணிகளுக்குச் சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றன.

பயணிகள் இலவசமாகப் பயணங்களை மேற்கொள்வதில்லை. பணம் செலுத்தியே பயணிக்கின்றனர்.

ஆகவே இவர்களுக்குரிய கௌரவம் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். மேலும் நின்று கொண்டு பயணம் செய்தாலும் பரவாயில்லை. நெருக்கமாக, நெரிபட்டுக்கொண்டு செல்லும் வகையில் பயணிகளை ஏற்றிச் செல்வது உடனடியாகத் தவிர்க்கப்படல் வேண்டும். பண்பாட்டுப் பிறழ்வுகள் இடம் பெறுவதற்கு மினிபஸ் கள் இடம் கொடுக்கக்கூடாது.

மினிபஸ் உரிமையாளர்களுக்கும் பல பிரச்சினைகள் உள்ளதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அவர்களுக்கு எரிபொருள் செலவு, ஊழியர்களுக்கான வேதனம், வாகனங்களின் பராமரிப்புச் செலவு போன்ற செலவினங்கள் உள்ளன. ஆனால், இந்தக் காரணங்களைக் கூறிப் பயணிகளைச் சிரமத்துக்கு உள்ளாக்குவது நியாயமானதல்ல.

க.கவிதா, தெல்லிப்பழை

## பெண்களே இது தேவைதானா?

கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை உதயன் பத்திரிகையில் சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் ஐயா, பெண்கள் குட்டைப் பாவாடை அணிந்து ஆலயங்களுக்கு ஸ்கூட்டியில் பயணம் செய்வது பற்றி மிக வேதனையுடனும், தெளிவான அறிவுரைகளுடனும் தமது நல்ல கருத்துக்களைக் கூறியதை வாசித்தேன்.

அவருக்கு எனது நன்றியையும், சிரம் தாழ்ந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். பெண்களின் ஆடைக் குறைப்பால் ஆண்கள் தலை குனிந்து செல்ல வேண்டி உள்ளது என்றும் ஐயா அவர்கள் தெரிவித்திருந்தார்.

சில ஆலயங்களில் ஆண்கள் வேட்டி அணிய வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள். பெண்களை குட்டைப் பாவாடையுடன் ஆலய தரிசனத்துக்கு கோயில் நிர்வாகம் அனுமதிக்கலாமா? பெண் விடுதலை, சுதந்திரம் என்பது தொடை தெரிய, இடை தெரிய வீதியில் இறங்குவது அல்ல. சில பெண்கள் நாகரிகம் என்று ஆடையை குறைத்துக் கொண்டு, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று எமது கலா சாரங்களையும், கௌரவத்தையும் மறந்து அநாகரிகமாக நடந்து கொள்வது அவ மானத்தைத் தருகிறது. எமது பெரியவர்கள் பண்பாடு, ஒழுக்கம் பற்றி வாய் கிழியப் பேசுவார்கள். தமது மகளோ, மருமகளோ, சகோதரியோ தெருவில் இறங்கினால் மௌனம் காப்பார்கள். கணவனின் அங்கீகாரத்துடன் இல்லத்தரசி குட்டைப் பாவாடையுடன் தெருவில் போகிறாள். இதை அனுமதிப்பது எவரது குற்றம்? மகளிர் அமைப்புக்களோ மாதர் சங்கங்களோ இதற்கும் குரல் எழுப்பலாம். ஆனால் அங்கே கூடும் மாதர் களும் குட்டைப் பாவாடைச் சகோதரிகளே. நாம் எமது பண்புகள், ஒழுக் கங்களை மறந்து விட்டோம்.

எமது அழகிய நாட்டை அசிங்கப்படுத்தாமல் சமயப் பெரியவரின் நல்லுபதேசங்களைக் காதில் வாங்கி இப்போதிருந்தே உங்கள் சிறார்களுக்கு ஒழுங்கான ஆடைகளை அணியப் பழக்குங்கள். அழகிய தமிழ் மகள் இவள் என்று புகழட்டும். இன்று இளசுகள், தாத்தாக்கள் கூட பெண்களை, சிறுவர்களை வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்வதைப் பரவலாக அறிகிறோம். சகோதரிகளே, எமது நாட்டுக்கும் வீட்டுக்கும் தேவை தாய்மை, தாய் அன்பு. ஆடைக் குறைப்பு அல்ல.

உதயன் வாசகி, கல்வயல்

## செய்தியில் சிறு திருத்தம்

நேற்றையதினம் உதயன் பத்திரிகையின் 04ஆம் பக்கத்தில் பிரசுரமான தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையால் வவுனியாவில் 124 மாணவர்களுக்கு சர்வதேச தரத்திலான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட வவுனியா மாவட்ட முகாமையாளரின் பெயர் எஸ்.பாஸ்கரன் என்பதே சரியானதாகும். மேலும் கலாநிதி ஏ.யு.சி.அத்துகோரல சபையின் உதவித் தலைவர் என்பதும் சரியானதாகும்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜாட் இனத்தவர் போராட்டங்களால் 34,000 கோடி இந்திய ரூபா இழப்பு

புதுடில்லி, பெப்.27
இந்தியாவின் வடமாநிலமான ஹரியானாவில் ஜாட் இனத்தவர்களின் வன்முறைச் சம்பவங்களால் பல கோடி ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது.
2வாரங்கள் நீடித்த ஆர்ப்பாட்டங்களில் பல வாகனங்கள், வர்த்தக மையங்கள், ஏனைய கட்டடங்கள் என்பனவும் சேதத்துக்குள்ளாயின.
ஆர்ப்பாட்டங்களினால் ரயில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. ஆயிரம் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன. சாலைப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத் தப்பட்டது. இதனால் மக்களின் இயல்புவாழ்கை பாதிக்கப்பட்டது. வர்த்தக ரீதியில் பொருள்களை இட மாற்றம் செய்யும் சரக்கு வாகனங்கள், ட்ரக்குகள் என்பவற்றின் போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டன. இதனால் ரெஹ்டாக், ஹிசார் ஆகிய நகரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஹரியானா மாநிலம் அல்லாமல் வேறு பல பகுதிகளும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டன. 2 வாரங்கள் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் 34 ஆயிரம் கோடி இந்திய ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என வர்த்தகத் துறையினர் தெரிவித்துள்ளனர்.
பல்வேறுபட்ட மாநிலங்களில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளுக்கு, வெவ்வேறு இடங்களில் இருந்து மூலப்பொருள்கள் கிடைக்கப்பெறுகின்றன என வர்த்தக மற்றும் துறை சார் உற்பத்தி அமைப்பு தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் 34 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (த-ரி4)

# ஐ.எஸ்ஸுக்கு ஆயுத விற்பனை; இந்தியா இரண்டாவது இடம்

## 20 நாடுகள் தம்மை அறியாமலேயே வெடிப்பொருள்களை வழங்குகின்றன



புதுடில்லி, பெப்.27
இந்திய நிறுவனங்கள் பல தம்மை அறியாமலேயே ஐ.எஸ். அமைப்பின் வெடிப்பொருள் உருவாக்கத்துக்குத் துணை புரிகின்றன என்று ஆய்வறிக்கையில் தகவல் வெளியாகியுள்ளது.
ஐ.எஸ்ஸுக்குவெடிப்பொருள்களை வழங்குவதில் இரண்டாவது இடத்தை இந்தியா பிடித்துள்ளது. முதலிடத்தை துருக்கியும், ஏனைய 11 நாடுகளும் இவ்வாறாக தம்மை அறியாமல் பங்களிப்புச் செய்கின்றன என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் 7 நிறுவனங்களில் இருந்து வெடிப்பொருள்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன என அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.
வெடிப்பொருள்களின் கொள்வனவுகள் நேரடியாக இடம்பெறுவதில்லை. மாறாக அவர்களது நட்பு வட்டாரத்தினர் மூலமாக ஐ.எஸ். அமைப்புக்குக் கொண்டு சேர்க்கப்படுகின்றன.
கார் என அழைக்கப்படும் மோதல் போர்க்கருவிகள் ஆராய்ச்சி நிறுவனமே இது தொடர்பான ஆய்வை மேற்கொண்டிருந்தது.
20 மாத கால ஆராய்ச்சியின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் குறித்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
ஐ.எஸ். அமைப்பினால் பாவிக்கப்படும் 700 விதமான வெடிப்பொருள்களில், ஈராக், குர்திஸ், சிரியா ஆகிய நாடுகளில் இருந்து பெற்றவற்றை மோசோல், கோபான் போர்களின் போது பயன்படுத்தியுள்ளது. 20 நாடுகளில் உள்ள, 51நிறுவனங்கள் வெடிப்பொருள்கள் விற்பனையில் தம்மை அறியாமல் தொடர்பு பட்டுள்ளன. இந்தியா, துருக்கி, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, சீனா, ஐக்கிய அரபு ராச்சியம், பிரேசில், ஈராக் மற்றும் லெபனான் ஆகியனவும் வெடிப்பொருள் விற்பனை நாடுகள் ஆகும்.
மேலும், 7 இந்தியக் கம்பனிகளினூடாக, இந்தியச் சட்டத்துக்கும், பாதுகாப்புக்கும் உட்பட்ட விதத்தில், உரிம அனுமதியுடன் கொள்வனவுகள் இடம்பெறுவதாகக் கார் நிறுவன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் துருக்கி, இந்தியா ஆகிய நாடுகளால் வழங்கப்பட்ட அரசு உரிமத்துடன் நட்பு நாடுகளுக்கு வெடிப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. அந்த நட்பு நாடுகளிலும் இருந்து வேறு தரப்பினரால் சட்ட திட்டங்களுக்கமைய கொள்வனவு செய்யப்படுகின்றன. இறுதியில்ஐ.எஸ். அமைப்பை சென்றடைகின்றது. ஆனால் எந்த நாட்டில் இருந்த அவை கொள்வனவு செய்யப்படுகின்றன என ஐ.எஸ். அமைப்பிற்கு தெரிவதில்லை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
வெடி பொருள்கள் மட்டுமல்லாமல், ஏனைய இலத்திரனியல் சாதனங்களும் இந்திய உற்பத்தியில் இருந்து பயன்படுத்தப்படுவதாக பொதியிடப்பட்ட பையில் இருந்து காணக்கூடியதாக இருந்ததாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக் நிறுவுந கொலை

## விடுத்தது ஐ.எ

வொஷிங்டன், பெப்.27
ஐ.எஸ். அமைப்பு பேஸ்புக், டுவிட்டர் நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று அதிகாரிகளைக் கொலை செய்யப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளது.
கடந்த புதன்கிழமை அமெரிக்கத் தலைமையகம் ஐ.எஸ்க்கு எதிராக உயர் தொழில் நுட்பக் குழுவை நிறுவியதை அடுத்து இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.
ஐ.எஸ். அமைப்பு தமது தகவல் பரிமாற்றங்களைச் சமூக வலைத்தளம் மூலம் நிறைவேற்றுவதால், சமூக வலைத் தளங்கள் ஐ.எஸ். தொடர்பான கணக்குகளை முடக்கிவிடுவதில் அதிக முயற்சி எடுத்துள்ளன.
உயர் தொழில்நுட்பக் குழுவில் சமூக வலைத் தளத்தினரும் இணைக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளில் அவை ஈடுபட்டுள்ளன.
இந்த நடவடிக்கைக்கு மிரட்டல் விடுக்கும் வகையில், வீடியோ ஒன்றை ஐ.எஸ். அமைப்பு வெளியி
அந்த வீடியோவில் பேஸ்புக்
மார்க் சுக்கர்பேர்க்கும், டுவி
நர் ஜக் டொர்சியும் துப்பாக்கி
தால் துளையிடப்பட்டமை
வீடியோ வெளியிடப்பட்டுள்
நேற்றுமுன்தினம் தகவல்
யுள்ளது.
அந்த வீடியோவில், நீங்கள்
இணைந்து எமக்கு எதிரா
புரிகிறீர்கள். ஒவ்வொரு நாளு
இன் பல கணக்குகளை
கள். இதைத்தான் உங்களா
முடியுமா? நீங்கள் எமது
அல்ல எனத் தெரிவிக்கப்
மேலும் நீங்கள் ஒன்றை
நாங்கள் 10 கணக்குகளை
வோம். தற்போது பேஸ்புக் கி
ரம் கணக்குகளையும், 150 கு
களையும், 5 ஆயிரம் டுவிட்
ளையும் கொண்டுள்ளோம்
வீடியோவில் தெரிவிக்கப்பட்

# 3400 வருடங்கள் பழைமை வாய்ந்த சிலையைக் கண்டெடுத்த சிறுவன்

ஜெருசலேம், பெப்.27
இஸ்ரேலைச் சேர்ந்த ஏழு வயதுச் சிறுவனொருவன் 3 ஆயிரத்து 400 வருடங்கள் பழைமை வாய்ந்த சிலையொன்றைக் கண்டெடுத்துள்ளான்.
ஓரி கிறீன்ஹட் எனும் சிறுவன் நண்பர்களுடன் புராதன பிரதேசமான ரெல் றிஹோவ் மலைக்கு நடந்து சென்றபோது தற்செயலாக இதனைக் கண்டெடுத்துள்ளான். மண்ணால் ஆன உள்ளங்கை அளவிலான சிறிய சிலையைஅவன் கண்டெடுத்துள்ளான் எனத் தொல்பொருள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



அதனை வீட்டுக்கு எடுத்து வந்த சிறுவன் அதனைச் சுத்தப்படுத்தி பெற்றோருக்குக் காண்பித்தான், அவர்கள் இது குறித்துத் தொல்பொருள் அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கினர். அவர்கள் இதனை ஆய்வுக் குட்படுத்தி அதன் கால அளவைக் கணித்தனர். இந்தச்சிலை பெண்ணையோ, கடவுளையோ குறிப்பதாக இருக்கலாம் என அவர்கள் தெரிவித்தனர். இந்தக் கண்டெடுப்பு அரிதானதும், தரமானதும் எனதொல்பொருள்ஆய்வாளர்கள்தெரிவித்தனர். (த-ரி4)





# அமெரிக்

## 4 பேர் உயிரி

வொஷிங்டன், பெப்.2
அமெரிக்காவின் கன்
ஏற்பட்ட துப்பாக்கிச் சூ
4 பேர் உயிரிழந்தது
மடைந்துள்ளனர். இ
நேற்று முன்தினம்
ஒன்றில் இடம்பெற்
நிறுவனத்தைச் சார்
வரே இவ்வாறு கண்
தாக்குதலை நிகழ்த்
காரிகள் தெரிவித்த
அந்த நபர் பொலி
கொல்லப்பட்டார்.
துப்பாக்கிச் சூட்டை
வயதான நியூட்டன் எ
காணப்பட்டுள்ளார்.
தனக்கு அருகிலிரு
சரமாரியாகச் சுட்டார்
பேர் கொல்லப்பட்டது
மடைந்தனர். இது மி

# க், டுவிட்டர் நர்களுக்கு ல மிரட்டல்

## எஸ்.

வெளியிட்டுள்ளது.
பேஸ்புக் நிறுவுநர்
ம், டுவிட்டர் நிறுவு
ப்பாக்கிச் சன்னத்
ட்டமை போன்ற
ப்பட்டுள்ளது என
தகவல் வெளியாகி

நீங்கள் அரசுடன்
5 எதிராகப் போர்
ரு நாளும் ஐ.எஸ்
ளை முடக்குகிறீர்
டங்களால் செய்ய
எமது சகாக்கள்
விக்கப்பட்டுள்ளது.
ன்றை அழித்தால்
களை உரு வாக்கு
ஸ்புக் கில் 10 ஆயி
, 150 குழுக்கணக்கு
ம் டுவிட்டர் கணக்கு
ளோம் என அந்த
விக்கப்பட்டுள்ளது.
(த-ரி4)




> ஐ.எஸ். அமைப்பு தமது தகவல் பரிமாற்றங்களைச் சமூக வலைத்தளம் மூலம் நிறைவேற்றுவதால், சமூக வலைத் தளங்கள் ஐ.எஸ். தொடர்பான கணக்கு களை முடக்கிவிடுவதில் அதிக முயற்சி எடுத்துள்ளன.
> உயர் தொழில்நுட்பக் குழுவில் சமூக வலைத் தளத்தினரும் இணைக்கப் பட்டுள்ளனர். இதனையடுத்து ஐ.எஸ். அமைப் புக்கு எதிராக அதிரடி நடவடிக் கைகளில் அவை ஈடு பட்டுள்ளன.

# நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது கிறீஸினூடான அகதிகள் வரவு

## நெருக்கடியில் ஐரோப்பிய ஒன்றியம்

பிரான்ஸ், பெப்.27

அதிகரித்துவரும் அகதிகள் எண்ணிக் கையைச் சமாளிக்க முடியாமல் ஐரோப்பிய ஒன்றியம் திணறி வருகின்றது. இந்த நிலையில் கிறீஸுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது.

ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் உரிய வதிவிடப் பதிவின்றி ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்ததாக அகதி களுக்கான சர்வதேச நிறுவனம் தெரி வித்துள்ளது. அவர்களில் 80 சத வீதத் துக்கும் அதிகமானோர் கிறீஸினூடாக வந்தவர்களாவர்.

உலகின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் நிலவும் பிரச்சினைகளால் உலகப் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள் ளது. இந்த நெருக்கடி நிலைக்கு ஐரோப்பிய நாடுகள் முகம் கொடுத் துள்ளன. இதன் வெளிப்பாடாக ஒஸ்ரி யாவும் ஜேர்மனியும் தமது எல்லை களை மூடியுள்ளன. இந்த நிலையில் அகதிகளின் வரவைக் கட்டுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்து வருகின்றது. அத்துடன் ஐரோப்பிய நாட்டு எல்லைகளின் பாதுகாப்பையும் பலப்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் பிரான்சின் வட பகுதியில் இயங்கும் அகதிகள் முகாமை இயங்கத் தடை விதித்து பிரெஞ்சு நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. கலாஸ் பகுதியில் இயங்கிவரும் 'ஜங்கிள்' எனும் அகதிகள் முகாம் அந்தப் பகுதியில் இயங்கத் தடை விதிக்கப்பட்டதோடு, வேறு இடத்துக்கு மாற்ற உத்தர விடப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கானோர் அப்பகுதியில் இருந்து வெளி யேற ஆரம்பித்துள்ளனர். இவை சாதாரண கூடார வீடுகளாகும். தற் போது கொண்டெய்னர்களில் அடிப் படை வசதிகளுடன், வெப்பமேற்றிகள் பொருத்தப்பட்ட மின்சார வசதியுடைய குடியிருப்புகளில் அவர்கள் குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கலாஸ் பகுதி ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

முந்திய அகதிக் குடியிருப்பை விட போதுமான இடவசதியுடனும், இதர வசதியுடனும் இவை அமைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் ஆயிரக்கணக்கான அகதிகள் சுகாதார வசதிகள் இன்றி வசித்து வருவதாகவும், இதனால் திருட்டுத்தனமாக ஐக்கிய ராச்சியத்துக்கு இடம்பெயர ஆரம்பித் துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது என அவர் மேலும் கூறினார்.

(த-ரி4)





# ரிக்காவில் துப்பாக்கிச் சூடு

## உயிரிழப்பு

, பெப்.27

வின் கன்சாஸ் பகுதியில்
ாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்
ழந்ததுடன் 14 பேர் காய
ானர். இந்தச் சம்பவம்
தினம் வேலைத்தலம்
ம்பெற்றுள்ளது. எக்சல்
தச் சார்ந்த ஊழியரொரு
று கண்மூடித்தனமான
நிகழ்த்தினார் என அதி
ரிவித்தனர். இறுதியாக
பொலிஸாரால் சுட்டுக்
டார்.
சூட்டை நடத்தியவர் 38
ட்டன் என அடையாளம்
ள்ளார். காரில் இருந்து
அகிலிருந்த நபர்களைச்
சுட்டார். அவர்களில் 3
ப்பட்டதுடன் 14 பேர் காய
இது மிகவும் கோரமான

சம்பவம் என எக்சல் நிறுவன நிர்வாகி தெரிவித்துள்ளார். இறுதியாக ஆயுத தாரி, பொலிஸாரால் சுட்டுக் கொல்லப் பட்டார் என அவர் தெரிவித்தார்.

இதில் காயமடைந்த 5 பேரின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகவுள் ளது என மருத்துவமனை வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் மாலை 5 மணி அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற் றது. தாக்குதல் தொடர்பான விசார ணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள் ளது. மேலும் பிரதான சாலையில் அவர் 2 வாகனங்களை மோதியுள் ளார். இறுதியில் புதர்ப் பக்கமாக ஒதுங்கினார். பொலிஸார் அவரைச் சுட்டு வீழ்த்தினர் என பொலிஸ் தரப் பால் தெரிவிக்கப்பட்டது.

(த-ரி4)

# வன்முறையில் முடிந்தது மாணவர்களின் மோதல்

## தென்னாபிரிக்காவில் பல்கலைக்கழகம் தீக்கிரையாகியது

தென்னாபிரிக்கப் பல்கலைக்கழகம் மாணவர்களால் தீயிடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது. பாதுகாவலர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் நிலவிய மோதல் காரணமாக வன்முறை வெடித்தது. இதனால் பலகலைக்கழகத்துக்குத் தீயி டப்பட்டதையடுத்து, பல்கலைக்கழகத்தை மூடுவ தற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு விடு தியில் தங்கிப் படிக்கும் மாணவர்களை உடன டியாக வீட்டிற்கு அனுப்பும்படி அதிகாரிகள் அறிவித்துள்ளனர். வருட இறுதி விடுமுறையின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில், புதிய அங்கத்தவர் தெரிவு இடம்பெற்றது. முடிவைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இதன் அடிப்படையில் மாணவர்கள் இரு பிரிவினராக செயற்பட்டதால் கடந்த புதன் கிழமை மோதல்கள் உருவாகின. நிகழ்வொன்றில் மாணவர் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது எதிர்த் தரப்பினர் அமளியில் ஈடுபட்டனர். இதனால் ஆத்தி ரம் அடைந்த மறுதரப்பினர் அடிதடியில் இறங்கியதால் பெரும் வன்முறைச் சம்பவம் இடம்பெற்றது. பல்கலைக் கழகக் கட்டடங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன. (த-ரி4)

மாபெரும் ஏல விற்பனை
பெற்றோல் மற்றும் டீசல்
வாகனங்களுக்கு
மார்ச் 03ஆம் திகதி
புகையிரத நிலைய வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா
அஜித் - 0773 - 136404
நெலும் - 011 - 5923880
பார்வைக்கு - மார்ச்
01ஆம், 2ஆம் திகதிகளில்
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர்
சி. யமுனானந்தா

# தமிழைத் தேடும் தமிழன்

தமிழ் உலகின் முதன்மொழியாகும். தமிழ் மொழி வரலாற்றுக் காலத்துக்கு முன்பே இந்தோனேசியா தொடக்கம் ஸ்பெயின் வரை வழக்கில் இருந்துள்ளது. குமரிக்கண்டம் கடற் கோளினால் அழிவுற்றபோது, ஆதித்தமிழர் புலம் பெயரத் தொடங்கினர். கடற்கோளினால் மூன்று முறை குமரிக்கண்டம் அழிந்தமை பற்றியும், முதற்தமிழ்ச்சங்கம், இரண்டாம் தமிழ்ச்சங்கம், மூன்றாம் தமிழ்ச் சங்கம் என்பவற்றின் அழிவுகளைப் பற்றியும் வரலாறு பதிகின்றது.

முதற்தமிழ்ச்சங்க அழிவும் புலம் பெயர்வும் கி.மு 15,000 - 12,000 வருடங்களுக்கு முன் நடைபெற்றன. இதன் போது மக்கள் தைக்கிரிஸ் நதிப்பகுதியில் குடியேறினர். இதன்போது நோவா என்பவர் கப்பல்கட்டித் தப்பியமை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. Noah என்பது Navai (நாவாய்) என்ற கப்பலைக் குறிக்கும் சொல்லே. மொழியின் ஒலியியலில் தமிழை நாம் நன்றாக ஆராய்ந்து உறுதிப்படுத்தலாம். இவ்வாறு குடியேறிய மக்களினால் பல மொழிகள் தமிழில் இருந்து தோன்றின. இவையே இன்றைய மேற்காசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் பன்முகத் தன்மைக்குக் காரணமாகும். இந்த உண்மைகள் மக்களுக்குத் தெரிந்தால் வீணே தமக்குள் முரண்பட மாட்டார்கள்.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்றதன் அர்த்தம் யாதெனில், தமிழில் யா என்பது தென் திசையைக்குறிக்கும். யாதும் ஊரே என்பது தென்பகுதியில் அதாவது குமரிக்கண்டத்திலிருந்து வந்த மக்கள் கூட்டத்தைக் குறிக்கும். யாவரும் என்றால் தென்பகுதி மக்களே என விழிக்கின்றது. அதாவது குமரிக்கண்டத்திலிருந்து புலம்பெயர்ந்த மக்கள் தமக்குள் ஒற்றுமையாக இருக்குமாறு கூறுவதாகவும், குமரிக்கண்டத்திலிருந்து வந்த மக்களுக்கு உதவுமாறும் உள்ளது. குறிப்பாக கடற் கோளினால் அழியாத தமிழக மக்களிடையே குமரிக் கண்டத்திலிருந்து புலம்பெயர்ந்த மக் களுக்கு உதவ வேண்டுமென்ற அவா இருந்தமைக்குச் சான்றாக அமைகின்றது. இது இன்றைய ஈழத்தமிழர்களுக்கும் பொருந்தும்.

முதற் கடற் கோளினால் குமரிக்கண்டத்தில் இருந்து மேற்காசியாவில் புலம் பெயர்ந்த தமிழ்மக்களால் உருவாக்கப்பட்ட மொழிகளாக அக்காடியன் மொழி (Acadian), கானனைட் மொழி (Canaanite) அரபு மொழி (Arab), எகிப்திய மொழி (Ethiopian) தன்சானிய மொழி என்பன அமைகின்றன.

இரண்டாம் கடற் கோளின் பின்னர் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள், பபிலோன் சிந்துவெளி என்பவற்றில் வாழ்ந்தனர். சிந்து வெளியில் உள்ள நகரக் கட்டமைப்புக்கள், பூம்புகார் கட்டமைப் புக்களை ஒத்தன. இன்றைய காஸ்மீரின் பூர்வீகக் குடிகளும் இந்த வம்சத்தினரே ஆவர். இவர்கள் பூம்புகார் தமிழை உடையவர்கள். பபிலோனில் வாழ்ந்த மக்கள் சமரில் சமத்தர்கள். இவர்களை சமரியர் Samariyar - Sumeriyar சுமேரியர் என அழைக்கலாயினர். தமிழின் வடிவமே சுமோரிய மொழியாகும். இதில் இருந்து திரிபடைந்ததே எபிரேய மொழி (Hebrew) ஆகும்.

தமிழ்மொழியின் வியாபகத்தை அறிய இன்றைய நாடுகளின் மற்றும் நகரங்களின் பெயர்களில் தமிழ் உள்ள தன்மையை முதலாவதாக அணுகலாம். எருசலேம் - Jerusalem - Yeru salayim, Ur - Shalom ஊர் சாலம் அமையான ஊர் என்ற தமிழ்ப் பெயராகும்.

### தாய்மொழி இனிது, தமிழ் மொழி இன்னும் இனிது ...

ழ்

ஓர் எழுத்து. அதன் தலையில் ஒரு புள்ளி.
தமிழ் மெய்யெழுத்தின் வரி வடிவம் இது.
இப்படி ஒரே வடிவமாக, திருத்தமாக
எந்த இந்திய மொழியிலும் இல்லை.
நாம் அறிந்த வரை,
எந்த சர்வதேச மொழியிலும் இல்லை.
தமிழ்மொழியின் எத்தனையோ சிறப்புகளில்
இதுவும் ஒன்று.




ஜோர்டான் - Jordan - Yaaru - Dan- டான் என்ற இடத்தில் இருந்து வரும் ஆறு என்று பொருள்.

மக்கா Maacah மா கா - பெரிய காடு என்று பொருள்.

இஸ்ரேஸ் - Yisra - el இசை அறா எல் என்று இறைவனுடன் பிரிக்க முடியாத என்ற கருத்து.

Lebanon - லெபனான் Il avan இலவசம் என்ற வெண்மையைக் குறிக்கும் தமிழ்ப் பெயராகும்.

பெய்ரூட் - Beirut - Beeroth எபிரேய மொழியில் சுனையைக் குறிக்கும்.

பெய் நீர் ஊற்று (Pei Neer Oortu) என்பதே பெய்ரூட் ஆகத் திரிபடைந்தது.

அரேபியா Arabia என்பது அரவின் வாய் என்பதன் உருவாக உள்ளது.

பாலஸ்தீனம் என்பது பாலைத் தீ என்பதன் வடிவாக உள்ளது. இன்றைய ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபுல் அன்று காட்டுவெளியாக இருந்தது. காட்டுவெளி - காவெளி Kaveli - Kabul ஆக திரிபு அடைந்தது. Kabul என்பது காட்டுவெளி என எபிரேய மொழியில் குறிப்பிடப்படுகின்றது.

இரண்டாவதாக எபிரேய மொழியில் உள்ள தமிழ்ச் சொற்களின் திரிபுகளை ஆராயலாம். Ahab - என்றால் தேசத்தின் தலைவர் என எபிரேய மொழியில் பொருள். இங்கு Aham Abba என்ற அகம் அப்பா என்ற தமிழ்ச் சொற்களே Ahab ஆக மாறியது. அகம் என்றால் நாடு, அப்பா என்றால் தலைவன். Akkad என்றால் நகரம் என்று பொருள். இது அக்காட்டில் அமைந்த நகரம் எனப் பொருள்படும். அக்காட்டியன் என்பது அங்கு வாழும் மக்களைக் குறிக்கும். Aram என்பது ஊர்ப்பெயர். இது சிதம்பரம் என்பதுபோல் அமைகின்றது.

Jacob என்பது யாகோ, தென்திசை அரசன் என்ற கருத்துடையது.

Benjamin என்பது பின்னவன் Pinnavan என்பதில் இருந்து மருவியது.

Beth என்பது வீடு பதி (Pathi) Peth, Beth ஆக மாறியது.

Beth - el என்பது இறைவனின் வீடு. Seper என்பது புத்தகத்தைக் குறிக்கிறது. இது செப்புதல் என்ற தமிழ்ச் சொல்லே ஆகும்.

El - Iyyah எல் ஐயா- இறைவன் எனப் பொருள் படும். Ye oodi இ ஊரி என்பது Yenude - Yews யூத என உருப் பெற்றது. Ahab -காதல் என பொருள்-அகவு-மனம் எனப் பொருள்படும்.

**எபிரேய மாதங்களில் தமிழின் பிரயோகம்**

1. Nisan Nisi -நிசி இரவு என்ற சொல்லில் இருந்து வந்தது (பங்குனி-சித்திரை)
2. Iyyar Ayyar ஐயா/பெரியவர் என்ற பொருள்(சித்திரை/வைகாசி)
3. Siwan சிவன்-சிவபெருமானைக் குறிக்கும் பெயர்.(வைகாசி- ஆனி)
4. Tammuz தமிழ்-தமிழைக் குறிக்கும் பெயர். (ஆனி-ஆடி)
5. Ab -Abba - தந்தையைக் குறிக்கும். (ஆடி-ஆவணி)
6. Elul-Ezhil -எழில்-அழகு (ஆவணி-புரட்டாதி)
7. Tishri-Thisai -திசை(புரட்டாதி-ஐப்பசி)
8. Morhesshwan Maarivaanam - மழைமேக வானம். (ஐப்பசி- கார்த்திகை)
9. Kiselu Kachalan -கறுப்பு (கார்த்திகை-மார்கழி)
10. Tebet Thai தை மாதம் (மார்கழி/தை)
11. Sheba-Sivappu சிவப்பு (தை-மாசி)
12. Adar அடர் தடித்த (மாசி-பங்குனி)

> முதற்தமிழ்ச் சங்க அழிவும் புலம் பெயர்வும் கி.மு 15,000 - 12,000 வரு டங்களுக்கு முன் நடைபெற்றன. இதன் போது மக்கள் தைக்கிரிஸ் நதிப்பகுதியில் குடியேறினர். இதன்போது நோவா என்பவர் கப்பல்கட்டித் தப்பியமை பற்றிக் குறிப்பிடப் படுகின்றது.


எபிரேய மொழி தமிழில் இருந்து தோன்றியதன் முக்கியத்துவத்தை இஸ்ரேல் அரசுக்கு உணர்த்த வேண்டும். தமிழ் மக்களுக்கு, குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் கிடைக்க இஸ்ரேல் உதவ வேண்டும். அடுத்து, மத்திய கிழக்கில் அமைதி ஏற்பட இஸ்ரேல் அரசு தனது இன வம்சத்தை அறிந்து கொள்ள வேண்டும். இன்று ISIS எதிர் தீவிர வாதத்தாலும் ISIS தீவிர வாதத்தாலும் பண்டைய வரலாறு அழிக்கப் படுகின்றது. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பது இன்றைய தண்போர் சூழலில் சாலவும் பொருந்தும்.

அடுத்து, நீர் என்ற சொல் நோச ஆற்றைக்குறிப்பதாக எகிப்திய மொழி, அரபுமொழி, காஸ்மீர் மொழியில் உள்ளது. காஸ்மீர் மக்கள் ஆற்றை அண்டி வாழ்ந்தவர்கள். Nehuru சாதியினர் எனக்குறிப்பிடப் பட்டனர். இந்தியாவின் முதற் பிரதம மந்திரியான ஜவகர்லால்நேருவும் தமிழ் வம்சமே. துரதிஸ்டவசமாக இலங்கையில் தமிழர்கள் பிரஜா உரிமை இழக்க அவர் துணை போயினார். விடுதலைக்காகப் போராடும் காஸ்மீர் பூர்வீக மக்களும் குமரிக்கண்டத்தைச் சேர்ந்தவர்கள். எனவே யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பது காஸ்மீர் மக்களுக்கும் பொருந்தும். மத ஒற்றுமையை வலியுறுத்த ஜேசு என்பது Yesu Esan ஈசன் என்ற சொல்லில் இருந்து வந்தமையையும் அல்லா என்பது அல் ஆள் உருவமில்லாதவர் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்தமையும் எடுத்துக் காட்டலாம்.

தமிழைத் தேடும் தமிழன் உலக மொழிகளில் புதைந்துள்ள தமிழை வெளிக் கொணரும் காலம் இது. இதன்மூலம் பண்டைத்தமிழின் சிறப்பை வெளிக் கொணரலாம். மானிடத்தில் மேன்மைக் குரிய வரலாற்றுத் தத்துவத்தை உலகுக்கு அளிக்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று

ஏழாம் தர மாணவர்களுக்காக வெளிவந்துள்ள தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் நூலில் 76ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள இப்பாடல்களுக்கான அரும் பதங்கள் பட்டியலில், பாடலில் சொல்லப்பட்ட கழுநீர்மலர் குறித்த விளக்கம் தரப்படாமல் கழுநீர் என்ற சொல்லுக்கான விளக்கமாகி அரிசி கழுவிய நீர் அல்லது கொதிக்க வைத்து வடித்த நீர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கழுநீர்மலர் என்பதன் பொருள் இங்கே நீரின்மேல் மலரும் செங்கழுநீர் மலரையே குறிக்கிறது. இதனை மனங்கொள்ளாமை வருத்தமளிக்கிறது. இலக்கியம் என்பது நயத்தலுக்கும் இரசித்தலுக்கும் உரியது என்பதையும் புறந்தள்ளுகிறது.

செ.மகேஷ்

ஈசன் உவக்கும் இன்மலர்கள் இவைதாம் என்றேத்தி, ஈசன் மகிழ்ந்து ஏற்கின்ற விருப்பத்துக் குரிய மலர்கள் இவையே என்றிசைக்கிறார் சுவாமி விபுலானந்தர். முத்தமிழ் வித்தகரான விபுலானந்தர் இயற்றிய இப்பாடல்கள், நாம் இறைவனை வணங்கும் தோறும் எமது நினைவிலெழுந்து இறைவன் உவக்கும் இன்மலர்கள் மூன்று பற் றிய தெளிவை எளிமையாக இசைக்கின்றன பாடலைச் சுவைபெற வைக்கும் மொழியின் எளிமையும் இனிமையும் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

இது விபுலானந்தர் விதந்துரைத்த ஈசன் உவக்கும் முதலாவது மலர்.
வெண்மை நிறங்கொண்ட மல்லிகைப் பூவோ? அல்லது சுகந்த மணம்விரிந்த வேறேதும் மலரோ? இவற்றுள் எது நாங்கள் கேட்டதை வழங்கும் கொடை வள்ளலாகிய இறைவனுக்கு விருப்பமானது? என்று வினாவெழுப்பி விடை தேடுகிறார் விபுலானந்தர்.
தொடர்ந்து அதற்கு விடையாக வெண்மை நிறங் கொண்ட பூக்களை அல்ல, வேறெந்த மலர்களையுமோ அல்ல, கமலமென்றுரைக்கும் தாமரைமலர் போன்று விரிந்து- திறந்த பொய்மையற்ற மனமே அதி உத்தமரான இறைவன் விரும்புவது என்கிறார்.

காப்பவிழ்ந்த மாமலரோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த
மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
சுவப்பியகைக் காந்தளடி கோமகனார்
வேண்டுவது.

இது விபுலானந்தர் அறிந்துரைத்த இறைவன் விரும்பும் இரண்டாவது மலர்
மொட்டவிழ்ந்த பெரிய அழகிய பூவோ! நீரின் மேல் மலருகின்ற செங்கழுநீர் மலர்களால் ஆக்கப்பட்ட மாலையோ உலகின் தலைவராய் வந்தொளிரும் இறைவனுக்கு வாய்ப்பான மலர் எது? எனக் கேள்வி எழுப்பி விடை கண்டபோது,
மொட்டு விரிந்த மலரெதையுமல்ல, செங்கழுநீர் மலர்களாலான மாலையையுமல்ல, இறைவனைப் பக்தியோடு கூப்பும் கார்த்திகைப் பூப் போன்ற வடிவமாகிய கும்பிட்ட கரங்களையே உலகினரால் உயர்ந்தவராகக் கருதப்படும் இறைவன் விரும்புகிறார் என்கிறார் விபுலானந்தர்.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக்
கற்பகமோ
வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ

பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப்
பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது


இது விபுலானந்தர் அறிந்துரைத்த இறைவன் விரும்பும் மூன்றாவது மலர்.
வண்டுகள் பாடி மொய்க்கின்ற விரிந்த பொற்கொன்றை மலரோ? உலகத்திலே இல்லாத தேவலோகத் தாவரமாகப் போற்றப்படும் கற்பகச் செடியின் பூவோ என ஐயுற்ற நிலையில் மலர்ந்த முகம் காட்டும் இறைவனுக்கு விருப்பமான பூ இவற்றுள்ளே எதுவாக இருக்கலாம்? எனத் தனக்குள்ளேயே கேட்டு உண்மையைத் தேடும் விபுலானந்தரிடமிருந்தே மறுமொழியாக,
வண்டுகள் மொய்க்கின்ற பொன் நிறத்தையுடைய திருக் கொன்றை மலரையல்ல, உலகத்திலே இல்லாததும் சொர்க்கலோகத் தாவரமுமான கற்பகத்தின் பூவையுமல்ல தலைவனாகிய இறைவனில் நாட்டமுற்று வணங்குகின்ற அல்லி மலர்க் கண் பார்வையையே உலக நாயகனாகிய இறைவன் விரும்புகிறார் என்கின்றார் விபுலானந்தர்.
இப்பாடல்கள் மூன்றும் தமிழ் மொழியின் இலக்கியப் பெருமைகளை நயந்து வியந்து கற்பதற்காகப் பாடப் புத்தகங்களிலும் சேர்க்கப்படுதல் வழமையானதே எனினும், தொடரும் காலங்களில் அவற்றின் இலக்கியச் சிறப்புக்கள் குன்றும் வகையில் கற்பித்தலும் கற்றலும் தமிழ்மொழி இலக்கியத்தின் சிறப்பையும் வளர்ச்சியையும் சிதைப்பதாகும் .
ஏழாம் தர மாணவர்களுக்காக வெளிவந்துள்ள தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் நூலில் 76ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள இப்பாடல்களுக்கான அரும்பதங்கள் பட்டியலில், பாடலில் சொல்லப்பட்ட கழுநீர்மலர் குறித்த விளக்கம் தரப்படாமல் கழுநீர் என்ற சொல்லுக்கான விளக்கமாகி அரிசி கழுவிய நீர் அல்லது கொதிக்க வைத்து வடித்த நீர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
கழுநீர்மலர் என்பதன் பொருள் இங்கே நீரின்மேல் மலரும் செங்கழுநீர் மலரையே குறிக்கிறது. இதனை மனங்கொள்ளாமை வருத்தமளிக்கிறது. இலக்கியம் என்பது நயத்தலுக்கும் இரசித்தலுக்கும் உரியது என்பதையும் புறந்தள்ளுகிறது.
ஆசிரியர்கள் கற்பிக்கும்போது உரிய முறையில் தாமும் நயந்து தமிழைக்கற்பிக்காவிடில் மாணவர்கள் எவ்வாறு நயந்து கற்கப் போகிறார்கள்? அவ்வாறே இத்தமிழ் நூலை ஆக்கிய ஆசிரிய குழுவினர் ஒவ்வொருவரும் நூலில் சேர்க்கப்படும் ஒவ்வொரு ஆக்கங்களையும் ஆய்ந்து நயந்து மகிழ்ந்து நூலில் சேர்க்காது விடின், தமிழ் மொழியின் சிறப்புக்கள் அழிவுறும் சாத்தியம் உள்ளதெனலாம்.
இந்தப் புத்தகம் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. புத்தகத்தை உருவாக்குவதற்கான கண்காணிப்பையும் அவரே மேற்கொண்டுள்ளார்.
இந்தத் தமிழ்ப் புத்தகத்தை உருவாக்குவதற்கான வழிகாட்டலை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் அபிவிருத்தி ஆணையாளர் திருமதி கே.வீ.நந்தினி சிறியலதா வழங்கியுள்ளார். திணைக்களத்தின் பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர் லெனின் மதிவானத்தின் இணைப்பாக்கத்துடன் இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்வியியல் கல்லூரி ஓய்வு பெற்ற மூத்த விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன், மாத்தளை கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் என். அருளானந்தம், கண்டி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.ரதி தேவசுந்தரம், கிண்ணியா ம.வி. தாருள் உலூம் பாடசாலை ஆசிரியர் ஜனாப் ஆர்.சதாத் ஆகியோர் இணைந்து இந்தப் பாடப் புத்தகத்தை உருவாக்கியுள்ளனர். இதன் பதிப்பாசிரியர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபனும், சிறிபாத கல்வியியல் கல்லூரி துணைப் பீடாதிபதி வ.செல்வராஜாவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர் லெனின் மதிவானமும், தேசிய கல்வி நிறுவன மூத்த விரிவுரையாளர் எம்.தயாநிதியும் கூடக் கடமையாற்றியுள்ளனர் என்பது கவனத்துக்குரியது.
மேலும் மூன்றாவது பாடலில் பாட்டளிசேர் கொன்றையோ என அச்சிடப்பட்டதன் மூலம் பொற் கொன்றையோ என்ற சொல் கொன்றையோ என்ற விகுதியை மாத்திரம் பெற்று விபுலானந்தரின் கவிதையிலிருந்த முழுமையைக் குறைக்கிறது என்பதுவும் கவனிக்கப்படவில்லை.
விபுலானந்தரின் இறவா வரம் பெற்ற கவிதைகள் இவை. இவற்றில் கவிதைக்குரிய ஓசையைக் குலைக்கும் வகையில் புணர்ச்சிகளைத் தவிர்த்து விரித்தெழுதி இருப்பது கவிதைச் சிறப்பைக் கெடுக் கும் செயல் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும் .
தமிழ் மொழியும் இலக்கியமும் எமது மொழியின் இரண்டு கண்கள் என்பதை உணர்வோம். அவை சிதைவுறாது பேணப்படுவதும், வளர்க்கப்படுவதும் அவசியமாகும் திணைக்களத்தினரால் வெளியிடப்படும் தமிழ்மொழிப் பாட நூல்களைத் தமது கவனத்திற் கொண்டு குறித்த துறை சார்ந்தோர் தமிழின் மேன்மை குலையாமல் பாதுகாக்க முயல வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டுபிடிப்புக்களும், கண்டுபிடித்தவர்களும்

1.செயற்கை இறப்பரைக் கண்டுபிடித்தவர் யார்?
- குஸ்டீவ்வான் சார்டெட், 1827.
2.மயக்க மருந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
- மோட்டன் மற்றும் ஜாக்ஸன்.
3.கதிரியக்கச் செயலைக் கண்டறிந்தவர் யார்?
- ஹென்றி பெக்கோரல், 1896.
4.ரேயானை முதன் முதலில் கண்டுபிடித்தவர் யார்?
- கார்டனேட்.
5.மின் விளக்கைக் கண்டுபிடித்தவர் யார்?
-தோமஸ் அல்வா எடிசன், 1878.
6.அசைவின் சட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
- ஐசாக் நியூட்டன்.
7.அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் யார்?
- ஜெ.ராபர்ட் ஓப்பன்ஹைமர்,1945.
8.புன்சன் அடுப்பைக் கண்டுபிடித்தவர் யார்?
- வில்ஹெம் வான்பன்சன், 1855 (ஜேர்மனி)
9.விமானத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
- ஆர்வில் வில்பர்ரைட் சகோதரர்கள் 1903
10.திருடர் எச்சரிப்புக் கருவியைக் கண்டுபிடித்தவர் யார்?
- எட்வின் டி.ஹோம்ஸ், 1858.
11.டீசல் என்ஜினைக் கண்டுபிடித்தவர் யார்?
- ருடோலஃப் டீசல் 1895. (ஜேர்மன்)
12.கண்ணாடியைக் கண்டுபிடித்தவர் யார்?
- ஆக்ஸ்பர்க், 1080 (ஜேர்மனி)
13.மிதிவண்டியைக் கண்டுபிடித்தவர் யார்?
- கிர்க்பாடிரிக் மாக்மிலென், 1839-40 (பிரிட்டன்)
14.சினிமாவைக் கண்டுபிடித்தவர் யார்?
- லூயி பிரின்ஸ், 1885 (பிரான்ஸ்)
15.லேசரைக் கண்டுபிடித்தவர் யார்?
- T.H.மைமா, 1960.
16.குளோரினைக் கண்டுபிடித்தவர் யார்?
- K.ஷீல்லி, 1774.
17.அலுமினியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
- F.ஹோலர், 1827.
18.கல்சியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
- H.டேவி, 1808.
19.ஐதரசனைக் கண்டுபிடித்தவர் யார்?
- H.கேவண்டிஸ், 1766.
20.பொஸ்பரஸைக் கண்டுபிடித்தவர் யார்?
- H.பிராண்ட், 1669.

## பேராசைக்காரன் கற்ற பாடம்



முன்னொரு காலத்தில் மிகுந்த செல்வம் படைத்த ஒருவன் ஒரு கிராமத்தில் வாழ்ந்தான். அவன் வீதியை அடுத்துள்ள பெரிய மாளிகையில் வசித்துக் கொண்டிருந்தான். அவனுடைய வீட்டுக்கு வெளியே ஒரு பெரிய மரம் உயரமாய் வளர்ந்திருந்தது.

ஒரு நாள் ஏழை ஒருவன் அந்த மரத்து நிழலில் இளைப்பாறிக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் அந்தச் செல்வனும் நிழலுக்காக அம்மரத்தடியில் ஒதுங்கினான்.

"டேய்! உன்னைத்தான், நீ இங்கு இளைப்பாற முடியாது. எழுந்திருந்து அப்பாற்செல்!" என்று அந்தச் செல்வன் அதட்டினான்.

"நான் எதற்காக எழுந்திருக்க வேண்டும்? நான் இங்கு ஓய்வு பெற விரும்புகிறேன்" என்று ஏழை பதில் கூறினான்.

"இது எனது மரம். ஏனெனில் நான்தான் இந்த மரம் இவ்வளவு பெரிதாய் வளரும் வரையில் இதற்குத் தண்ணீர் ஊற்றி வளர்த்தேன். ஆகையால் அந்த மரத்தின் நிழலும் எனக்குத்தான் சொந்தம்" என்று செல்வன் உரிமை கொண்டாடி னான்.

"அப்படியானால் மரத்தின் நிழலை எனக்கு விற்று விடுங்கள். அதற்கான விலையை நான் கொடுத்துவிடுகிறேன்" என்று ஏழை சொன்னான். நிழலைவிற்றால் பணம் கிடைக்கும் என்று செல்வன் பல்லை இளித்தான்.

"மிகவும் சரி அதை உனக்கு விற்றுவிடுகிறேன்!" என்று கூறினான்.

மூன்று நான்கு பேர் கூடி மத்தியஸ்தம் பேசி விலை நிச்சயமானவுடன் நிழல் விற்கப்பட்டது.

அதற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் அந்த ஏழை அந்த மரத்து நிழலில் இளைப்பாறினான். சில சமயம் மர நிழல் முற்றத்தில் விழும். வேறு சில சமயங்களில் நிழல் சமையலறைக்குள் விழும். மரத்தின் நிழல் எங்கெல்லாம் விழுகிறதோ அங்கெல்லாம்ஏழை சென்று ஓய்வு பெற்று வந்தான். சில சமயங்களில் நிழல் செல்வன் அமர்ந்திருக்கும் அறையில் விழுந்தது. அதனால்நிழலைத்தொடர்ந்துஏழை, பணக்காரனின் வீட்டினுள் சென்றான்.

சில சமயம் நிழலின் சுகத்தை ஏழை மட்டும் அனுபவித்தான். ஆனால் அநேக சந்தர்ப்பங்களில் அவன்தன் நண்பர்கள் அவர்களுடைய கோவேறு கழுதைகள் மற்றும் பிற பிராணிகள் ஆகியவற்றோடு நிழலில் தங்கத் தொடங்கினான்.

இம்மாதிரி உரிமையுடன் ஏழை தனது வீட்டுக்குள் வந்து நிழலை அனுபவிப்பதைப் பணக்காரனால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. "ஏய் என்னுடைய முற்றத்திலும் வீட்டுக்குளும்வந்து ஓய்வுகொள்ள அவ்வளவு துணிவா உனக்கு? நீ அவ்வாறு செய்யலாகாது. நான் சொல்கிறது உன் காதில் விழுகிறதா?" என்று கோபத்துடன் கேட்டான், செல்வன்.

"நிழலுக்கு நான் பணம் கொடுத்திருக்கிறேன். நிழல் சாயுமிடமெல்லாம் சென்று நான் ஓய்வு பெறுவேன்"என்று ஏழை பதிலளித்தான்.

அதைக் கேட்ட செல்வன் கோப மிகுதியால் பொங்கி எழுந்தான். ஆனால் அவனால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. ஏனெனில் நிழலை அவன் விற்றுவிட்டான் அல்லவா?

ஒருநாள் செல்வன் தன் வீட்டில் தன் நண்பர்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருந் தான். அந்தச் சமயம் ஏழை அங்கே நுழைந்து நிழலிருக்குமிடம் பார்த்து உட்கார்ந் தான். "இதென்ன விசித்திரமாயிருக்கிறதே" என்று விருந்தினர்கள் வியப்புற்றனர். ஆனால் செல்வன் நிழலை விற்றுவிட்டான் என்பதை அறிந்ததும் அவர்கள் நெடுநேரம் வாய்விட்டுச் சிரித்தனர்.

அந்தச் சிரிப்பைச் செல்வனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே தான் அவ்வூரில் மேலும் வசித்தால் மானம் போய்விடுமென அஞ்சி செல்வன் வேறொரு கிராமத்துக்குச் சென்று குடியேறினான்.

ஏழை அ செல்வன் வீட்டில் வந்து வசித்தான். தனது கோவேறு கழுதையைக் குதிரை இலாயத்தில் கட்டினான்.

அதன்பின் அந்த மர நிழலில் எவர் தங்கினாலும் அவன் அவர்களைத் தடைசெய்வதில்லை.

## வரலாற்றில் இன்றைய தினம்

1594 - பிரான்சின் அரசராக நாலாம் ஹென்றி முடி சூடிக் கொண்டார்.
1782 - அமெரிக்காவில் மேலும் போர் புரிவதற்கு எதிராக பெரிய பிரித்தானிய மன்றம் வாக்களித்தது.
1844 - ஹெயிட்டியிடமிருந்து டொமினிக்கன் குடியரசு சுதந்திரம் அடைந்தது.
1898 -கிறீஸ் அரசர் முதலாம் ஜோர்ஜ் படுகொலை முயற்சியிலிருந்து தப்பித்துக் கொண்டார்.
1921 - சர்வதேச சோஷலிஸ்ட் கட்சி தொழிலாளர் சங்கம் வியன்னாவில் தொடங்கப்பட்டது.
1951 - இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்கலாம் என வரையறை செய்யும் அமெரிக்க அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
1964 - பைஸா சாய்ந்த கோபுரம் வீழ்வதைத் தடுக்க இத்தாலிய அரசு உதவி கோரியது
1991 - வளைகுடாப் போர்; அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ், குவைத் விடுவிக்கப்பட்டதாக அறிவித்தார்.
1992 - 128 சிங்களக் குடும்பங்கள் கொக்கிளாயில் குடியேற்றம்.
1993 - 22வருட பேராயர் சேவையின் பின்னர் அருட்திரு டி.ஜே.அம்பலவாணர் இளைப்பாறினார்.
2002 - கோத்ரா புகையிரத எரிப்பு; அயோத்தியிலிருந்து வந்துகொண்டிருந்த புகையிரதத்துக்கு முஸ்லிம் குழு ஒன்று தீ வைத்ததில் 59 இந்து யாத்திரிகர்கள் சாவு.
2010 - சிலி மத்திய பகுதியைத் தாக்கிய 8.8 அளவிலான புவியதிர்ச்சியில் 500 பேர்வரை சாவு. ஆயிரம் பேர் வரை காயம்.
2014- ஜெனிவாத் தீர்மானத்தில் சுந்திரமான விசாரணையை உறுதிப்படுத்தியது பிரிட்டன்.
2014 - மனித உரிமை குறித்து அரசு - சர்வதேச சமூகம் கூட்டு விசாரணைக்கு தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை

## வர்ணம் தீட்டுவோம்... வாங்க....



## தமிழ்மொழி



அகிலம் போற்றும் இனிய மொழி
அகரம் முதலாய் கொண்ட மொழி
மகிழ்ந்தே பாவலர் பாடும் மொழி
மூவகை அழகு நிறைந்த மொழி!

கல்லும் தோன்றாக் கால மொழி
கவினார் சங்கம் கண்ட மொழி
பலவகை இலக்கணம் பெற்ற மொழி
பல்சுவை இலக்கியம் படைத்த மொழி

குடிமக்கள் காப்பியம் சொன்ன மொழி
குழந்தை முருகன் காத்தமொழி
முடி மன்னர் மூவர் வளர்த்த மொழி
வள்ளுவர் குறளில் ஒலித்த மொழி

செந்தமிழ் மக்கள் பேசும் மொழி
செழிப்புறு பாடல்கள் உள்ள மொழி
இந்த மண்ணில் காணும் மொழி
இனிமை பூத்த தமிழ் மொழியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் நிறுத்தத்தால் சிரியாவில் அமைதி ஏற்பட வாய்ப்புண்டா?

அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் ஏற்பாட்டிலான போர் நிறுத்தம் இன்று சனிக்கிழமை முதல் சிரியாவில் நடைமுறைக்கு வருகிறது. இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் அமைப்பையும் மற்றும் சுனி தீவிரவாத அமைப்பு ஒன்றையும் தவிர்த்து சிரியாவில் போரில் ஈடுபட்டுள்ள தரப்பினர் அனைவரும் போர் நிறுத்தத்துக்கு இணங்கியிருப்பது ஐந்து வருடகால சிரியப் போருக்கு முடிவு காண்பதற்காக ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க ராஜதந்திர நடவடிக்கையாகும். போர் நிறுத்தத்தை ஏற்பாடு செய்த வல்லரசு நாடுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் எதிர் எதிரான தரப்புகளுக்கு ஆதரவாக உள்ளதாலும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் மற்றும் ஒரு சுனி இஸ்லாமிய தீவிரவாத அமைப்பும் போர் நிறுத்தத்தில் சம்பந்தப்படாததாலும் இன்று அமுலுக்கு வரும் போர் நிறுத்தம் முழுமையான பலனை அளிக்குமா, சிரியாவில் அமைதி ஏற்படுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

ஜனாதிபதி அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சிப் படைகள் வசமிருந்த சில நகரங்களை அஸாத்துக்கு ஆதரவான சிரிய அரச படைகள் கைப்பற்றிய நிலையில் போர்நிறுத்தம் நடைமுறைக்கு வருவது ஜனாதிபதி அஸாத்துக்குச் சாதகமான நிலையை உருவாக்கியுள்ளது. போர் நிறுத்தம் தாமதம் அடையுமானால் அஸாத்துக்கு ஆதரவான படைகள் மேலும் சில இடங்களைக் கைப்பற்றலாம். இப்படியான நிலையிலேயே அமெரிக்கா போர் நிறுத்தத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளது. சிரியாவில் அரசியல் தீர்வை அமெரிக்கா வலியுறுத்துவதால் அரசியல் தீர்வுக்கு போர்நிறுத்தம் முதலாவது படியாகக் கருதப்படுகிறது. அஸாத்தின் ஆட்சியைத் தக்க வைப்பதில் ரஷ்யா உறுதியாக இருக்கிறது. அதனால் போர்நிறுத்தம் ஏற்பட்டாலும் அதன் அடுத்த படியான அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் வெற்றி அளிப்பதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன.

இதில் நாம் நம்பிக்கை வைப்பதில் அவதானமாக இருக்கவேண்டும். என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சிரிய போர்நிறுத்தம் குறித்துக் கருத்து வெளியிட்டிருப்பது இனிவரக்கூடிய நெருக்கடிகளை கோடிட்டுக் காட்டுகிறது. போர் நிறுத்தம் முறிவடைந்து மீண்டும் போர் ஆரம்பமானால் ஜனாதிபதி அஸாத்தின் அரச படைகளின் கை ஓங்குவதற்கான சாத்தியங்களே அதிகமாக உள்ளன. பதவியின் இறுதிக்காலத்தில் இருக்கும் பராக் ஒபாமாவின் வெளிநாட்டுக் கொள்கைக்குத் தோல்வியாக இது கருதப்படலாம். அதனால்தான் மிகவும் அவதானமாக இந்தப் போர் நிறுத்தத்தை முன்னெடுக்கிறது அமெரிக்கா. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மற்றும் சுனி ஆதரவு இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிரான போரை அமெரிக்காவும் ரஷ்யாவும் தொடர்ந்து நடத்தப்போகின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் அதற்கு ஆதரவான தீவிரவாத ஆயுதக் குழுக்களும் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் சிரியாவிலும் ஈராக்கிலும் பெரும் அளவு பகுதியைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.




அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து சிரியாவிலும் ஈராக்கிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். படைகளுக்கு எதிராக வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ரஷ்யா கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் வான் தாக்குல்களை நடத்தி வருகிறது.

சிரியப் பிரச்சினையில் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுக்கு எதிரான போரைத் தொடருவதிலேயே அதிக ஆர்வம்காட்டி வருவதால், ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் தோற்கடிக்கப்பட்ட பின்பு சிரிய அரச ஆதரவு, எதிர்ப்புப் படைகள் மீண்டும் போரில் இறங்கும் சாத்தியங்களே அதிகமாக உள்ளன. அஸாத்தின் பதவி குறித்து இரு வல்லரசு நாடுகளும் முரண்பாடான நிலைப்பாட்டில் இருப்பதே சிரியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் ஏற்பட்டுள்ள கவலைகளுக்குக் காரணமாகும்.




# தீப்பெட்டியில் கலை வண்ணம்

■ ஆகாஷ்

கையிலே கலை வண்ணம் என்பது போல, தீப் பெட்டியில் கைவண்ணம் என்கிறார் ஸ்ரேயா கத்தூரி. அவரது இன்ஸ்டாகிராம் பக்கமான ஆர்ட் ஒன் எ பொக்ஸ் பகுதிக்குச் (https://www.instagram.com/artonabox/) சென்றால் இதன் அர்த்தத்தை பளிச்செனப் புரிந்துகொள்ளலாம். அப்படியே தீப்பெட்டிகளின் அழகிலும் மெய்மறந்து நிற்கலாம். ஆம், ஸ்ரேயா தீப்பெட்டிப் படங்களை ஆர்வத்துடன் சேகரித்துவருபவர். இப்படிதான் சேகரிக்கும் தீப்பெட்டிப் படங்களை அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கம் மூலம் பகிர்ந்துகொண்டு வருகிறார்.

அடடா! தீப்பெட்டிகளின் மீது இடம்பெறும் படங்கள்தான் எத்தனை அழகாக இருக்கின்றன. அவற்றின் வகைகள்தான் எத்தனை! இந்த வியப்பைத்தான் அவரது இன்ஸ்டாகிராம் பக்கம் உண்டாக்குகிறது.

தீப்பெட்டிகளைச் சாதாரணமாக நினைத்துவிட முடியாது என்கிறார் ஸ்ரேயா. அவை பல உணர்வுகளை, செய்திகளை வெளிப்படுத்துவனவாக உள்ளதாகவும், அவற்றை வெறும் பெட்டிகளாகப் பார்க்க, தான் தயாராக இல்லை என்றும் ஒரு பேட்டியில் உற்சாகமாகக் கூறியிருக்கிறார். தீப்பெட்டிகள் பரப்புரைச் சாதனமாக, விளம்பர வாகனமாகப் பயன்படலாம் என்கிறார்.

தீப்பெட்டியின் மேலே இருக்கும் ஒவ்வொரு படமும் மேலும் ஆழமான ஒன்றை, கனவின் கதைகளை, தினசரிப் பொருள்களின் கதைகளை, சமூகத்தின் மனப்போக்கைப் பேசுவதாக அவர் சொல்கிறார்.

> ஆழமான ஒன்றை, கனவின் கதைகளை, தினசரிப் பொருள்களின் கதைகளை, சமூகத்தின் மனப் போக்கைப் பேசுவதாக அவர் சொல்கிறார்.

இந்தியா முழுவதும் வெளியாகும் தீப்பெட்டிகளில் உள்ள படங்கள் பெரும்பாலும் கடவுளின் உருவங்களைக் கொண்டிருக்கின்றன என்றாலும் வேறு சில விடயங்களையும் அலங்கரிக்கின்றன. குடியரசு தின வாழ்த்துடன், இந்திய தேசியக்கொடிப் படம் கொண்ட தீப்பெட்டிச் சித்திரம் மற்றும் ராஜஸ்தான் சுற்றுலாத்துறை விளம்பரம் தொடர்பான குறிப்புடன் ராஜஸ்தான் அரண்மனைப் பட தீப்பெட்டிச் சித்திரத்தை அவர் பகிர்ந்து கொண்டுள்ளதைப் பார்க்கும் போது தீப்பெட்டிக் கலை என்பது எத்தனை பரந்துவிரிந்தது என்பது மட்டும் அல்ல, எம் நாட்டின் இயல்பை அவை எப்படிப் பிரதிபலிக்கின்றன என்பதையும் உணர முடிகிறது.

ஸ்ரேயாவின் ஆர்வத்தை அறிந்து அவரது உறவினர்களும் நண்பர்களும் எங்கே சென்றாலும் தீப்பெட்டிகளைச் சேகரித்து வந்து தருகின்றனராம். அதோடு இன்ஸ்டாகிராம் பக்கம் மூலம் உலகம் முழுவதும் உள்ளவர்களும் அவருடன் தீப்பெட்டிக் கலையைப் பகிர்ந்து கொண்டு வருகின்றனராம்.

எல்லாம் சரி, ஸ்ரேயாவுக்கு எப்படித் தீப்பெட்டிக் கலை மீது ஆர்வம் வந்தது? சில ஆண்டுகளுக்கு முன் இதழியல் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தபோது, தீப்பெட்டிப் படங்கள் உணர்த்தும் செய்தி எனும் தலைப்பைத் தேர்வு செய்திருக்கிறார். அப்போது தொடங்கிய தீப்பெட்டிச் சேகரிப்பு இப்போது இன்ஸ்டாகிராமில் விரிவாக்கம் பெற்றுள்ளது.

## உறவுகளுக்குக் கை கொடுப்போம்

ஆண்டவர் இயேசு எமது பாவங்களுக்காக சிலுவைப் பலி ஆக்கப்பட்ட தியாகக் கொடையை நினைவுகூரும் மற்றுமொரு தவக்காலத்தில் நாம் கால்பதித்துள்ளோம். இந்தக் காலத்தில் எம்மிடமுள்ள தீய பழக்க வழக்கங்களை விட்டு செப. தவவாழ்வு வாழ்வதே எமது பாவங்களைக் களைவதற்கான வழி எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றுடன் மாமிசத் தவிர்ப்பு, ஒரு நேர உணவு எனப் பல வழிகளிலும் எமது பாவங்களைப் போக்கப் பாடுபடுகின்றோம்.

(நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை. தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. அந்நியனாக இருந்தேன் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. மத்:2545)




இவைகள் அனைத்தும் போர் முடிந்தும் பல வருடங்களைக்கடந்தும் எம் உறவுகளுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பியல் நிகழ்வுகள். உணவு, உடை, இருப்பிடம், கல்வி, தொழில் வாய்ப்புக்கள் ஏதும் அற்ற ஏதிலிகளாக எம் உறவுகள் வாடுவதா? இந்தத் தவக்காலத்தில் இவர்களைப்பற்றிச்சிந்திப்போமா? இயேசுவுக்குள் பிரியமானவர்களே, சிந்தித்தால் மட்டும் போதாது. எம்மால் இயன்றவரை இவர்களுக்கு உதவி செய்ய புனித தவக்காலத்தைப் பயன்படுத்துவோம். நாம் எல்லோரும் இயேசுவின் பிள்ளைகள். அவருக்கு உகந்தவர்களாக வாழ இந்தத் தவக்காலத்தைப் பயன்படுத்துவோம்.

ந.மரியதாஸ் நாயகம்,
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** விலகிச் சென்ற எதிரியும் நெருங்கி வருவார். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**இடபம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடப் படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக் கேற்ப முன்னேற்றம் உண்டாகும். வெளியூர்ப் பயணத் திட்டத்தில் திடீர் மாறுதல் ஏற்படும். மாண வர்கள் ஆர்வத்துடன் படிப்பார்கள்.

**மிதுனம்:** திட்டமிட்ட செயலை நீங்கள் மறக்கும் சூழல் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் மந்தமாகக் காணப்படும். புதிய இடங்களில் பணச் செலவு ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கடகம்:** சூழ்நிலையைத் திறம்படச் சமாளிப் பீர்கள். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். தாயின் தேவை அறிந்து நிறை வேற்றுவீர்கள். போட்டி, பந்தயத்தில் வெற்றி கிடைக்கும்.

**சிங்கம்:** செயல்களில் தடை உருவாகி மறை யும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு உருவாகும். இலாபம் உயரும். பெண் கள் சேமிக்கும் விதத்தில் சிக்கனத்தைக் கடைபிடிப்பார்கள்.

**கன்னி:** சாமர்த்திய செயல் புரிந்து புகழ் பெறு வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி தரும். நிலுவைப் பணம் எளிய முயற் சியால் கிடைக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள்.

**துலாம்:** சங்கடமான சூழ்நிலையை எதிர் கொள்ள நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் சுமாராகவிருக்கும். பெண்கள் வீட்டுச்செலவுக்குத் திண்டாடுவர்.

**விருச்சிகம்:** செயலில் முழு அளவிலான வெற்றி உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி, ஆதாயம் காண் பீர்கள். சுப விடயம் குறித்த பேச்சில் நல்ல முடிவு கிடைக்கும்.

**தனுசு:** எதிர்பாராத வகையில் நன்மை வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. இலாபம் கூடும். சுப நிகழ்ச் சியில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** குடும்ப விடயங்களைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்று வீர்கள்.

**கும்பம்:** உங்கள் மீது அனைவரும் நல்ல எண்ணம் கொள்வார்கள். தொழில், வியாபாரத் தில் வருமானம் திருப்திகரமாகும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் படிப்பில் நல்லதர தேர்ச்சி பெறுவர்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மந்தநிலை ஏற் படலாம். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். மாணவர்கள் பாதுகாப்புக் குறைந்த இடத்துக்குச் செல்ல வேண்டாம்.

அரிசி, பருப்பு, உணவுப் பொருட்கள் விலைகளை குறைக்க துப்பில்லை... விவசாயத்தை காப்பாத்த யோசிக்கவேயில்லை... அத்தியாவசிய பொருட்களை பத்தி கவலைப்படுறதேயில்லை...
பெட்ரோல், டீசல் விலைகளை குறைக்க வழியில்லை...



251ரூ வாய்க்கு ஸ்மார்ட் போன் தர்றாங்களாம்.. பெருமையா பீத்திக்கிட்டு திரியுறானுங்க...
ப்ளேடி ரா ஸ்கேல்ஸ்......

அடக்கம்
அமரருள்
உய்க்கும்...
அடங்காமை
அமரர்
ஊர்திக்குள்
வைக்கும்



# "அம்மா கணக்கு" களத்தில் தனுஷ்



தனுஷ் சொந்தத் தயாரிப்பு நிறுவனமான "வுண்டார்பார் பிலிம்ஸ்" மூலம் பல படங் களைத் தயாரித்து வருகிறார். இவருடைய நிறுவனம் தயாரித்த அனைத்துப் படங்களும் இரசிகர்கள் மத்தியில் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளன. கடந்த வருடம் இவருடைய தயாரிப்பில் வெளிவந்த "காக்கா முட்டை", "நானும் ரௌடிதான்", "தங்கமகன்" ஆகிய படங்கள் வெற்றி பெற்றன. இந்த நிலையில், இந்த வருடத்தில் தனது நிறுவனத்தின் முதற்படமாக "அம்மா கணக்கு" என்ற புதிய படத்தைத் தயாரித்திருந்தார்.

விறுவிறுப்பாக நடந்து வந்த இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது முடிந்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் படத்தை வெளியிடப் படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

அமலாபால் கதாநாயகியாக நடித்துள்ள இந்தப் படத்தில், சமுத்திரகனி, ரேவதி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். அஸ்வினி ஐயர் என்ற பெண் இயக்குநர் ஹிந்தி மொழியில் இயக்கிய "நில் பட்டே சன்னாட்டா" என்ற படமே தமிழில் "அம்மா கணக்கு" என்ற பெயரில் உருவாகி யுள்ளது.

**அமாவாசை** @amavasai

என்ன தான் இடி இடிச்சாலும் வானம் இடிஞ்சு விழுவதில்லை. அதே மாதிரித் தான் என்ன அடி விழுந்தாலும் நம்ம நம்பிக் கையை இழக்காம இருந்தாப் போதும், வெற்றி உறுதி.

**அருண்** @RagupathiArun Feb 19

அனைவரையும் நம்பு. ஆனால் அனைத்துச் சூழ்நிலைகளையும் நம்பாதே, இங்கு வீரமாக வீழ்த்தப் பட்டவரை விட சூழ்ச்சியால் ஏமாற் றப்பட்டவரே அதிகம்.

**தல போல வருமா** @mani_offl

எப்புடி இருக்கென நல்ல இருக்கெனு சொல் ரவன நம்பு. நல்ல இல்லைனு சொல்ரவன கூட நம்பு. ஏதோ இருக்கெனு சொல்ராபர்ரு, அவன நம்பாத

வெளிநாட்டுக் காதல் கணவனே, ....!
சத்தமில்லாமல் சமையலறையுள் நுழைந்து என்னுடன் செல்லச் சண்டைகள் போட்டாய்.
எனது பசி மறந்து உனக்காகக் காத்திருக்கும்பொழுது காத்தி ருக்கவேண்டாமெனக் கண்டித்து விட்டு.. ஒரு கையால் எனக்கு உணவு ஊட்டினாய்.! இவை போன்ற எல்லாச் சொர்க்கத்தையும் மூன்றே மாதம் தந்துவிட்டு... என்னைத் தீயில் தள்ளி வெளிநாடு சென்றுவிட்டாய்...! என் வெளிநாட்டுக் கணவா!ஸி கணவா... - எல்லாமே கனவா.......?
கணவனோடு மூன்று மாதம்,கனவுகளோடு எத்தனை மாதம்? இது வரமா ..? சாபமா..? கண்களின் அழுகையைக்... கண்ணாடி தடுக்குமா கணவா? திரும்பி வந்துவிடு எனது வெளிநாட்டுக் கணவா...! வாழ்வின் அர்த்தம் புரிந்து வாழலாம்.....! விட்டுகொடுத்து... தொட்டுப் பிடித்து...தேவை அறிந்து... சேவை புரிந்து...உனக்காய் நான் விழித்து... எனக்காக நீ உழைத்து... தாமதத்தில் வரும் தவிப்பு... தூங்குவதாய் உன் நடிப்பு.....! வார விடுமுறையில் பிரியாணி... காசில்லா நேரத்தில் பட்டினி... இப்படி காமம் மட்டுமன்றி எல்லா உணர்ச்சிகளையும் நாம் பரி மாறிக்கொள்ள வேண்டும்....!
மூன்று மாதம் மட்டும் ஆடம்பர உறவு, உல்லாசப் பயணம்..! பாசாங்கு வாழ்க்கை புளித்துவிட்டது கணவா! தவணை முறையில் வாழ்வதற்கு வாழ்க்கை என்ன வட்டிக்கடையா? எப்பொழுதாவது வருவதற்கு நீ என்ன பாலைவன மழையா? விரைவுத்தபாலில் காசோலை வரும், காதல் வருமா..? பணத் தைத் தரும் வங்கி ! பாசம் தருமா..? நீ இழுத்துச் சென்ற பெட்டியோடு ஒட்டியிருக்கிறது எனது இதயம்.....,அனுமதிக்கப்பட்ட நிறையோடு அதிகமாகிவிட்டதால் விமான நிலையத்திலேயே விட்டுவிட்டாயோ எனது இதயத்தை? உனது வெளிநாட்டுத் தேடுதலில்,தொலைந்து போனது - எமது வாழ்க்கையல்லவா..? விழித்துவிடு கணவா! விழித்து விடு - அந்த பாஸ்போர்ட் எமக்கு வேண்டாம், கிழித்துவிடு!
விசாவை ரத்துச் செய்துவிட்டு வா, என் காதல் கணவனே,
நீ தொலைபேசியில் கொடுத்த அனைத்து முத்தத்தையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து இருக்கிறேன்.........
என்றாவது ஒரு நாள் அதையெல்லாம் உனக்கு நேரில் [illegible]......!!
[illegible] ஒவ்வொரு
வினாடியும் உன் நினைவுகளோடும்...!!

படித்ததில் பிடித்தது

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | 9 | | 4 | | |
| 9 | 7 | | | | | | | |
| | | 2 | | | 8 | 1 | | |
| | 1 | | | 7 | 4 | 2 | | |
| | 6 | | | | | | 4 | |
| | | 5 | 6 | 3 | | | 9 | |
| | | 1 | 5 | | | 3 | | 4 |
| | | | | | | | 2 | 8 |
| | | 4 | | 6 | 3 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 6 | 8 | 7 | 2 | 5 | 4 | 3 |
| 4 | 7 | 3 | 5 | 1 | 9 | 8 | 2 | 6 |
| 8 | 5 | 2 | 6 | 3 | 4 | 1 | 7 | 9 |
| 1 | 6 | 5 | 4 | 9 | 7 | 2 | 3 | 8 |
| 2 | 8 | 4 | 1 | 6 | 3 | 9 | 5 | 7 |
| 3 | 9 | 7 | 2 | 5 | 8 | 4 | 6 | 1 |
| 7 | 2 | 8 | 9 | 4 | 6 | 3 | 1 | 5 |
| 5 | 3 | 9 | 7 | 2 | 1 | 6 | 8 | 4 |
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 7 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதி யில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேப்பம் பூ பச்சடி

## செய்முறை :

வேப்பம்பூவை, இரண்டு கரண்டி அளவு எண்ணெயை விட்டு, கருகாமல் நல்ல கரும் சிவப்பாக வறுத்துப் பொடி செய்து கொள்ளவும். சட்டியில் 4 கரண்டி அளவு எண்ணெய் விட்டு, கடுகு, வெட்டிய செத்தல் மிளகாய், பெருங்காயம், கறிவேப்பிலை, இவற்றைத் தாளிக்கவும். புளியைக் கரைத்து, ஒரு கோப்பைக்கு கப் கூடுதலாக விட்டு, உப்பு போட்டு, நன்றாகக் கொதிக்கும்போது வெல்லத்தைப் போடவும். வெல்லம் கரைந்தவுடன் அரிசி மாவைக் கரைத்து விட்டு, சேர்ந்து கொதித்த பின் இறக்கவும். வேப்பம்பூ பொடியைப் போட்டு கலந்து பரிமாறவும்.

## தேவையான பொருள்கள் :-

வேப்பம்பூ –2 கரண்டி
புளி– சிறு எலுமிச்சங்காய் அளவு
உப்பு –தேவையான அளவு
மிளகாய் செத்தல் –6
கடுகு ஒரு கரண்டி
பெருங்காயம்– சிறிதளவு
கறிவேப்பிலை– சிறிதளவு
வெல்லம்
– சிறு எலுமிச்சங்காய் அளவு
எண்ணெய் – 6 கரண்டி
அரிசி மா – 2 கரண்டி

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 60 | 80 | 80 | 60 | 60 | 65 | 30 |
| கரட் | 150 | 200 | 160-200 | 180 | 140 | 200 | 120 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 70 | 100 | 140 | 80 | 100 | 100 |
| பாகல் | 80 | 80 | 100 | 100 | 100 | 140 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 60 | 50 | 60 | – | 50 | 60 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 60 | 70 | 70 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 40–60 | 70 | 60–70 | 80 | 70 | 70 |
| பூசணி | 80 | 50 | 50 | 50 | 50 | 80 | 65 | 60 |
| தக்காளி | 40 | 50 | 40 | 50 | 40 | 60 | 30 | 45 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 50 | 50 | 35 | 35 |
| கீரை | 20 | 50 | 30 | 10 | 20 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 120 | 120 | 100 | 120 | 140 | 100 | 120 |
| புடோல் | 60 | 60 | 50 | 50 | 60 | 60 | 40 | 60 |
| கோவா | 80 | 80 | 60 | 60 | 60 | 100 | 50 | 60 |
| வெண்டி | 100 | 80 | 60 | 60 | 100 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 100 | 80 | 80 | 80 | 70 | 140 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 100 | 120 | 140 | 120 | 100 |
| தேங்காய் | 40 | 45 | 50 | 40–50 | 40 | 40 | 35–45 | 33 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 | 70 | 60 | 50 | 120 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 140 | 100–120 | 120 | 140 | 200 | 130 | 120 |
| இராசவள்ளி | 150 | 120 | 150 | 120 | 140 | 150 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 240-300 | 350 | 600 | 600 | 300 | 500 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 04 | 02 | 07 | 03 | 02.50 | – |



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 300 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 400 | 650 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 400 | 500 | 600 | 800 | 600 | 800 | 550 |
| சீலா | 250 | 350 | 400 | 400 | – | 400 | 400 |
| விளை | 500 | 400 | 400 | 500 | – | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 250 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 450 | – | – |
| ஓரா | 300 | 350 | – | – | 300 | – | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 200 | 250 | 150 | 350 |
| நகரை | 150 | 300 | – | 200 | 300 | 200 | 350 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | – | 150 | – |
| ஒட்டி | 250 | 150 | 150 | 250 | 200 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | – | 250 | – |
| மதனம் | 100 | 250 | 180 | 300 | 250 | 300 | 200 |
| கொய் | 80 | 150 | 60 | 80 | 120 | 50 | – |
| பாலை | 300 | 200 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 350 | 300 | – |

# பருப்பை வேகவைக்கும்போது...



- பருப்பை வேகவைக்கும்போது, ஒரு செத்தல் மிளகாயைக் கிள்ளிப்போட்டால் சீக்கிரமே வெந்துவிடும்.
- பாத்திரத்தில் பருப்பை வேகவைக்கும் போது மஞ்சள் தூள் சேர்க்க வேண்டாம். அது பருப்பைக் கடினமாக்கி வேக வைக்க நிறைய நேரம் எடுக்கும்.
- கறியை விரைவாகச் சமைக்க, குறித்த காய் கறியுடன் சிறிதளவு மசித்த பப்பாளியைச் சேர்க்கவும்.
- கீரையைச் சமைக்கும்போது பச்சை நிறம் மாறாமல் இருக்க ஒரு சிட்டிகை அப்பச் சோடாவை அல்லது பேக்கிங் சோடாவை சேர்க்கவும்.
- பச்சைக் காய்கறிகளைச் சமைக்கும்போது மூடியால் மூடிச் சமைத்தால், சீக்கிரம் சமைக் கலாம். அத்துடன் அவற்றின் சத்தும் வெளியேறாது.



## நாளை

மாசி-16
ஞாயிற்றுக்கிழமை
28.02.2016
திதி: பஞ்சமி மு.ப.09.32 வரை
நட்சத்திரம்: சுவாதி மு.இ.07.36
ராகுகாலம்:
04.58-06.28 வரை
சுபநேரம்:
09.28-10.58 வரை



## வாகன இருக்கை

குழந்தைகளுக்கான வாகன இருக்கை அறிமுகமாகியுள்ளது. வாகனங்களில் குழந்தைகளை அவற்றுக்குரிய இருக்கையில் அமர்த்துவதன் மூலம் பாதுகாப்பாக பிரயாணங்களை மேற்கொள்ளலாம். விசேடமாகக் கைக்குழந்தைகளுக்கெனத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஆகக் கூடியது குழந்தையின் 9 கிலோ நிறையைத் தாங்கக் கூடியது. இவை 5000 ரூபா முதல் 5500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## எதிர்பார்ப்பை தூண்டும் எல்ஜியின் ஜி5



பாவனையாளர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள எல்ஜி ஜி5 தொடுதிரைக் கைபேசி தொடர்பான காணொலியை குறித்த நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்தக் கைபேசி 4ஜிபி ரம் நினைவகம், 32ஜிபி சேமிப்பு வசதி கொண்டது.

5.3 அங்குலத் தொடுதிரை, முழு எச்டி தீர்மானத்துடன் 2560 X 1440 பிக்சல் தீர்மானம் கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 3 கமரா வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன. முன்புற கமரா 5 மெகாபிக்சல் வசதி கொண்டது. (செல்பி மற்றும் வீடியோ அழைப்புகளுக்கு பயன்படும்), பின்புறக் கமரா 16 மெகாபிக்சல் வசதி கொண்டது. மற்றுமொரு கமரா 8 மெகாபிக்சல் வசதி கொண்டது.

தற்போது இந்தக் கைபேசியில் உள்ள அம்சங்கள், 1 நிமிட அளவில் ஒரு காணொலி முன்னோட்டமாக வெளியிடப்பட்டுள்ளது.

## சிந்திக்கும் ரோபோ



தானாகவே சிந்தித்து, தான் இருக்கும் இடத்துக்கும், அவ்விடத்தில் இருக்கும் மனிதர்களுக்கும் ஏற்ற வகையில் செயல்படும் வகையிலான புதிய ரோபோ ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ரோபோவுக்கு அல்பா 2 என்று பெயரிடப்பட்டுள்ளது.

மனிதர்களோடு உரையாடும், அதேபோன்று அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்யும் பலவகையான ரோபோக்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் இந்த ரோபோ சற்று வித்தியாசமாக உள்ளது. இந்த அல்பா 2 ரோபோவானது, தானாகவே சிந்தித்துச் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மனிதருக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு இணையத்தேடல்மூலமாக விடைகொடுக்கவும் இந்த ரோபோவால் முடியும். இந்த ரோபோ மனிதர்களுடைய முகபாவங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும்.

அதிலும் விசேடமாக, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரிடமும் குடும்ப உறுப்பினர்கள் போல் பழகும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ரோபோ அடுத்த மாதம் விற்பனைக்கு வரவுள்ளது.

# தனது உயர் கற்கைகளில் கட்டட கலையை உள்வாங்கியுள்ள SLIIT



இலங்கை பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்ற SLIIT, தான் வழங்கி வரும் உயர் கற்கைகளில் கட்டடக்கலை கற்கைகளையும் உள்வாங்கியுள்ளது.

மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் நிமல் டி சில்வாவின் தலைமையின் கீழ் கட்டடக்கலை பாடசாலையை SLIIT நிறுவியிருந்தது.

மாலபே SLIIT கல்வியகத்தில் அமைந்துள்ள பொறியியல் பீடத்தில் இந்த கட்டடக்கலைப் பாடசாலை அமைந்துள்ளது. இதன் மூலம் மாணவர்களுக்கு கட்டடக் கலையுடன் தொடர்புடைய பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அங்கங்களையும் பயில்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அதிகளவு தகைமை வாய்ந்த விரிவுரையாளர்களைக் கொண்டுள்ளதுடன், இந்தப் பாடசாலையின் மூலமாக நவீன தொழில்நுட்ப வசதிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதன் மூலம் சர்வதேச நியமங்களை எய்தக்கூடிய வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு 24 மணி நேரமும் பயன்படுத்தக்கூடிய வாயு குளிரூட்டல் அலங்கார ஸ்ரூடியோக்கள் அமைந்துள்ளதுடன், பிரத்தியேக இடவசதிகள், விரிவுரை நிலையங்கள் மற்றும் பயிற்சிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய பகுதிகள் போன்றவையும் அமைந்துள்ளன. அத்துடன், ஆய்வு கூட வசதிகள் மற்றும் கட்டட வசதிகள் போன்றவையும் உள்ளடங்கியுள்ளன. வெளிநாட்டு பல்கலைக்கழகங் களில் வழங்கப்படும் சகல வசதிகளும் வழங்கப்படு கின்றன.

SLIIT இன் உயர் கல்விக் கற்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றி பேராசிரியர் லலித் கமகே கருத்துத் தெரிவிக்கையில், நாம் வழங்கும் கல்வி மற்றும் பட்டப்படிப்புகள் ஆகியவற்றின் மூலம் சிறந்த தரத்தை பேணுவது தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தப்படுகிறது. நாம் தொடர்ந்தும், எமது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முயற்சிகளை முன்னெடுத்து வருவதுடன், எமது கற்கைகளில் நாம் எப்போதும் உயர் நியமங்களைப் பேணி வருகிறோம்.

கல்வியின் தரத்தை பேணுவதற்கு, பட்டயக் கட்டடக்கலை வல்லுநர்களை நாம் எம்முடன் இணைத்துக் கொண்டுள்ளோம். இவர்கள் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அனுபவத்தைக் கொண்டுள்ளனர். SLIITஇல் ஸ்ரூடியோ அடிப்படையிலான கட்டடக் கலை கல்வியை வழங்குவது தொடர்பில் இவர்கள் பெருமளவு அனுபவத்தைக் கொண்டுள்ளனர் என்றார்.

## வணிகம்

SLIIT இல் காணப்படும் கட்டடக்கலை பாடசாலை மூலமாக, மாணவர்களுக்கு ஐந்து ஆண்டு கட்டடக்கலை பட்டப்படிப்பு இரு பிரிவுகளாக வழங்கப்படுகின்றன. இதில் மூன்று வருட காலப்பகுதிக்கான B.Sc.பட்டமும் மேலும் இரு வருடங்களுக்கான M.Sc. பட்டமும் உள்ளடங்கியுள்ளன.

இலங்கை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் நியமங்கள் மற்றும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த பட்டப்படிப்புகள் அமைந்துள்ளன. முதல் மூன்று வருடங்கள் நிறைவில் மாணவர்களுக்கு அங்கீகாரமளிக்கும் அமைப்புகளின் உறுதிப்படுத்தல் பொறிமுறைக்கு உட்படுத்தப்படுவதுடன், சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் காணப்படும் அமைப்புகளின் மூலமாக இவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. (நி)

# தொடர்ச்சியாக 3 ஆம் ஆண்டாக தங்க விருதை வென்ற பஷன் பக்



நாடு முழுவதும் 16 காட்சியறைகளைக் கொண்ட, இலங்கையின் முன்னணி ஆடை விற்பனைத்தொடரான Fashion Bug அண்மையில் நடைபெற்ற வருடாந்த விற்பனை மாநாட்டில் ஆண்டின் சிறந்த விற்பனைப் பங்காளர் எனும் தங்க விருதை சுவீகரித்திருந்தது. பெண்களுக்கான உள்ளாடைகள் உற்பத்தியில் ஈடுபடும் சர்வதேச ரீதியில் முன்னணியில் காணப்படும் நிறுவனமாக ரையம்ப் இன்டர்நஷனல் திகழ்கிறது.

கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ரையம்ப் இன்ரநசனல் லங்கா நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் வெற்றிகரமான செயற்பாடுகள் குறித்து அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கடந்த ஆண்டில் சிறப்பாக செயலாற்றியிருந்த விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு வழங்கப்பட்ட விருதுகளில், ஆண்டின் சிறந்த விநியோகஸ்தர் நிலையம், ஆண்டின் சிறந்த விற்பனையாளர், ஆண்டின் சிறந்த விற்பனைப் பங்காளர், சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்திருந்த விநியோகஸ்தர் மற்றும் ஆண்டின் சிறந்த விநியோகஸ்தர் ஆகியவை அடங்கியிருந்தன.

ரையம்ப் மீது பஷன் பக் காண்பித்து வரும் அதீத ஈடுபாடு இந்த விருதை தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் சுவீகரித்துள்ளமையின் மூலமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கொள்ளுப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள காட்சியறைக்கு சிறந்த விற்பனை நிலையத்திற்கான தங்க விருது வழங்கப்பட்டிருந்ததுடன், கடந்த ஆண்டில் இந்த விருதை வத்தளையில் அமைந்துள்ள காட்சியறை வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய அலங்காரங்கள் மற்றும் உள்ளாடைகளை கொள்வனவு செய்வதற்கு பிரத்தியேகமான பகுதிகள் ஆகியவற்றை கொண்டுள்ளதன் மூலமாக இரு தசாப்த காலமாக வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமான சேவைகளை வழங்கி வரும் ரையம்ப் , எதிர்காலத்தில் பெரும் திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த வருடாந்த நிகழ்வு என்பது, வெறுமனே, சந்தைப்படுத்தல் செயற்பாட்டுக்கு பங்களிப்பு வழங்கியவர்களை கௌரவிக்கும் வகையில் அமைந்துவிடாமல், விநியோகதர்களின் வினைத்திறன் வாய்ந்த செயற்பாடுகளுக்கு வெகுமதிகளை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

பெண்களின் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு அதிகளவு முக்கியத்துவத்தை வழங்கும் பஷன் பக், அண்மையில் தனது சேலை விற்பனைப் பகுதியையும் அறிமுகம் செய்திருந்தது. கட்டுபெத்த காட்சியறையில் எத்னிக் பஷன் எனும் பிரிவில் வெவ்வேறு நிகழ்வுகளுக்கும், சாதாரண பாவனைக்கும் உதவும் வகையிலமைந்த கண்கவர் சேலைகள், சல்வார்கள், சல்வார் துணிகள், குர்தாஸ் வகைகள் மற்றும் ஷோல்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பல் வேறு அலங்கார அணிகலன்கள், கைப்பைகள் மற்றும் பாதணிகள் போன்றவையும் காணப்படுகின்றன. இவை வெவ்வேறு வர்ணங்களில் காணப்படுவதுடன், வெவ்வேறு நபர்களின் விருப்பங்களையும் தெரிவுகளையும் நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சர்வதேசப்

அரசியல் மயப்படுத்தப்பட்டதால், கடந்த 10 ஆண்டுகளாக நீதித்துறையின் சுதந்திரமும், நம்பகத்தன்மையும் சீரழிக்கப்பட்டன. தற்போது நீதித்துறை சரியான பாதைக்குத் திரும்பியிருக்கின்றது. நம்பகத்தன்மையை பெறுவதற்குச் சற்றுக் கால அவகாசம் தேவைப்படும்.

போர்க்குற்ற விசாரணை விடயத்தில், வெளிநாட்டு நீதிபதிகள், தடயவியல் நிபுணர்கள், விசாரணையாளர்கள் மற்றும் வழக்குத் தொடுநர்களின் பங்களிப்புத் தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. நாம் எல்லா வாய்ப்புக்கள் குறித்து கவனத்தில் கொள்கிறோம். நாம் அமைக்கும் நீதிமன்றம் நம்பகமானதாக இருக்கவேண்டும் என்பதை மட்டும் கவனத்தில் கொள்ளவில்லை. போரினால் பாதிக்கப்பட்டவர்களால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

சிறுபான்மைத் தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏனைய தரப்புகளுடன் கலந்துரையாடப்பட்ட பின்னர், சிறப்பு நீதிமன்றத்துக்கான வரையறைகள் இன்னும் ஐந்து ஆறு மாதங்களில் முடிவு செய்யப்படும்–என்றார். (த-வ-5)

### நாமலின்

அனைவரையும் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தார்.

இந்தப் பிணை மறுப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:- எமது குடும்பத்தைப் பழிவாங்கும் நோக்கிலேயே திட்டம் தீட்டி பிணை மறுக்கப்பட்டுள்ளது. இதற்கு நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் உடந்தை. 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவ்வாறே எங்கள் கிராமங்கள் மீது குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தி தமது எதிர்ப்பைக் காட்டினர். ஆனால் இன்று பொதுச் சொத்துக்களை ஆவணங்களாக வைத்துக் கொண்டு எமக்கெதிராக செயற்படுகின்றனர்.

நல்லாட்சியில் ஈடுபடுகின்றோம் என்று சொல்பவர்களுக்கும் பிள்ளைகள் உண்டு. அவர்களின் பிள்ளைகளுக்கும் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள் – என்றார். (த-5)

### மீள்குடியமர்வைப்

ஆகியோருக்கும், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே மேற்படி இணக்கம் எட்டப்பட்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டார். இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு – கிழக்கு அபிவிருத்தி மற்றும் மீள்குடியமர்வு தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்திருந்தார். அதற்கமையவே நேற்றைய சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, மீள்குடியமர்வு தொடர்பில் அதிக முக்கியத்துவம் கொடுத்து ஆராயப்பட்டது. வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 700 ஏக்கர் இன்னமும் மக்களிடம் கையளிக்கப்படாமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு அமைச்சர் சுவாமிநாதன் வர்த்தமானியில் பிரசுரிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே மக்களிடம் அது இன்னமும் கையளிக்கப்படாமல் இருப்பதாகச் சுட்டிக்காட்டியதுடன், அதனை விரைவில் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் உறுதிமொழி வழங்கினார்.

வடக்கு – கிழக்கில் முதலீடுகள் மேற்கொள்வது தொடர்பிலும், எவ்வாறான முதலீடுகள் மேற்கொள்வது – எவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக பலாலி விமான நிலையத்தை, மக்களின் மீள்குடியமர்வை எந்தவிதத்திலும் பாதிக்காத வகையில் விஸ்தரிப்பை மேற்கொள்வதற்கு இணக்கம் எட்டப்பட்டது–என்றார். (வ-5)

### வலி.வடக்கு

பொதுநிர்வாக அமைப்பு தெரிவித்துள்ளது.

நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த மக்கள் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தில் உள்ள மகாதேவா படிப்பகத்தில் நேற்றுக் காலை கலந்துரையாடல் நடத்தினர். இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சரும், பாதுகாப்பு அமைச்சின் செயலரும் தெரிவித்துள்ளனர். எமக்குப் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு தேவையில்லை. எங்களது மீள்குடியமர்வே முக்கியமானது.

எமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரையில் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

ஜனாதிபதி மைத்திரிபால ஆறு மாத காலத்தினுள் எமது நிலங்கள் விடுவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். சித்திரை வருடப் பிறப்புக்கு முன்னதாக எமது நிலங்கள் விடுவிக்கப்படாவிட்டால் மிகப் பெரியளவிலான போராட்டங்களை நாம் முன்னெடுப்போம் என்றும், நலன்புரி நிலைய பொது நிர்வாக அமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5-106)

## மரண அறிவித்தல்

### திருமதி நளினி ரவீந்திரகுமார்



யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் கேர்ணிங்கை வதிவிடமாகவும் கொண்ட நளினி ரவீந்திரகுமார் 21.02.2016 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - பூமணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் ரவீந்திரகுமார் (கண்ணன்) அவர்களின் ஆசை மனைவியும் சிந்துஜா அவர்களின் அருமைத் தாயாரும் Mathew அவர்களின் அன்பு மாமியாரும் Jayden, Ethan, Deklyn,Noah ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வேந்திரகுமார்(இலங்கை), நந்தினி(ஜேர்மனி), ஜெகநாதன்(இந்தியா), நளாயினி(டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகானந்தம்(கனடா), தங்கமணி(இலங்கை), பரமானந்தம்(ஐக்கிய அமெரிக்கா), ஈஸ்வரானந்தன்(கனடா), நவநீதராஜா(ஜேர்மனி), ஸ்ரீகாந்தன்(சுவிஸ்), ஜெயராஜா(டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வேந்திரகுமாரி(கனடா), இலட்சுமிகாந்தன் (இலங்கை), ஸ்ரீதயா(ஐக்கிய அமெரிக்கா), ரஞ்சினி (கனடா), ஜெகசோதி(ஜேர்மனி), யோகா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு உடன் பிறவாச்சகோதரியும் பரமேஸ்வரன்(ஜேர்மனி), கோமளகாந்தி (இலங்கை), கோபி(இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2016) சனிக்கிழமை டென்மார்க்கில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைமணி வீதி,
கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம். (69604) (4.18.20)

தகவல்
இலட்சுமிகாந்தன் தங்கமணி
(மைத்துனி)

## மரண அறிவித்தல்

### குணரத்தினம் பரமராசா (நயினாதீவு)



நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் பரமராசா நேற்று (26.02.2016) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் கமலவேணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், சற்குணராசன் (கொழும்பு), கிருஷ்ணராசா (வேலணை பிரதேச சபை உத்தியோகத்தர்), நிர்மலா, கேசவராசா (கொழும்பு), சிவானந்தராசா (பிரான்ஸ்), சிவானந்தி, மகேசராசா ஆகியோரின் பாசமிகு தம்பியும், செல்வராணி, குகணேஸ்வரி (ஆசிரியர்-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), பத்மாவதி, சுதாஜினி, திவாகரன், குணபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரூபிகா (கொள்ளுப்பிட்டி சென்.அன்ரனி கல்லூரி), சுபோதினி(கொள்ளுப்பிட்டி சென்.அன்ரனி கல்லூரி), ஹரிஸ்ஜெனகன் (ராஜகிரிய அவா விதாரண வித்தியாலயம்), ஹரிஸ்ணவி (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ ஆரம்ப பாடசாலை), அபிஷ்ணவி (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ ஆரம்ப பாடசாலை), விஷாகன், வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.02.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நயினாதீவில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லி பரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (69617)(11,18,20)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகராஜா உருத்திரகுமார் J.P

மலர்வு
12
.
12
.
1960



உதிர்வு
24
.
02
.
2016

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, லண்டன், சிட்னி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நாகராஜா உருத்திரகுமார் சிட்னியில் 24.02.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மஸ்கன்ஸ் நிறுவன உரிமையாளர் காலஞ்சென்ற நாகராஜா - கமலாசனி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற புவனேந்திரம் - சரஸ்வதிஅம்மா தம்பதியினரின் மருமகனும் நிலந்தினியின் அன்புக் கணவரும் நிரோஷனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நகுலேஸ்வரன், விஜயநாதன்(சுவிஸ்), உமாவதி (ஆஸ்திரேலியா),லோகநாதன்(லண்டன்),உஷாதேவி(லண்டன்), சுகன்யாதேவி(லண்டன்), நிலாமதி(ஆஸ்தி ரேலியா), கணேஷ்ராஜ்(லண்டன்) காலஞ்சென்ற ஸ்கந்தராஜ், ரவீந்திரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் குணராணி, வசந்தி, பாலேந்திரன், ஈஷானி, குலேந்திரன், சிவக்குமார், குகனேசன், கீதா, மாதினி, பிரசாந்தி, சுபோதினி,முரளிதரன், ராகினி, பிரகலாதன், துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக இன்று (27.02.2016) சனிக்கிழமை 5.30 - 7.30 வரைக்கும் Liberty Funeral Parlour, 101 South Street, Granville இல் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (29.02.2016) திங்கட்கிழமை 10.30 - 1.00 South Chapel, Memorial Avenue, Rookwood இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C 29394)
(4,18,20)

தகவல்:

நிலந்தி - +612 8608 6085 உமா - +61 469 807 590
பிரபா - +61 409 783 725 சடா - +61 402 040 415

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது சனசமூக நிலைய மூத்த உறுப்பினர் காலஞ்சென்ற **ப. இரகுபதி அவர்களின்** அன்புத் தாயார்

அமரர்

**மேரிதிரேசா பசுபதி**

(இளைப்பாறிய அதிபர்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

**நெடுந்தீவு கிழக்கு சன சமூக நிலையம்**
**ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.**
**நெடுந்தீவு.** (69632) (10.17)

## நன்றி நவிலல்



மலர்வு: 24.03.1934 உதிர்வு: 24.02.2016

உரும்பிராய் வடக்கு, இந்துக் கல்லூரி ஒழுங்கையைச் சேர்ந்த

**தம்பு சிவசுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற உப அதிபர், உரும்பிராய் சைவத் தமிழ்) அவர்கள் 24.02.2016 புதன்கிழமையன்று இறைபதம் எய்தி மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப் பட்டது. அதில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மகன்மார் - காண்டீபன் (ஜேர்மன்),**
**தயாபரன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்)**
**பார்த்தீபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**
**மகள் - சத்தியபாமா (யா.தொ.நு.கல்லூரி)** (69636) (10.17.20)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 03 . 02 . 1932



மறைவு 28 . 01 . 2016

**அமரர் நமசிவாயம் மாசிலாமணி**

கடந்த 28.01.2016 வியாழக்கிழமை அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (27.02. 2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

**2ஆம் வட்டாரம்**
**அம்மன் கோயிலடி, மண்டைதீவு.** **குடும்பத்தினர்.**
(69633)(10.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 . 09 . 1941 மறைவு 28 . 01 . 2016



அமரர்
**பாலயோகினி (பாலமணி) நாகரெத்தினம்**
**(நயினாதீவு)**

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலை பேசி மூலமாகவும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து எமக்கு அனுதா பங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றி களைத் தெரிவித்துக்கொள்வ தோடு வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.02.2016) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**(இந்த அழைப்பைத் தனிப் பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)**

**இல.89, பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர்.**
(69630)(10.17)

## கண்ணீர் காணிக்கை



யாழ் மாநகரசபையின் வீதி வேலைப் பகுதி தலைமைத் தொழிலாளி

**அமரர் பாலசிங்கம் பத்மநாதன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வேலைப்பகுதி,** (69614) (10.17.20)
**உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், யாழ். மாநகரசபை.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 13 . 07 . 1933



ஆண்டவன் அடியில் 30 . 01 . 2016

மன்மத வருடம் தை மாதம் 16ஆம் நாள் (30.01.2016) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி


**அமரர் புஸ்பவதியார் பூபாலசிங்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (27.02.2016) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். ஆத்மசாந்திப் பிரார்த்தனை 29.02.2016 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் சட்டநாதர் கோயிலடி நல்லூரி லுள்ள "திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில்" நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்க ளும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.44/28, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.** **குடும்பத்தினர்.**
(69622)(10.17.20)

## மரண அறிவித்தல்

### கனகசபை பரராஜசிங்கம் (முருகண்டி)



பிறவுண் றோட் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பரராஜசிங்கம் நேற்று முன்தினம் (25.02.2016) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும் பூமணி, செல்வநாயகி (சுவிஸ்), தவமணி (கொழும்பு), சறோயினிதேவி, லதா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ரவீந்திரன், குனேந்திரன் (லண்டன்), சாந்தினிதேவி (லண்டன்), வசந்தி (இத்தாலி), ஜெயந்தி (பதுளை), சுகந்தினி (உப தபாலதிபர் - சோனகதெரு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவானி, கணேஷ், கஜன், மகேஸ்வரன், தபேசன் (இராசயனவியல் துறை - யாழ்பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜன், சீரன், கவிப்பிரியா, பாரதி, பாலினி, வானதி, மதுஷா, லிதுனா, கவியுதன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 55, [illegible] வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(69637)(15,17,20)
தகவல்:
**குடும்பத்தினர்.**

**T.P No: 021 222 8840, 077 3086 784**

### கைதிகளின்

புப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.
நேற்று அரசிடமிருந்து நல்ல தீர்வு கிடைக்கும் என இவர்கள் எதிர்பார்த்தபோதி லும் இறுதியில் அரசிடமிருந்து சாதகமான பதில் எதுவும் வரவில்லை.
கொழும்பு, மகசின் சிறையில் 14 அரசி யல் கைதிகளும், அநுராதபுரம் சிறையில் இரண்டு அரசியல் கைதிகளும் தமது விடு தலைக்கான நடவடிக்கைகளை அரசு உடன் எடுக்கவேண்டும்எனக்கோரிஉணவு தவிர்ப்பு போராட்டத்தில்ஈடுபட்டுவருகின்றனர்.
கொழும்பு, மகசின் சிறையில் சிறைச்சா லையில்நீண்டகாலமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படா மல் தடுத்துவைக்கப் பட்டுள்ள தமிழ் அரசி யல் கைதிகள் 15 பேர் கடந்த திங்கட்கிழமை முதல்உணவுதவிர்ப்பு போராட்டத்தை ஆரம் பித்தனர். இவர்களில் ஒருகைதி கடந்த புதன் கிழமை நீதிமன்றத் தால் விடுதலைசெய் யப்பட்டார்.
ஏனைய 14 கைதி களில் நால்வரின் உடல்நிலை மோசம டைந்ததால், சிறைச் சாலை வைத்தியசா லை யில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை சேர்க்கப்பட்டனர். எனி னும், அவர்கள் சிறைச் சாலை வைத்தியசா லையில் தொடர்ந்து சிகிச்சைபெற மறுப்புத் தெரிவித்துவிட்டுநேற்று முன்தினம் மாலையே சிறைச்சாலைக்கு வந்து சக கைதிகளுடன் தொடர்ந்து உணவு தவிர்ப்பு போராட்டத் தில்ஈடுபட்டுவருகின்றனர்.
இதேவேளை, தங்கள் மீதான நீதிமன்ற நட வடிக்கைகளைத் துரி தப்படுத்துமாறு கோரி அநுராதபுரம் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி கள் கடந்த ஞாயிற்றுக் கிழமைமுதல்உண்ணா விரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (து-வ-சி)

### வடக்கில்

தமிழ் மக்களால் இது ஒழுங்குபடுத்தப் பட்டி ருந்தது.
கொழும்பு - பம்பலப் பிட்டி கதிரேசன் மண் டபத்தில் பூசை வழிபாடு களுடன் நிகழ்வு இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட பின்னர் ஊட கங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
வடக்கு மாகாணத்தி லுள்ள இராணுவ முகாம்கள் மற்றும் கையகப்படுத்தப்பட் டுள்ள காணிகள் தொடர் பாக 6 மாத காலத்தில் ஆய்வுசெய்து தீர்க்கும் படி ஜனாதிபதி மைத் திரிபால ஆலோசனை வழங்கியுள்ளார்.
இதற்கமைய வடக்கு மாகாணத்துக்குத் திரும்பிய பின்னர் சம் பந்தப்பட்ட தரப்பின ருடன் சந்திப்புக்களை மேற்கொண்டு அது தொடர்பில் நடவடிக் கை களைக் கையாள வுள்ளேன் என்றார்.
(து-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சந்தியா கொர்னலியுஸ்

**தோற்றம்: 1921.11.21** **மறைவு: 2016.02.26**



சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியா கொர்னலியுஸ் நேற்று (26.02.2016) வெள்ளிக்கிழமை தனது 95 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்சலம்மாவின் அன்புக் கணவரும், ஜசிந்தா, லூசியா, பிரான்சிஸ் சேவியர் (பிரான்ஸ்), ஜெயறட்ணம் (ஜேர்மனி) காலஞ்சென்ற றிச்சார்ட் ஜேம்ஸ், சாள்ஸ் பெரோ (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வேதநாயகம், எதிர்முக சிங்கம், பிறேமாவதி (பிரான்ஸ்), ஹில்டா (ஜேர்மனி), ஜெனிற்றா ரதினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் அன்ரன் தனிநாயகம், மரிய பெனிற்றா, டொறின், றூபினஸ், ஜூலியன், கொன்ஸ்ரன், அலிசா, றபேக்கா, கொர்னலியா, கிளாரா ஆகியோரின் அன்புப் பேரனும் அமெலியா, பென்சியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி எதிர்வரும் முதலாம் திகதி (01.03.2016) செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு இளவாலை புனித-யாகப்பர் ஆலயத்தில் இடம் பெற்று இளவாலை யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சென்.ஜேம்ஸ் வீதி,**
**இளவாலை.** (c/29542) (15,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## கிருஸ்ணர் குணரத்தினம்

**(சாய்ராம் புடைவையகம் - நெல்லியடி)**

**தோற்றம்: 1954.04.21** **மறைவு: 2016.02.25**



புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணர் குணரத்தினம் (சாய்ராம் புடைவையகம் - நெல்லியடி) கடந்த (25.02.2016) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் காலஞ்சென்ற மகேந்திரம் மற்றும் நவமலர் தம்பதியரின் மருமகனும் மல்லிகாதேவியின் அன்புக்கணவரும் ராஜசேகரம் (யூரோவில் இஞ்சினியறிங் வேக்ஸ் சொப்), நாகேஸ்வரி (பிரான்ஸ்), ரத்தினேஸ்வரி (டென்மார்க்), கதிர்காமசேகரம் (சேகர்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் புவியரசியின் (மட்டுவில் மகா வித்தியாலயம்) அன்புத்தந்தையும் ஜெயராசா (பிரான்ஸ்), செல்வராசா (டென்மார்க்), நவலக்சுமி, கலையரசி, ராசகுமார் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கிந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே. இல :**
**07[illegible]469 113** (69642) (15,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

திருமதி

## ரஜனி தெய்வேந்திரா



யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், டொறோண்டோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஜனி தெய்வேந்திரா 22.02.2016 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம்- நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களா குமரேசு-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், தெய்வேந்திராவின் (அப்பன்) பாசமிகு மனைவியும், பாஸ்கரன் (நோர்வே), ரூபாகரன் (கனடா), ரஜிதா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உருத்திரா (ஜேர்மன்), ரவீந்திரா (ரவி-இலங்கை).லலிதா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.02.2016) ஞாயிறு காலை 9.00 மணிமுதல் 11 மணிவரை 1591, ELGNMILLS Road, Richmond-hill இல் அமைந்துள்ள மண்டபத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு 11 மணியளவில் இறுதிக்கிரியைகளை தொடர்ந்து அதே மண்டபத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15/8, **மலர்மகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**
T.P: 021 22 111 95,
07777 82192. (69635)(10.17.20)

தகவல்:
**நடராசா -லலிதா**
**குடும்பம்**

# மரண அறிவித்தல்

## பாலசிங்கம் பத்மநாதன்



நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் பத்மநாதன் கடந்த (25.02.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - கண்மணி தம்பதியரின் மகனும் சூரியகலாவின் பாசமிகு கணவரும் ஜெயந்தி, ரஜித் ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகன சிறியின் மாமனாரும் கஜானியின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாராயணன் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.** (69641) (15,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**T.P No: 077 920 9637**

# 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 30 . 09 . 1937

**மறைவு** 19 . 02 . 2014

## அமரர் பொன் அப்பையா

*ஆருயிர் தெய்வம் எங்கள் அறிவுக்கோர் தீபமானீர்*
*அரும் வழிகாட்டி நீங்கள் !*
*அன்போடு பரிவும் காட்டி பெருமையாய் வாழ்ந்தீரே !*
*என் அருமை தெய்வமே !*
*எடுப்பான அழகும் மிடுக்கான ஆளுமையும் இயல்பாகக்*
*கொண்ட எங்கள் பேரொளியே அப்பாவே !*
*தெள்ளு மொழி பேச்சாலே சீர் மிகு சேவையாலே*
*பலர் போற்ற வாழ்ந்தவரே ! எங்கள் உயர்விற்கு வழிகாட்டி*
*வாழ்ந்த எங்கள் ஆருயிர் அப்பாவே ! தாத்தாவே !*
*என்றும் உங்கள் அன்பையும் அரவணைப்பையும்*
*நினைத்து கலங்குகின்றோம்...!!!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய பண்டாரி அம்மனை வேண்டுகின்றோம்.

'அம்பிகை வாசம்'
புலோலி தென்மேற்கு, புலோலி,

**குடும்பத்தினர்.**
T.P: 021 226 4280

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**பிறப்பு** 1983 . 01 . 20

**இறப்பு** 2016 . 01 . 14



கடந்த 14.01.2016 அன்று சிவபதமடைந்த

அமரர்

## காண்டீபன் வசிதா

**அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.02.2016) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
**நல்லூர், யாழ்ப்பாணம்.** (69640)(15,17)

**குடும்பத்தினர்**
**தவாஸ் அன் சன்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் இளைஞனுக்கு கால்முறிவு

ஏ- 9 வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் பஸ் நிலையத்துக்குத் திரும்பிய பஸ்ஸுடனும், தொடர்ந்து வந்த பிக்கப் வாகனத்துடனும் மோதி வீதியில் வீழந்த மோட்டார் சைக்கிளோட்டிக்கு கால் முறிந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த வரணி–குடமியனைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞனே சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளார். (த-ஐ-9)

# கௌரவிப்பு நிகழ்வு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் கடந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்காரவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொள்வர். (த-ஐ-9)

## வடக்கு

புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கு அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. புதிய அரசமைப்பில் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பது தொடர்பில் வடக்கு மாகாண சபையினால் ஒரு குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தக் குழுவின் அமர்வு நேற்று இடம் பெற்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில், முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த அமர்வில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்று அடிப்படையில் எவ்வாறு தீர்வுத் திட்டம் அமையவேண்டும் என்பது தொடர்பிலும், அரசியல் தேவைப்பாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்பது தொடர்பிலும், அதிகாரப் பகிர்வு எப்படி அமையவேண்டும் என்பது தொடர்பிலும், மூன்று விடயங்களையும் தலா ஆறு பேர் கொண்ட மூன்று குழு ஆராய்வது என்று நேற்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை ஆராய்ந்த பின்னர், எதிர்வரும் 17 ஆம் திகதி மீளவும் சந்திப்பை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மார்ச் 24 ஆம் திகதி சபை அமர்வில், தீர்வுத் திட்ட வரைவைச் சமர்ப்பிக்கலாம் என்றும் நேற்று கலந்துரையாடப்பட்டுள்ளது. (த-வ-5-101)

## வவுனியா

நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், குறித்த சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் எம்.மனாஸ் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா உக்கிளாங்குளப் பகுதியில் 13 வயது மாணவி வன்புணர்வுக்குட்படுத்தப் பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னர் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியின் அயல் வீட்டில் வசித்து வந்த ஒருவரே சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா நீதிவானிடம் நேற்று முன்னிலைப்படுத்தப் பட்டார். இதன்போது அவரிடமிருந்து மரபணுப் பரிசோதனைக்குத் தேவையானதைப் பெற்று மரபணு பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (த-4-402)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

**மன்னார் கால்பந்தாட்டத் தொடர்**

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக்கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று சனிக்கிழமை ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விடத்தற்தீவு ஐக்கிய அணியை எதிர்த்து றீகன்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட் டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளை யாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வரு கின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணி க்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் 'ஏ' அணியை எதிர்த்து அல் மதீனா அணி மோதவுள்ளது.

**வைகறை வி.கழகத் தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இணுவில் அண்ணா அணியை எதிர்த்து தென்றல் அணி மோதவுள்ளது. (ம-23)

## பாடசாலை அணிகளுக்கிடையிலான கோட்ட மட்ட சதுரங்கத் தொடர்கள்

கிளிநொச்சி, பெப். 27

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கரைச்சிக் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கத் தொடர்கள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடை பெறவுள்ள இந்தத் தொடர் 15 வயதுக்கு உட்பட்ட ஆண்கள், 15 வயதுக்கு உட்பட்ட பெண்கள், 19 வயதுக்குட்பட்ட ஆண்கள், 19வயதுக்குட்பட்ட பெண்கள் என நான்கு பிரிவாக அமையவுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் கிளிநொச்சி வலயமட்டத் தொடர்களில் பங்குபற்றுவதற்காகத் தெரிவு செய்யப்படும். (ம-405)

## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் மைதானத்தில் நடை பெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் ப.வாசுகியின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் கோண்டாவில் கிளையின் முகாமையாளர் றமேஸ் நேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

## வலைப்பந்தாட்ட பரீட்சைகளில் சித்தியடைந்தோர் விவரங்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் கடந்த டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி நாடு முழுவதும் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட எழுத்துப்பரீட்சையில் (ஏ, பி, சி தர நடுவர்களுக்கான) யாழ். மாவட்ட பரீட்சை நிலையத்தில் தோற்றிய பரீட்சார்த்திகளில் சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு:-

'ஏ' தர பரீட்சையில் ஜி.உதயதர்சினி, எஸ்.மனோன்மணி, எஸ்.மைதிலி, என்.மதியழகன் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். 'பி' தர பரீட்சையில் எஸ்.ஶ்ரீசக்தி, கே.கஜேந்திரன், ரி.இன்பதாசன், எஸ்.பிரேமலதா, வி.கௌதமி, எஸ்.சஞ்சயன், பி.நளாயினி, எஸ்.பானுஜா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். 'சி' தர பரீட்சையில் எம்.நிதர்சன், கே.கோபிகா, ரி.பிரதீபன், எஸ்.சகிர்தன், என்.வசீகரன், ஜே.ஆர்.சுசி, எஸ்.பிரசாந்தினி, எஸ்.சிந்துஜா, வை.சுதாகர், எஸ்.பிரபாகரன் ஆகியோர் சிந்தியடைந்துள்ளனர். இதில் பி,சி தர நடுவர்களுக்கான எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான செயன்முறைப்பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமை வவுனியா கல்வியியற் கல்லூரி மைதானத்தில் காலை 8.30மணிக்கு இடம் பெறவுள்ளது. (ம-86-23)



# செரீனா தொடர்ந்தும் முதலிடத்தில் நேற்று வெளியானது தரப்படுத்தல்

சர்வதேச ரென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவு தரப்படுத்தல் நேற்று வெளியிடப்பட்டது. செரீனா வழக்கம்போல முதலிடத்தில் தொடர்கிறார்.


சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் தனது பெண்கள் பிரிவு தரப்படுத்தலை நேற்று வெளியிட்டது. இரண்டாம் இடத்தில் உள்ள வீராங்கனையை விட கிட்டத்தட்ட இன்னொரு மடங்கு புள்ளிகள் அதிகம் பெற்று அவர் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார். கெர்பர் இரண்டாம் இடத்தில் உள்ளார். செரபோவா இம்முறையும் முதல் ஐந்து இடங்களுக்குள் இடம்பெறவில்லை.

இதன்படி செரீனா வில்லியம்ஸ் 9ஆயிரத்து 245 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கெர்பர் 5ஆயிரத்து 700 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், ரட்வன்ஸ்கா 5ஆயிரத்து 210 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், கேலெப் 4ஆயிரத்து 745 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், முருகுசா 4ஆயிரத்து 642 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். ஆறு தொடக்கம் பத்து வரையான இடங்களுக்குள் முறையே செரபோவா, பென்சிச், கிவித்தோவா, பென்னட்டா, வின்சி ஆகியோர் உள்ளனர்.

கட்டார் ரென்னிஸ் தொடரில் இருந்து காயம் காரணமாக விலகியுள்ள செரீனா வில்லியம்ஸ், அடுத்த சில தொடர்களிலும் தனது பங்குபற்றலை கேள்விக்கு உட்படுத்தியுள்ளார். இதனால் அவர் தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் வரை விலகும் பட்சத்தில் அவரது முதலிட சிம்மாசனம் பறிபோகும் நிலையும் ஏற்படலாம். (ம)

## சென்னையுடனான உறவு விவரிக்க முடியாததொன்று

**– ஜடேயா**




சென்னை அணியுடனானதும், சென்னை மக்களுடனானதுமான உறவு வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாதது என்று உருக்கமாகத் தெரிவித்துள்ளார் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான ஜடேயா.

சென்னை அணியின் மிகமுக்கியமான வீரர்களில் ஜடேயாவும் இடம் பெற்றிருந்தார்

சென்னை அணிக்கு விதிக்கப்பட்ட தடையைத் தொடர்ந்து குஜராத் லயன்சின் வீரராக அவர் மாறியுள்ளார். இந்நிலையில் சென்னை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜடேயா இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். மேலும் தெரிவிக்கையில்; - ஐ.பி.எல். தொடர் ஆரம்பிக்கப்பட்டது முதல் நான் சென்னைக்காக விளையாடவில்லை. ஆனால், நான் விளையாடிய அணிகளில் சென்னைதான் சிறந்தது என்று தயங்காமல் சொல்வேன். அற்புதமான கூட்டுச்சேர்க்கை அது.

அந்த அணியுடனானதும், சென்னை மக்களுடனானதுமான உணர்வு வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. டோனிக்கு எதிராக விளையாடுவது அற்புதமானதாகவும் முற்றிலும் வேறுபட்ட அனுபவமாகவும் இருக்கும்- என்றார். (ம)

## அல் மாதருக்கு வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 27

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் அல் மாதர் அணி வெற்றிபெற்றுள்ளது.

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங் குளம் யங்ஸ்ரார் விளை யாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்தபுதன்கிழமைஇரவு7மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் சுப்பர் ஸ்ரார்அணியைஎதிர்த்து அல்மாதர் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## அம்பாள் அபாரம்

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் தாவடிகாளி அம்பாள் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளி அம்பாள் அணி 8:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## அரியாலையின் தொடர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப். 27

அரியாலையின் 97 ஆவது சுதேச திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடப்பு வருடத்துக்கான சில தொடர்கள் நடைபெறவுள்ளன.

5 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரும், கரப்பந்தாட்டத் தொடரும் யாழ். மாவட்ட ரீதியிலான தொடர்களாகவும், கரப்பந்தாட்டம் (ஓவர்கேம்), ஆண்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடர், பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடர் போன்ற சில தொடர்கள் உள்ளூர் அணிகளுக்கு இடையிலும் நடத்தப்படவுள்ளன.

எனவே தொடர்களில் பங்குபற்ற விரும்புவோர் ஏற்பாட்டுக் குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுண்டுக்குளி மகளிர், பாசையூர் சென். அன்ரனிஸ் யாழ்.கோட்ட வலைப்பந்தாட்டத்தில் சம்பியனாகின

மாங்குளம், பெப். 27

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுப்பிரிவில் பாசையூர் சென். அன்ரனிஸ் றோ.க.பாடசாலை அணியும் 17 வயது, 19 வயதுப் பிரிவுகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணிகளும் கிண்ணங் களைக் கைப்பற்றியுள்ளன.

குறித்த இறுதியாட்டங்கள் நேற்று பாசையூர் புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் றோ.க. பாடசாலையை எதிர்த்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் றோ.க.பாடசாலை அணி 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. 3ஆம் இடத்தை வைத்தீஸ்வராக் கல்லூரி அணி பெற்றது. 17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் றோ.க.பாடசாலை அணியை எதிர்த்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி 20:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. 3ஆம் இடத்தை வைத்தீஸ்வராக் கல்லூரி அணி பெற்றது. 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து பாசையூர் புனித றோ.க.பாட சாலை அணி மோதியது. இதில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி 23:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. 3ஆம் இடத்தை வேம்படி மகளிர் கல்லூரி அணி தனதாக்கியது.

(ம-23-422)







## தென்மராட்சி வலய எல்லே தொடர்கள்

சாவகச்சேரி, பெப், 27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கான எல்லே தொடர்கள் எதிர்வரும் இரண்டாம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (ம-9)

## சங்கானை பிரதேச செயலகத்தின் எல்லே, கரப்பந்தாட்டத் தொடர்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரும் கரப்பந்தாட்டத் தொடரும் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன. ஆண்களுக்கான எல்லே தொடர் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்திலும் பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் வட்டுக்கோட்டை இளைய நட்சத்திர விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.(ம-23)

## சந்தேகத்தில் சிடிலின் எதிர்காலம்



ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான பீற்றர் சிடிலின் எதிர்காலம் குறித்துச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. அவரது முகுதுப் பகுதியில் ஏற்பட்டுள்ளஉபாதை காரண மாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில் விளையாடிய பீற்றர் சிடில், முதல் இன்னிங்ஸில் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆனால், இரண்டாவது இன்னிங்ஸில் அவரது முதுகில் உபாதை ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் பவிலியனில் உட்கார வேண்டிய நிலை ஏற்பட்டது. உபாதை குணமடையாத நிலையில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் அவர் பங்குபற்றியிருக்கவில்லை. சிடிலின் முகுதுப் பகுதியில் ஸ்கான் மேற்கொண்டதைத் தொடர்ந்து, அவரது கீழ் முகுதுப் பகுதியில் என்புடைவு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நீண்ட காலம், அவரால் தொடர்களில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது 31 வயதான பீற்றர் சிடில், நீண்ட காலத்தை கிரிக்கெட்டில் விளையாடாது கழிக்கவுள்ள நிலையில், ஆஸ்திரேலியாவில் காணப்படும் வேகப்பந்து வீச்சாளர்களது அதிகரித்த எண்ணிக்கை காரணமாகவும் அவர்களின் திறமை காரணமாகவும், சர்வதேச கிரிக்கெட்டில் சிடில் மீண்டும் பங்குபற்றாது போனாலும் ஆச்சரியத்துக்குரியது அல்ல எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## பிளாட்டர், பிளாட்டினி குற்றவாளிகள் மேன்முறையீட்டிலும் உறுதியானது

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் செப் பிளட்டர், முன்னாள் உப தலைவரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சம்மேளனங்களின் சங்கத்தின் முன்னாள் தலைவருமான மைக்கல் பிளாட்டினி இருவருக்கும் எதிராக சுமத்தப்பட்ட மோசடிக் குற்றம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தண்டனை குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர்களை நடத்துவதற்காக வழங்கிய உரிமம், ஒளிபரப்பு உரிமம் ஆகியவற்றில் பிளாட்டர், பிளாட்டினி கோடிக் கணக்காக மோசடி செய்ததாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் அவர்களது குற்றம் உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் இருவருக்கும் தலா 8 வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து பிளாட்டர், பிளாட்டினி இருவரும் மேன்முறையீடு செய்தனர். மேன்முறையீட்டின் தீர்ப்பிலும் இருவரதும் குற்றங்கள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால்8 வருடங்களாக இருந்த இந்தத் தடை 6 வருடங் களாக குறைக்கப்பட்டுள்ளது. (ம)





## சிகா வைரஸின் தாக்கத்தை தகர்த்து அரங்கேறும் ரியோ ஒலிம்பிக் தொடர்

### உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் தெரிவிப்பு

சிகா வைரஸால் ஆபத்து ஏற்பட்டுள்ள போதிலும் இந்த ஆண்டு பிரேசிலில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் தொடர்கள் பாதுகாப்பாக நடைபெறுமென்ற எதிர்பார்ப்பை உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் மார்கிரெட் சான் வெளியிட்டுள்ளார்.

நுளம்புகள் மூலம் பரவும் சிகா வைரஸ் பிரேசில், அமெரிக்கா போன்ற நாடுகளில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து குறித்த வைரஸை பரப்பும் நுளம்புகளை ஒழித்து இயல்பு நிலையை மீட்டெடுக்க, உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச ஒலிம்பிக் இயக்கம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுடன் பிரேசில் அரசாங்கம் இணைந்து செயற்பட்டு வருகிறது. இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில் சிகா வைரஸால் ஒலிம்பிக் தொடருக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் எனக் கருதப்பட்டது. ஆனால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் மார்கிரெட் சான் ரியோ ஒலிம்பிக் பாதுகாப்பாக அரங்கேறும் என வெளிப்படுத்தியுள்ளார்.

வைரஸைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மார்கிரெட் சான் ரியோ ஒலிம்பிக் தொடர் பாக கருத்துத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் - பிரேசில் அரசின் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றேன். சிகாவுக்கு எதிராக சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்துகிறது. இந்தப் போராட்டத்தில் பிரேசில் வெற்றிபெறும் காலம் வெகுதூரத்தில் இல்லை. ஒலிம்பிக் தொடர்களுக்காக பிரேசிலுக்கு விருந்தினராகவோ, பங்குபற்றுநராகவோ அல்லது விளையாட்டு வீரராகவோ செல்லும் அனைவரது பாதுகாப்பையும் பிரேசிலால் உறுதிப்படுத்த முடியம் என்பதை முழுவதுமாக நம்புகிறேன். சிகாவின் தாக்கத்தைத் தகர்த்து திட்டமிட்டபடி அரங்கேறும் ஒலிம்பிக் தொடர்- என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு இராச்சியத்தை சுருட்டியது பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களின் சிறப்பான செயற்பாட்டால்



நடைபெற்றுவரும் ஆசியக்கிண்ணத் தொடரில், பங்களாதேஷ்-ஐக்கிய அரபு இராச்சிய அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் 51 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஐக்கிய அரபு இராச்சியம் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. நேற்றுமுன்தினம் இலங்கையுடன் விளையாடிய அனுபவம் கைகொடுக்க, ஐக்கிய அரபு இராச்சியத்தின் பந்துவீச்சும் களத்தடுப்பும் கச்சிதமாகவே அமைந்தது. அடித்தாடும் எண்ணத்தைக்கைவிட்டு நிதானத்தில் நகர்ந்து கொண்டிருந்தனர் மிதுனும் சர்கரும். சிறிது அடித்தாட ஆரம்பித்தார் சர்கர். 21 ஓட்டங்களுடன் முதல் நபராக பவிலியனில் உட்காரவும் செய்தார். ரகுமான், ரகிம் இருவரும் ஒற்றை இலக்கங்களுடன் ஆட்டமிழக்க மறுமுனையில் மிதுனின் நிதானம் அதிகமாகி பங்களாதேஷின் சராசரி சடுதியாக வீழ்ச்சி கண்டது. 13 ஓட்டங்களுடன் கசனை வெளியேற்றினார் யாவிட். 47 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் மிதுன். 18ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பங்களாதேஷின் நிலைமை 112-5. நுருல் கசன், மோர்ரசா அடுத்தடுத்து டக்குடன் வெளியேறினாலும் பின்வரிசையில் நம்பிக்கை கொடுத்தார் முகமதுல்லா. 20 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் பங்களாதேஷ் 133-8. முகமதுல்லா 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பந்துவீச்சில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்பாக நவீட், யாவீட் இருவரும் தலா இரு இலக்குகளையும், செசாட், முஸ்தபா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் ஆரம்பம் சோதனையாகவே அமைந்தது. முதல் பந்துப்பரிமாற்றத்தில் ஓர் ஓட்டத்தை மட்டுமே ஐக்கிய அரபு இராச்சியத்தால் எடுக்க முடிந்தது. அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார் அரபு இராச்சியத்தின் அதிரடி வீரராக அறியப்பட்ட கலீம். ஆமை வேகத்தில் நகர்ந்தது அந்த அணியின் சராசரி. 18 ஓட்டங்களுடன் முஸ்தபாவையும் ஓர் ஓட்டத்துடன் அன்வரையும் வெளியேற்றினார் மோர்ராசா. செசாட்டும் ஆட்டமிழக்க அரபு இராச்சியம் 34-4. பங்களாதேஷின் வெற்றி படிப்படியாக உறுதியாகிக்கொண்டிருந்தது. உஸ்மன் நிலைத்து நின்றார் இருப்பினும் இலக்கை எட்டக் கூடிய பெறுபேற்றை வெளிப்படுத்த வில்லை. 30 பந்துகளில் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதி நம்பிக்கையான அணித்தலைவர் ஜாவீட்டும் அணியைக் கைவிட பின்வரிசை வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். முடிவில் 82 ஓட்டங்களில் சுருண்டு 51 ஓட்டங்களால் தோல்வியடைந்தது ஐக்கிய அரபு இராச்சியம்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக அகமட், ரகுமான், மோர்ரசா, முகமதுல்லா நால்வரும் தலா இரு இலக்குகளையும், அல் அமின் ஹுசைன், சகிப் அல்கசன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக முகமதுல்லா தெரிவானார். (ம)




# டுபாய் தொடரிலிருந்து விலகினார் ஜோகோவிக்

டுபாய் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்திலிருந்து, கண்ணில் ஏற்பட்ட பார்வைக் கோளாறால் ஜோகோவிக் பாதியிலேயே விலகியுள்ளார்.

காலிறுதி ஆட்டத்தில், உலகின் முதல் தர வீரரான சேர்பியாவின் ஜோகோவிக், ஸ்பெயினின் லோபஸை எதிர்த்து மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 3:6 என்ற கணக்கில் ஜோகோவிக் இழந்தார். ஜோகோவிக்கின் கண்ணில் ஏற்பட்ட குறைபாட்டை அடுத்து அவர் பாதியில் விலகுவதாக அறிவித்தார். இதனால் லோபஸ் அரையிறுதிக்கு முன்னேறினார். (ம)



**MBBS DOCTOR**

There are Vacancies in following Countries recognized; registered **English medium** Medical Colleges for the 2016 in take

Minimum A/L Qualification **2C S**

- Russia
- China
- Malaysia

**New Zealand Study and live**

Study now and become a New Zealand Citizen. Various courses in Various recognized Colleges and Universities.

**Ashokavatika**
49-51, Amman Road,
Nallur, Jaffna.
TP.No: 0777 360 353,
0777 340 026

(69628)(10.17.2)

## உருத்திரபுரம் ம.வியின் அரையிறுதிகளும், இறுதியும்

யாழ்ப்பாணம், பெப். 27

கிளிநொச்சி-உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், குறித்த வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியரும் பிரதி அதிபருமான திருமதி சந்திரகாந்தன் கமலாவதி ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மகாஜனக் கல்லூரி, சென்.ஹென்றிஸ், சென்.லூட்சியா, முழங்காவில் ம.வி. அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட இந்தத் தொடரின் அரையிறுதி ஆட்டங்களும் இறுதி ஆட்டமும் இன்று சனிக்கிழமை கிளிநொச்சி-உருத்திரபுரம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதன்படி காலை 8 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மகாஜனக்கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மன்னார் சென்.லூட்சியா மகா வித்தியாலய அணியை எதிர்த்து முழங்காவில் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. இறுதி ஆட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. நிகழ்வுக்கு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## கரவெட்டி பிரதேச செயலக கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 27

கரவெட்டி பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடர் இன்றும், துடுப்பாட்டத் தொடர் நாளையும் இடம்பெறவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள கரப்பந்தாட்டத் தொடர்களில், பெண்களுக்கான தொடர் உடுப்பிட்டி சிவகுமார் மைதானத்திலும் ஆண்களுக்கான தொடர் இமையாணன் இளைஞர் கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளன. ஆட்டங்கள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நாளை இடம்பெறவுள்ள பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடர் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 9மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ம-422)



பிரபல பத்திரிகை ஒன்று ஆசியக் கண்டத்தில் மதிப்பு மிக்க இளைஞர்களைப் பட்டியலிட்டதில் இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் கோக்லி முதலிடம் பிடித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2016 இல் ...டு வெளியிடப்பெற்றது.